www.tamilarangam.net


# களத்தில்


**கவிதை மூலை**

அன்னை அங்கு அவலம்
உடன் பிறந்தோர் ஓலம்
தின்னப் பிறந்த தமிழன்
இன்னுமிருப்பான் சும்மா!

- சுடு கவி

திருவள்ளுவர் ஆண்டு 2026 துலாம் 15 (01.11.1995) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வருஞ் செய்தித் தாள் 40p

# வலிகாமத்தில் கடும் மோதல்கள்

# சிறீலங்கா இராணுவத்துக்குப் பெரும் இழப்புகள்

**யாழ். குடாநாட்டின் மீது 'சூரியப் பிரகாசம்" என்ற குறியீட்டுப் பெயருடன் தமிழின அழிப்பில் இறங்கியுள்ள சிறீலங்கா இராணுவம், விடுதலைப் புலிகளின் எதிர்த்தாக்குதல்களினால் பெரும் இழப்புக்களுக்கு உள்ளாகித் தடுமாறிக் கொண்டிருக்கிறது.**

இராணுவ ரீதியாகத் தமக்கே ற்படும் பாரிய இழப்புக்களைப் பற்றிய விபரங்கள் வெளிவராத வாறு சிறீலங்கா அரச செய்தித் தணிக்கை மூலம் மூடிமறைப்பதில் மூச்சாகவுள்ளது.

## மாதகல், அளவெட்டிப் பகுதியில் கடும் மோதல்கள்

மாதகல் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் சிறீலங்கா இராணுவத்திற்கும் இடையில் 27.10.95 அன்று சுமார் 1 மணிநேரம் மோதல் இடம்பெற்றது. அள வெட்டிப் பகுதியில் அதிகாலை 2 மணியிலிருந்து விடியற்காலை 6 மணி வரை மோதல்கள் இடம்பெற்றுள்ளன. இத்தாக்குதலில் சிறீலங்கா இராணுவம் பலத்த இழப்புக்களைச் சந்தித்தது. அத்துடன், சரமாரியான துப்பாக்கிப் பிரயோகத்தையும், கண்மூடித்தனமான எறிகணை வீச்சுக்களையும் இம்மோதலில் மேற்கொண்டதாகத் தளச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, புத்தூருக்கும் சிறுப்பிட்டிக்கும் இடையில் பல மணி நேரமாகச் சண்டை இடம்பெற்றதாகவும் தெரியவருகின்றது. சிறீலங்கா இராணுவத் தரப்புப் பற்றிய சேதவிபரம் தெரியவரவில்லை. இரண்டு நாட்களில் வலிகாமம் பகுதியில் நடைபெற்ற சண்டைகளின் போது விடுதலைப் புலிகள் தரப்பில்

தொடர்ச்சி : 12 ஆம் பக்கம்

# அரியாலையில் அகோரக் குண்டு வீச்சு

26.10.95 அன்று காலை 6.35 மணியளவில், சிறீலங்கா வான் படையின் 'சுப்பர்சொனிக்' விமானம் அரியாலை நாவலடிப் பகுதியில் நடாத்திய கோரவெறிக் குண்டுத் தாக்குதலில் 10 அப்பாவிப் பொது மக்கள் அந்த இடத்திலேயே உடல்சிதறிப் பலியாகினர். மேலும் 12 பேர் படுகாயங்களுக்கு உள்ளாகினர். 11 பேர் சிறுகாயங்களுக்கு உள்ளாகினர்.

காலை 6.35 மணியளவில் குடாநாட்டு வான்பரப்பில் திடீரென்று நுழைந்த சிறீலங்காவின் சுப்பர் சொனிக் விமானம் மிகவும் உயரப் பறந்த நிலையிலேயே அரியாலை நாவலடிப் பகுதி மக்கள் குடியிருப்புக்கள் மீது குண்டுகளை வீசியது. அடுத்தடுத்து வீசப்பட்ட 4 குண்டுகளில் 2, குடிமனைகளுக்கு மத்தியிலும், மற்றைய இரண்டும் இடம்பெயர்ந்தோர் முகாமிற்கு அண்மையிலும், வயல் வெளியிலும் வீழ்ந்து வெடித்துள்ளன. குடிமனையில் வீழ்ந்த குண்டுகளினால் 10 பேர் பலியாகினர். கொக்குவிலைச் சேர்ந்த புது மணத் தம்பதிகள் சுப்பர் சொனிக்

தொடர்ச்சி : 12 ஆம் பக்கம்

# மட்டக்களப்பில் கண்ணிவெடித் தாக்குதல்

மட்டக்களப்பின் நகரப்புறம் மயிலம்பாவெளி எனும் இடத்தில், உழவு இயந்திரத்தில் ரோந்து சென்று கொண்டிருந்த சிறீலங்கா இராணுவத்தினர் மீது, விடுதலைப் புலிகள் நடாத்திய கண்ணிவெடித்தாக்குதலில் 5 இராணுவத்தினர் அவ்விடத்திலேயே கொல்லப்பட்டனர். அவர்கள் சென்ற உழவு இயந்திரமும் சிதறடிக்கப்பட்டதாகத் தளச்செய்திகள் தெரிவிக்கின்றன. 25.10.95 அன்று பிற்பகல் 6 மணியளவில் நடைபெற்ற இத்தாக்குதலில் புலிகள் தரப்பில் எதுவித இழப்புக்களும் ஏற்படவில்லை. ஏ.கே ரக துப்பாக்கி 2, மகசின் 2, ஜஎம்ரவை 60 போன்ற

தொடர்ச்சி : 12 ஆம் பக்கம்



## ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான தூதரக அதிகாரி யாழ் குடாநாட்டின் இன்றைய நிலைமைபற்றிக் கருத்து

"யாழ். குடாநாட்டில் சிறீலங்காவின் இராணுவ நடவடிக்கையால் பொது மக்கள் படும் இன்னல்கள் பற்றி எமது தலைமையகத்திற்கு உடனுக்குடன் அறிவிக்கவுள்ளோம்" இவ்வாறு தற்போது யாழ் சென்றுள்ள அகதிகளுக்கான ஐக்கிய நாடுகளின் தூதரக அதிகாரியான திரு சவியோ வரோலி தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், "குடாநாட்டில் சிறீலங்கா அரசின் தாக்குதலினால் கொல்லப்பட்டும், படுகாயமடைந்தும் வரும் பொது மக்களைப் பற்றியும், ஆயிரக்கணக்கான மக்கள் தமது

தொடர்ச்சி : 12 ஆம் பக்கம்

## கொழும்பில் எண்ணெய்க் களஞ்சியங்கள் மீது தாக்குதல்கள்

கடந்த 20.10.95 அன்று வெள்ளிக்கிழமை அதிகாலை கொழும்புக்குக் கிழக்கேயுள்ள கொலன்னாவையிலும் அதற்கு அப்பாலுள்ள உறுகொடவத்தையிலும் இருந்த பாரிய எண்ணைக்குதங்கள் தாக்கப்பட்டமை பற்றி, இன்று சிங்களத் தலைமைகள் மத்தியில் பெரும் பீதியும் பரபரப்பும் ஏற்பட்டுள்ளது. இலங்கை முழுவதுக்குமான மண்ணெய், டீசல், மசகு எண்ணெய் ஆகிய. பொருட்கள் இங்குதான் சேர்த்துவைக்கப்பட்டு, சுத்திகரிக்கப்பட்டு, விநியோகிக்கப்பட்டு வந்தது. இப்பகுதி 10 வலயங்களாகப் பிரிக்கப்பட்டு, அங்கு 2,000 தொடக்கம் 10,000 தொன்களைக் கொள்ளக்கூடிய பிரமாண்டமான குதங்கள் இருந்ததாகச் சொல்லப்படுகிறது.

தொடர்ச்சி : 18 ஆம் பக்கம்

## ஐ.நா.முதல் ஐரோ. பா. மன்றம்வரை தமிழர்கள் எழுச்சிப் பேரணி

நியூயோர்க் நகரிலுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகம் முன்பாக 22.10.95 அன்று ஞாயிறு, 6000க்கும் அதிகமான தமிழ்மக்கள் ஒன்றுதிரண்டு தமிழீழத்தில் வாழும் தமது உடன் பிறப்புக்களுடனான உறுதிப்பாட்டை வெளிப்படுத்தியதுடன், தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தையும் தமிழீழ விடுதலைப் புலிகளையும் அங்கீகரிக்குமாறும் ஆர்ப்பரித்தனர்.

ஐக்கியநாடுகள் சபையின் 50வது ஆண்டு பொன்விழாவில் கலந்து கொள்ளவென அங்குவந்த அனைத்துலக நாடுகளின் பிரதிநிதிகளும் இதனைக் கண்டு கொண்டனர். அமெரிக்காவிலும், கனடாவிலும் வாழும் தமிழர்கள் இவ் ஆர்ப்பாட்டத்தைக் ஒழுங்கு செய்தனர். இவர்களுடன், ஏனைய 30 அமைப்புக்கள் நடாத்திய இவ் ஆர்ப்பாட்ட ஒன்றுகூடலே அமெரிக்காவில் தமிழர்கள் நடாத்திய பேரணிகளில் எண்ணிக்கையில் கூடுதலாக இருந்தது. இச்சமயம் பொன்விழாவில் கலந்துகொள்ளவென அங்குவந்த சிறீலங்காவின்

தொடர்ச்சி : 12 ஆம் பக்கம்

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## முல்லைக் கடற்சமரில்

# 19 படையினர் கொல்லப்பட 170 படையினர் காயமடைந்தனர்

முல்லைத்தீவு கடற்பரப்பில் தரையிறங்கு கப்பல் மற்றும் டோறாப் படகுகள் மீது, அண்மையில் விடுதலைப்புலிகள் நடத்திய தாக்குதலின்போது நான்கு கடற்படையினர் உட்பட 19 படையினர் கொல்லப்பட்ட தாகவும் 170 படையினர் படுகாயமடைந்ததாகவும் தெரியவந்துள்ளது.

கடந்த வாரம் யாழ் குடாநாட்டின் பல்வேறு முகாம்களிலிருந்தும் லீவில் வீடு செல்லும் 400 இராணுவத்தினரை ஏற்றிக் கொண்டு சென்று கொண்டிருந்த சிறீலங்கா கடற்படையின் 'ரணகஜ' என்ற பெயர் கொண்ட தரையிறங்கு கப்பல், முல்லைத்தீவுக் கடலில் இருந்து 14 கடல் மைல் தொலைவில் வைத்து கடற் கரும்புலித் தாக்குதலுக்கு உள்ளானது. இச் சம்பவத்தில் 4 கடற்படையினரும் 15 இராணுவத்தினரும் பலியாகினர். 170 பேர் காயமடைந்தனர்.

இத் தரையிறங்கு கப்பலுக்குப் பல பீரங்கிப்படகுகள் காவலாகச் சென்றன. பலாலி, பூநகரி, ஆனையிறவு, முல்லைத்தீவு, மன்னார், தீவகப் பகுதி முகாம்களின் பிரதான உயிர் நாடியாக இருக்கும் இத்தரையிறங்கு கப்பல்களைத் தாக்க புலிகள் முயற்சிக்கின்றனர். தரையிறங்கு கப்பல்கள் ஒன்றிரண்டை மூழ்கடிப்பதன் மூலம், வடபகுதி மீதான பாரிய இராணுவ நடவடிக்கையைப் பல மாதங்களுக்குப் பின் தள்ளி வைக்க முடியும் என்பதைப் புலிகள் நன்குணர்ந்துள்ளனர் என சண்டே ஐலண்ட் மேலும் குறிப்பிட்டுள்ளது.

## அச்செழு, மாசியன் சந்தியில் கடுஞ்சமர்

- 110 இற்கு மேற்பட்ட இராணுவம் பலி
- 150 இற்கு மேற்பட்டோர் படுகாயம்
- 3 டாங்கி முற்றாக அழிப்பு
- 20 விடுதலைப்புலி வீரர்கள் வீரச்சாவு

அச்செழுவில்நிலைகொண்டிருந்த சிறீலங்கா இராணுவத்தினர், நீர்வேலியைக்கைப்பற்றும்நோக்கத்துடன்29.10.95ஞாயிற்றுக்கிழமை அன்று டாங்கிகள், கவச வாகனங்கள் ஆகியவற்றின் துணையோடு புறப்பட்ட போது, இவர்களை எதிர்கொண்ட விடுதலைப் புலிகள் மிகக் கடுமையான எதிர்த்தாக்குதலை மேற்கொண்டனர்.இத்தாக்குதலின்போதுஇராணுவத்தினர்பெரும் தொகையான எறிகணைகளை வீசிய வண்ணம் முன்னேற முயன்றனர். இக்கடும்சமரில் சுமார்110சிறீலங்காஇராணுவத்தினர் கொல்லப்பட்டும் 150 இராணுவத்திற்கு மேற்பட்டோர் காயமடைந்துமுள்ளனர்.இராணுவத்திற்கு துணையாக வந்த டாங்கி ஒன்று முற்றாகத் தாக்கியழிக்கப்பட்டது.விடுதலைப்புலிகள்தரப்பில்20 போராளிகள் வீரச்சாவடைந்தனர். தமிழீழ மண்ணைக் காக்கும் பணியில் வீரச்சாவடைந்தஇம்மாவீரர்களிற்கு எமது வீரவணக்கங்கள்.

இதேவேளைசிறீலங்காவிமானப்படை விமானங்கள் வலிகாமம், தென்மராட்சிப் பகுதிகள் மீது மேற்கொண்டகுண்டுவீச்சுத்தாக்குதலினால்பெண்கள்,குழந்தைகள்உட்பட27பேர் கொல்லப்பட்டு 60இற்குமேற்பட்டோர்காயமடைந்துள்ளனர்.தென்மராட்சிப்பகுதியிலேயே தற்போது இடம்பெயர்ந்த பெருமளவுமக்கள்தங்கியிருப்பதும், இப்பகுதியை 'பாதுகாப்பு வலயம்'ஆக்குவதற்கானவழிவகைகளைச்செய்யுமாறு,யாழ்ப்பாணத்திலுள்ளஅரசசார்பற்றநிறுவனங்களின்ஒன்றியம்,சர்வதேசசெஞ்சிலுவைச்சங்கத்திடமும்,ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர்ஸ்தானிகப்பிரதிநிதிகளிடமும்கோரிக்கைவிடுத்திருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

கண்மூடித்தனமானகுண்டுவீச்சுத்தாக்குதலாலும், அகோரமான எறிகணைத்தாக்குதல்களாலும், ஆயிரக்கணக்கான மக்கள் கொட்டு மழையிலும், தமது உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்கு பாதுகாப்பான இடம் தேடி நகர்ந்தவண்ணம் இருந்தனர்.

## செஞ்சிலுவைச் சங்கத்தின் பாதுகாப்பு வலயத்துள்ளும் எறிகணைவீச்சு

போதனா வைத்தியசாலையின் பாதுகாப்பு வலயத்தில் தஞ்மடைந்து இரவுப் பொழுதைக் கழித்தனர். ஆனால் தற்போது பாதுகாப்பு வலயத்துக்குள்ளேயே சிறீலங்கா இராணுவத்தினர் ஏவும் எறிகணைகள் வீழ்ந்ததைத் தொடர்ந்து மக்கள் செய்வதறியாது நிற்கின்றனர்.

படுகாயமடைந்தவர்கள் விபரம் வருமாறு:- சுகாம்பிள்ளை (45) கொட்டடி, மயூரன் (15) கொட்டடி, தர்மரத்தினம் (30) கொட்டடி, ராஜசுந்தரம் (22) கொக்குவில், கிருபாகரன் (32) கொக்குவில், உசாகினி (24) கொக்குவில், பெருமாள் பாக்கியம் (56) கொக்குவில்.

இதேவேளை, மண்டைதீவுப் பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினரால் குருநகர் கடற்கரை வீதி மீது 26.10.95 இல் நடாத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டின்போது காயமடைந்த 65 வயதுடைய திரேசம்மா, 27.10.95 அன்று யாழ். போதனா வைத்திய சாலையில் மரணமானார்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரால் பிரகடனப்படுத்தப்பட்ட யாழ். போதனா வைத்தியசாலைப் பகுதிகளிலும் பலாலி இராணுவ முகாமில் இருந்து ஏவிய 'ஆட்டிலறி' எறிகணைகள் விழுந்து வெடித்தன. 26.10.95 இரவு 10.30 மணியளவிலேயே அவ் எறிகணைகள் வீழ்ந்து வெடித்தன. எறிகணைகள் மருத்துவமனையைத் தாக்கியதைத் தொடர்ந்து 1ஆம், 2ஆம் பிரிவு நோயாளிகள் தங்குமிடங்களில் இருந்து நோயாளிகள் அவசர அவசரமாக வெளியேற்றப்பட்டனர்.

இதேவேளை, பலாலி இராணுவ முகாமில் இருந்து கொக்குவில், கொட்டடிப்பகுதியை நோக்கி ஏவப்பட்ட எறிகணைத் தாக்குதலினால் 7 பேர் படுகாயமடைந்தனர். அடுத்தடுத்து ஏவப்பட்ட எறிகணைகள் மேற்படி பகுதிகளில் வீழ்ந்து பாரிய சத்தத்துடன் வெடித்தன. இதனைத் தொடர்ந்து இப்பகுதி மக்கள் பாதுகாப்பிற்காக யாழ்.

## வெவ்வேறு சம்பவங்களில் மூன்று போராளிகள் வீரச்சாவு

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த காட்டைக்காடு இராணுவ முகாமருகிலிருந்த மினி முகாம், கடந்த மாதம் 6ஆம் திகதி விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்ட சமரில் விழுப்புண் அடைந்த போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த 2ஆம் லெப். ஈழவேந்தன் (இராமலிங்கம் விமலநாதன்-மட்டக்களப்பு) எனும் போராளிக்கு விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

இவரது வித்துடல் மட்டு மாவட்டம் வாகரையில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பூரண இராணுவ மரியாதைகளுடன் கள்ளவடி மாவீரர் துயிலும் இல்லத்தில் விதைக்கப்பட்டது.

மட்டு மாவட்டத்தில் கடந்த மாதம் 4ஆம் திகதி இடம்பெற்ற தவறுதலான வெடிவிபத்தின் போது, விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த 2ஆம் லெப். அன்பரசன் அல்லது தீசன் (உருத்திரன் சச்சிதானந்தன்-மட்டக்களப்பு) இவருக்கு விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

மட்டு மாவட்டம் கல்லிச்சை வடமுனைப் பகுதியில் கடந்த மாதம் 6ஆம் திகதி சிறீலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலின்போது, விழுப்புண் அடைந்த போராளி ஒருவர் வீரச்சாவடைந்தார்.

வீரச்சாவடைந்த வீரவேங்கை சூரியன் (அம்பலவாணன் சசிக்குமார்- மட்டக்களப்பு) இவருக்கு விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

## அச்செழுவிலேயே நிலைகொண்டுள்ள இராணுவம்

கடந்த 22.10.95 ஞாயிற்றுக்கிழமை அச்செழுவிற்கு வந்த ஆயிரக்கணக்கான இராணுவம் மாசியன் சந்தி நோக்கி டாங்கிகள், கவசவாகனங்கள் கொண்டு பெரிய எடுப்பிலான படைநகர்வை மேற்கொள்ள முயற்சி செய்தபோது, இராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட மிக உக்கிரமான எதிர்த்தாக்குதலில் சிறீலங்கா இராணுவத்தின் 3 டாங்கிகள் முற்றாக அழிக்கப்பட்டும், மேலும் 3 டாங்கிகள் பெரும் சேதத்திற்கும் உள்ளாகின. இச் சமரில் இராணுவத்தரப்பில் பெரும் உயிர்ச்சேதம் ஏற்பட்டதாக அறியவருகிறது. காலை சுமார் 8.30 மணியளவில் தொடங்கிய இச்சமர் மாலை 6 மணியைக் கடந்தும் தொடர்ந்தவண்ணமே இருந்தது. இம்மோதலின்போது பெருமளவில் கனரக பீரங்கிளும், கனரக இயந்திரத் துப்பாக்கிகளும் பயன்படுத்தப்பட்டன. சிறீலங்கா இராணுவம் தொடங்கிய 'சூரியபிரகாசம்' நடவடிக்கையில் இது வரை நடந்த மோதல்களுக்குள் இதுவே மிக உக்கிரமான மோதல் ஆகும். புலிகளின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்க முடியாத இராணுவம் தனது சகாக்களின் சடலங்களையும் களத்தில் விட்டுப் பின்வாங்கியதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இச்சமரில் விடுலைப் புலிகள் தரப்பில் 13 போராளிகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்.

வலிகிழக்கில் இதற்கு 3 நாட்களுக்கு முன் நடைபெற்ற மோதலில் 10 போராளிகள் வீரமரணமடைந்தனர். 19.10.95 அன்று காலை 10.00 மணியளவில் புன்னாலைக்கட்டுவன் பகுதியில் இருந்து அச்செழு பகுதியூடாக மாசிகன் நோக்கி முன்னேற முயன்ற இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலிலேயே இப்போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

22.10.95 அன்று புத்தூர், நவக்கிரி ஆகிய பகுதிகளில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினருடன் நடை-பெற்ற கடும் மோதல்களில் பன்னிரு போராளிகள் வீரச்சாவடைந்தனர்.

தாயக மண்ணைக் காட்கும் புனிதப்போரில் வித்துக்களாகி விட்ட இம் மாவீரர்களுக்கு எமது வீரவணக்கங்கள்.

22.10.95 ஞாயிறு அச்செழுவில் இருந்து மாசியன் பகுதிநோக்கி முன்னேற முயன்ற இராணுவம் துரத்தியடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, தற்போது அப்பகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவம் நிலைகுலைந்துள்ளது. 3 டாங்கிகளை இழந்தும் 3 டாங்கிகள் பெரும் சேதத்துக்குள்ளாகியும் ஏராளமான இராணுவத்தினர் கொல்லப்பட்டதையுமடுத்து, இராணுவத்தில் சீர்குலைவு ஏற்பட்ட நிலையில் பெரும் பொய்ப் பிரச்சாரப் போரில் சிறீலங்கா அரசு இறங்கியுள்ளது. அச்செழுவில் இருந்து நீர்வேலிக்கு சென்றுவிட்டதாகவும் 29 இராணுவத்தினரே இறந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளதோடு, யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் முயற்சியில் தங்கள் தரப்பில் 125 இராணுவத்தினர் கொல்லப்பட்டும், 400 பேர் காயப்பட்டும் உள்ளதாகவும் கூறுகின்றது. எனினும் இத்தொகை பலமடங்கு அதிகமாக இருக்குமெனவும், சிங்கள மக்களுக்கும் வெளி உலகத்திற்கும் உண்மையான தரவுகள் தெரியவரக்கூடாதென்பதில் சிறீலங்கா அரசு மிகவும் எச்சரிக்கையாக இருப்பதாகவும் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். இதேவேளை, சிறீலங்கா இராணுவத்தின் இந்த இராணுவ நடவடிக்கையே பன்னிரண்டு ஆண்டுகாலப் போரில் மிகப் பெரியது என ஏபி. செய்தி நிறுவனம் செய்தி வெளியிட்டுள்ளது.

கடைசியாகக் கிடைத்த தகவல்களின்படி, சிறீலங்கா இராணுவம் அச்செழுப் பகுதியிலேயே நிலைகொண்டிருப்பதைச் சிறீலங்கா அரசு ஒத்துக் கொண்டுள்ளது.

## "எத்தனை எத்தனை வித்துக்கள் வீழ்ந்தன"

### - நூல் வெளியீட்டுவிழா -

நவாலிப் படுகொலைகளின் 3ஆம் மாத நினைவாக நாவண்ணன் எழுதிய 'எத்தனை எத்தனை வித்துக்கள் வீழ்ந்தன' என்னும் நூல் வெளியீட்டு நிகழ்வு 10-10-95 இல் நவாலி சென் பீற்றர்ஸ் ஆலய முன்றலில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு முதுபெரும் எழுத்தாளர் அப்பச்சி மகாலிங்கம் தலைமை தாங்கினார்.

இந்நூல், 'முன்னோக்கிப் பாய்தல்' இராணுவ நடவடிக்கையின் போது சிங்களப்படைகள் செய்த கொடூரமான இனப்படுகொலை, அந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட நாட்களில் கொல்லப்பட்ட 239 மக்களினதும் நெஞ்சை உலுக்கும் கண்ணீர்க்கதைகள், கொல்லப்பட்டவர்களினது மட்டுமன்றி வேறு வகைகளிலும் பாதிப்புக்குள்ளான ஆயிரமாயிரம் மக்கள் பட்ட இன்னல்கள், துன்பங்கள் என்பவற்றைத் தாங்கியுள்ளது.

இந்நூல் வெளியீட்டு விழாவின் போது, அன்பளிப்புப் பிரதிகள் வழங்கல் நிகழ்வில் குடும்பம் குடும்பமாகக் கொல்லப்பட்ட மக்களின் நெருங்கிய இரத்த உறவினர்கள் அவற்றைப் பெற்றனர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# பொய்ப்பிரச்சாரங்கள்

சிறீலங்கா அரசானது அப்பட்டமான இனஅழிப்பு நடவடிக்கைகளை தமிழீழ மக்கள் மீது நடாத்திக் கொண்டு அதனைப் புலிகளுக்கெதிரான இராணுவ நடவடிக்கைகள் என உலகுக்குக் காட்டுவதற்காக அதற்கு முன்னோக்கிப் பாய்தல், கைகுலுக்கல், இடிமுழக்கம், சூரியப்பிரகாசம் எனக் குறியீட்டுப் பெயர்களைக் சூட்டி மகிழ்கின்றது. இந்த நடவடிக்கைகளை எதிர்த்து தமிழீழ மக்களின் தேசிய பாதுகாப்புக்குப் பொறுப்பான அரசு நோக்கிய அரசான விடுதலைப் புலிகள், தம் மக்கள் மேல் திணிக்கப்பட்ட போரை எதிர்த்து தீரமுடன் போராடி வருகின்றனர்.

சந்திரிகா அரசு தமிழ் மக்களையும் விடுதலைப் புலிகளையும் வேறுபடுத்திக் காட்ட முயன்றமை இந்த இனஅழிப்பு முயற்சிகளைத் தொடங்குவதற்கான தொடக்கச்சதியே. தற்பொழுது தமிழின அழிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் சந்திரிகா, தான் தமிழர்களுடன் அல்ல விடுதலைப் புலிகளுடனேயே போரிடுவதாகக் கூறி, தனது இராணுவ நடவடிக்கைகளுக்கு நியாயம் கற்பித்து வருகிறார். ஐந்து வயதுப் பாலகனும் ஏன் பால்குடி மறவாக் கைக்குழந்தையும் சந்திரிகாவால் இனப்படுகொலை செய்யப்பட்டு வருவது உலகறிந்த விடயம்.

சர்வதேச நாடுகளிடம் இருந்து பெற்ற நிதியுதவிகளைத் தனது படைப்பலத்தைப் பெருக்கப் பயன்படுத்திய சந்திரிகா, இதன்மூலம் சுடுதிறனை வளர்த்துவிட்டு இன்று அதைப் பயன்படுத்தி அப்பாவித் தமிழரை அழிக்கின்றார். சுடுதிறன் என்பது போரின் பொழுது பயன்படுத்தப்படும் 'ஆட்டிலறி" எறிகணைகள், பீரங்கிக்குண்டுகள், எறிகுண்டுகள், மோட்டார்க் குண்டுகள், துப்பாக்கி ரவைகள் போன்றவற்றின் பயன்படுத்தும் அளவைக் குறிக்கும். ஒரு தமிழ்க் கிராமத்தின் மீது பல்லாயிரக்கணக்கில் சுடுதிறனைப் பொழிந்துவிட்டு அதனால் அழியும் ஆண், பெண்கள், குழந்தைகள், வயோதிபரைக் கூட விடுதலைப் புலிகள் என உலகுக்கு எண்ணிக்கை காட்டுகின்றர்.

இதேவேளை, தமது இயலளவான சுடுதிறனைப் பாவித்து விடுதலைப் புலிகள் நடாத்தும் எதிர்த்தாக்குதலுக்கு நிலைகொள்ள முடியாமல் தமிழ் மக்களை அழிக்கும் இராணுவம் திணறிப் பின்வாங்கி வருகிறது. இதனால் ஒவ்வொருமுறையும் ஒவ்வொரு புதுப்புது பாதை களுடாக ஆக்கிரமிப்பு முயற்சிகளை மேற்கொள்ளும் சிறீலங்கா இராணுவம் பலத்த உயிர், உடமை இழப்புக்களைச் சந்தித்து வருகிறது. இவை வெளியே வராதவாறு செய்தித்தணிக்கையை அமுலாக்கி சிங்களவரி டம் இருந்து சந்திரிகா தப்பி வருகின்றார்.

தமிழீழ மக்கள் மீது, குறிப்பாக யாழ். குடாநாட்டு மக்கள் மீது உலகின் கவனம் திரும்புவதைத் தவிர்ப்பதற்காக இலங்கைத்தீவு முழுவதும் போர்நிலை காணப்படுவதாகக் கூறி தீவு முழுவதும் அவசரகால நிலையை நீடித்துள்ளது சந்திரிகா அரசு. இதன்மூலம் இனஅழிப்பினை இராணுவ நடவடிக்கையாகக் காட்டும் சிறீலங்கா தனது நியாயப்படுத்தலை மேலும் உறுதிப்படுத்த முயல்கிறது.
உண்மையில் இலங்கைத்தீவில் நடப்பது இராணுவ நடவடிக்கையல்ல, தமிழின அழிப்பே. முன்னர் எவ்வாறு பாராளுமன்றத்தில் பிரித்தானிய காலனித்துவ அரசினால் கொடுக்கப்பட்ட நிபந்தனையுடனான பெரும்பான்மை அதிகாரத்தைப் பயன்படுத்தி தமிழர்களின் அரசியல் உரிமைகளைப் பறித்து அதனை சட்டபூர்வம் எனக்கூறினார்களோ, அதேபோல இன்று சந்திரிகாவூடாக பௌத்த சிங்களப் பேரினவாதம் தமிழர்களின் உயிர்களை உடமை-களை அழித்து இனஅழிப்பு எனும் சர்வதேச குற்றச் செயலைச் செய்து கொண்டு அதனை இராணுவ நடவடிக்கை என பொய்ப்பிரச்சாரம் செய்கிறது.
எனவே உலகுக்கு இதில் உள்ள உண்மை நிலையைக் கண்டுணர வேண்டிய கடமை உண்டு. சர்வதேச அமைப்புக்கள் தமிழர்களின் உண்மைப் பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளுடன் பேசிச் சிக்கலைத் தீர்க்கவேண்டும். தமிழர்களின் வெளியக இறைமையை சர்வதேச உலகு மதித்து அவர்களுடன் தொடர்பு கொள்வது சர்வதேச சட்டங்களுக்கு ஏற்புடையதொன்றும் கூட. சிறீலங்கா அரசு, தமிழர்களின் உள்ளக இறைமையை அவமதித்துப் அவர்களின் உண்மைப் பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளுடன் பேசமறுத்து விசித்திரமான முறையில் வானிலிருந்து. துண்டுப் பிரசுரங்களைத் தமிழீழம் மீது போட்டு அகமகிழ்கிறது. குண்டா, துண்டா எனத்

# பழிவாங்கும் படலத்தில் இராணுவம்

விடுதலைப் புலிகளுடனான மோதல்களில் கண்டுவரும் இழப்புக்களைச் சகிக்க முடியாத சிறீலங்கா இராணுவம், குடியிருப்புப் பகுதிகளை நோக்கி கடும் எறிகணைத் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றது. நீர்வேலித் தெற்குக் குடியிருப்புப் பகுதியில் வீழ்ந்து வெடித்த எறிகணையால் ஒருவர் பலியானார். மூவர் படு காயமடைந்தனர். கந்தசாமி சிவலிங்கம் வயது 23 என்பவரே கொல்லப்பட்டவராவர். கொல்லப்பட்டவரின் சகோதரன் கந்தசாமி ஜோதிலிங்கம் வயது 17 படுகாயமடைந்தார். இவர்கள் இடைக்காடு அச்சுவேலியைச் சொந்த இடமாகவும் இருபாலையில் தற்சமயம் வசித்துவந்தவர்களுமாவர். மற்றும் இருபாலை கோப்பையைச் சேர்ந்த யோகராணி வயது 40, ஊரெழுவைச் சேர்ந்த ஐ. சின்னத்துரை வயது 50 காயமடைந்தவர்களாவர்.

18.10.95 அன்று ஊரெழுவில் இடம்பெற்ற குண்டுவீச்சுத் தாக்குதலில் விமானக் குண்டொன்று பதுங்குழியின் மேல் விழுந்ததில் இரு குடும்பத்தைச் சேர்ந்த தாய், தந்தை, பிள்ளைகள் உட்பட 15 பேர் உடல் சிதறிப் பலியாகியுள்ளனர். கணபதிப் பிள்ளை கிருஸ்ணமூர்த்தி வயது 39 என்பவரும் அவரது மனைவியும், 4 பிள்ளைகளும், வன்னித்தம்பி சின்னத்தம்பி வயது 48 என்பவரும் அவரது மனைவியும், 4 பிள்ளைகளும் மற்றும் தம்பித்துரை நிருசா வயது 9, தம்பித்துரை விஜிதா, புவனேஸ்வரன் கஜேந்திரன் வயது 9, நகுலேஸ்வரன் கிரிதா வயது 8 ஆகியோரே பலியானவர்களாவர்.

22.10.95 அன்று மாலை 8.30 மணிமுதல் பலாலி முகாமில் இருந்து வீசப்பட்ட எறிகணைகள் திருநெல்வேலி, கல்வியங்காடு, கோப்பாய், உரும்பிராய், ஊரெழு, நீர்வேலி மக்கள் குடியிருப்புக்கள் மீது வீழ்ந்து வெடித்தன. திருநெல்வேலிப் பாற்பண்ணைப் பகுதியில் வீழ்ந்து வெடித்த எறிகணையால் சின்னராசா சுலோசனா வயது 23 எனும் பெண்மணி தூக்கி வீசப்பட்டு அவ்விடத்திலேயே பலியானார். அதே இடத்தைச் சேர்ந்த சசிகரன் வயது 10, புனிதமணி வயது 45, சுரேகா வயது 9, வனிதா வயது 29, சண்முகம் 67 ஆகியோர் காயமடைந்தவர்களாவர். இவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வலிகிழக்கில் இடம்பெற்ற அகோர எறிகணைத் தாக்குதல்களினால் பல்லாயிரக்கணக்கான மக்கள் இடம்பெயர்ந்தனர். சிறீலங்கா இராணுவத்தால் தொடர்ந்தும் எரிகணைத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

22.10.95 அன்று மாலைவரை கோப்பாய், இருபாலை, கோண்டாவில், கட்டப்பிராய், உரும்பிராய், கரந்தன், கல்வியங்காடு பகுதிகளைச் சேர்ந்த மக்கள் குடும்பம் குடும்பமாக தமது உடமைகளில் கையில் அகப்பட்டதை எடுத்துக் கொண்டு பாதுகாப்பான இடங்களை நோக்கிச் சென்றனர். கால்நடையாகவும், சைக்கிள் களிலும் பல மக்கள், நல்லூர் மற்றும் யாழ் நகரத்தை அண்டிய பகுதிகளில் தஞ்சமடைந் துள்ளனர். மேலும் பலர் தென்மராட்சி நோக்கி இடம் பெயர்ந்துள்ளனர்.

## தென்மராட்சிப் பகுதியை பாதுகாப்பு வலயம் ஆக்குக!

இதேவேளை இடம்பெயரும் மக்கள் பாதுகாப்பாகத் தங்குவதற்குத் தென்மராட்சிப் பகுதியை உடனடியாகப் பாதுகாப்புப் பிரதேசம் ஆகப் பிரகடனம் செய்ய வேண்டும் என்று, யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியம், அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபைத் தூதரகம், சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் ஆகியவற்றைக் கேட்டுள்ளது. பாரிய இராணுவ நடவடிக்கைய சிறீலங்கா இராணுவம் நடத்தும்போது குடாநாட்டின் சகல மக்களும் இடம்பெயர வேண்டி ஏற்படும் எனவும், மக்கள் பாதுகாப்பாகத் தங்குவதற்கு தென்மராட்சிப் பகுதி, பாதுகாப்புப் பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்படாவிடின் பாரிய உயிரிழப்பு ஏற்படும் எனவும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.
24.10.95 அன்று செவ்வாய்க் கிழமை எறிகணைத் தாக்குதலினால் நீர்வேலி, சிறுப்பிட்டிப் பகுதிகள் சீரழிந்து கிடப்பதாகவும், ஏராளமான வீடுகளும், பயிர்களும், வாழைத் தோட்டங்களும் சேதமாகிக் கிடப்பதாகவும், கால்நடைகள் பல கூட்டமாக இறந்து கிடப்பதால் அப்பகுதியில் பெரும் துர்நாற்றம் வீசுவதாகவும் பொதுமக்கள் தெரிவித்தனர்.

24.10.95 அன்று செவ்வாய் பலாலி இராணுவத் தளத்தில் இருந்து வீசப்பட்ட எறிகணைகள் தொண்டமனாறு, செல்வச்சந்நிதி ஆலய முன்றலில் விழுந்து வெடித்தபோது மூன்று பக்தர்கள் படுகாயமடைந்துள்ளனர். கந்த சஷ்டி விரதத்தின் பொருட்டுக் கோயிலுக்குச் சென்றோரே இவ்வாறு படுகாயமடைந்தவர்கள் ஆவர்.

26.10.95 அன்று, வலிகாமம் கிழக்கில் நிலைகொண்டுள் இராணுவத்தின் சரமாரியான எறிகணை வீச்சின்போது, நீர்வேலி இடைக்காடு மகா வித்தியாலயம் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது. சிறீலங்கா இராணுவத்தின் மிருகத்தனமான எறிகணைத் தாக்குதலால் பல்லாயிரக் கணக்கான மக்கள் இதுவரை அகதிகளாக்கப்பட்டுள்ளனர். ஏற்கனவே 3 இலட்சம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளதாகவும் இத்தொகை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும் அறியப் படுகிறது. கோயில்கள், பாடசாலைகள், வீடுகளில் இடம் கிடைக்காத மக்கள் வீதியோரங்களில் தங்கியிருப்பதைக் காணக்கூடியதாகவுள்ள தாகவும், வைத்தியசாலைகள், காயம்பட்டவர்களால் நிரம்பி வழிவதாகவும் அறியப்படுகின்றது. உணவு, மருந்துப் பற்றாக் குறையினால் நிலைமை மிகவும் மோசமடைந்து வருவதாகவும், பருவ மழை மக்களின் நிலைமையை மேலும் இக்கட்டான சூழ் நிலைக்குள்ளாக்கியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## உணவுக்கப்பல் ஆயுதவிநியோகக் கப்பலாகியது.

குடாநாட்டில் மாவுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதையடுத்து, அவசரமாகத் திருமலையில் இருந்து மா ஏற்றி வருவதற்காக யாழ்.அரசஅதிபரால், வாடகைக்கு அமர்த்தப்பட்ட "கெந்தள" எனும் கப்பல், படையினருக்கான ஆயுத தளபாடங்களை ஏற்றிக் கொண்டு காங்கேசன்துறை துறைமுகத்துக்கு வந்து திரும்பியுள்ளதாகத் தெரியவந்துள்ளது. வடபகுதிக்கு மா ஏற்றிச் செல்லப் படுவதாகப் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு கொழும்பில் அறிக்கைகளை வெளியிட்டு வரும் அதேவேளை, கொழும்புத் துறைமுகத்தில் உள்ள படையினருக்கான இறங்குதுறையில் இருந்து ஆயுத தளபாடங்களையும், வேறு அவசியப் பொருட்களையும் ஏற்றிக் கொண்டு வந்ததாக அறியப்படு கிறது.

இக்கப்பல் வடபகுதிக்கு வரும் முன்னர் கொழும்பிலிருந்து. வெங்காயம் ஏற்றி வருவதற்கென்று இந்தியா சென்று வந்தாகவும் தெரியவந்துள்ளது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# விடுதலைப்புலிகளிடம் அனுமதி கேட்கும் சிறீலங்கா அரசு

சிறீலங்கா கல்வி அமைச்சு, அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையில் விளையாட்டுப் போட்டியினைக் காலி மக்கள் விளையாட்டரங்கில் நடாத்துகிறது. இதற்கு வடக்கு-கிழக்கு மாணவர்களை அனுமதிக்குமாறு தமது கல்வி அதிகாரிகள் ஊடாக சிறீலங்கா, விடுதலைப் புலிகளிடம் உத்தியோகபூர்வமாக அனுமதி கேட்டிருந்தது.

இதனை அவதானித்த அரசியல் அவதானிகள் 'பிற நாட்டைச் சேர்ந்தவரையே விளையாட்டுப் போட்டியில் கலந்து கொள்ள அனுமதிக்குமாறு ஒரு நாடு இன்னொரு நாட்டிடம் கேட்பது உண்டு. இந்த வகையில் சிறீலங்காவின் கல்வி அதிகாரிகளால் தமிழீழம், சிறீலங்கா ஆகிய இருநாடுகள் இயல்பாகவே இயங்கி வருவது இனங்காணப்படுவதாக இவ் அறிவித்தல் சுற்றறிக்கை மூலம் விடுக்கப்பட்டுள்ளது. எனக் கருத்து வெளியிட்டுள்ளார்.

# விடுதலைப்புலிகள் - சிறீலங்கா பேசவேண்டும் அமெரிக்க மக்கள் பிரதிநிதிகள் சபை தீர்மானம்

தமிழீழ மக்களுடைய பிரச்சனை சர்வதேச பிரச்சனையாகி விட்டது என்பதற்கு உதாரணமாக அமெரிக்க மக்கள் பிரதிநிதிகள் சபை, விடுதலைப் புலிகள் - சிறீலங்கா பேச வேண்டும் எனவும், இப்பிரச்சனையில் சம்பந்தப்பட்ட இருதரப்பினரும் விரும்பினால் இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான நல்லெண்ண முயற்சிகளை அமெரிக்கா மேற்கொள்வதற்கான தமது விருப்பத்தின் அடிப்படைகளை தெரிவிக்குமாறும் தீர்மானம் மூலம் கோரியுள்ளது.

'இலங்கையில் தற்போது இடம் பெற்றுவரும் போருக்கு முடிவு கண்டு, இனப்பிரச்சனைக்கு இறுதியான ஒரு தீர்வைக் காணும் நோக்குடன் இருதரப்பினரும் பேச்சுவார்த்தையில் ஈடுபட வேண்டும். பொருத்தமான அரசியலமைப்பு முறைமையுடன் கூடிய ஒரு அரசியல் தீர்வும் சிறுபான்மையினரின் பாதுகாப்புக்கான போதுமான ஏற்பாடுகளுமே இலங்கையில், ஒரு ஒருங்கிணைந்ததும் இறுதியானதுமான தீர்வுக்கான பாதையாக அமையும்' என இத் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.

இவ்வாண்டு தொடக்கத்தில் சிறீலங்கா அரசிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஏற்பட்ட போர் நிறுத்தத்தையிட்டு பாராட்டுத் தெரிவித்த இத் தீர்மானம், மீண்டும் போர் தொடங்கியது குறித்து தனது கவலையைத் தெரிவித்துள்ளது.

# ஆயிரத்திற்கும் அதிகமான தமிழர் கொழும்பில் கைது

கொழும்பு நகரிலும் புறநகர்ப் பகுதியிலும் கடந்த சில நாட்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைத்துத் தேடுதலில், ஆயிரத்திற்கும் அதிகமான தமிழர்கள் வயது, பால் வேறுபாடின்றி கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளின் தற்கொலைப் படையினர் பலர் கொழும்பிற்குள் ஊடுருவி இருப்பதாக, புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்திருக்கும் இரகசியத் தகவல்களை அடுத்தே, கொழும்பு நகரிலும் புறநகர் பகுதிகளிலும் தேடுதல் வேட்டைகளையும் வீதிச் சோதனைகளையும் இராணுவத்தினரும் பொலிசாரும் தீவிரப்படுத்தியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வீதிகளையும், விடுதிகளையும், பொது நிறுவனங்களையும் முற்றுகையிட்டுத் தேடுதல் நடத்திவரும் படையினரும், பொலிசாரும் கடந்த சில நாட்களில் ஆயிரத்திற்கும் அதிகமானோரைக் கைது செய்து விசாரணைகளை நடாத்தி வருகின்றனர்.

கொழும்பு புறக்கோட்டைப் பகுதியைச் சுற்றி வளைத்த இராணுவத்தினரும் பொலிசாரும் மத்திய பஸ் நிலையத்திலும் குறுக்கு வீதிகளிலும் நூற்றுக்கும் அதிகமானோரைக் கைது செய்தனர். இதுபோன்று கிரான்ட்பாஸ், கொட்டாஞ்சேனை, மருதானை, பொரளை, கிருலப்பனை, வெள்ளவத்தைப் பகுதிகளிலும் பொலிசார் தேடுதல் நடாத்தி நூற்றுக்கணக்கானோரைக் கைது செய்து விசாரணைக்குட்படுத்தினர்.

தேடுதல் நடாத்தும் இராணுவத்தினரும், கடற்படையினரும் தாங்கள் கைது செய்பவர்களை அருகிலுள்ள பொலிஸ் நிலையங்களில் ஒப்படைக்கின்றனர். கொழும்பு புறநகர்ப் பகுதிகளில் குறிப்பாக வடபகுதி இளைஞர்களைக் கைது செய்து விசாரித்து வருகின்றனர்.

# சிங்கள பௌத்த வெறி வளர்க்கப்படுகின்றது

தமிழ் மக்களுக்கு எதிரான, சிங்கள பௌத்த வெறியினை ஊட்டி வளர்க்கும் முயற்சியில் சிங்களவரிடையே சிங்கள-பௌத்த அமைப்புக்கள் மும்முரமாக ஈடுபட்டுள்ளன. இதன் பின்னணியில் கடந்த சித்திரையில் விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாகத் தோற்கடிக்க வேண்டுமென 16 வீத சிங்களவர்களே விரும்பினர். ஆனால் இன்றோ 67 சதவீத மானவர்கள், விடுதலைப்புலிகளை சிறீலங்கா அரசு தோற்கடித்ததன் பின்னர்தான், ஏனைய தமிழ்க் குழுக்களுடன் பேசவேண்டுமெனக் கூறுகின்றனர்.

இதனை நியூயோர்க் நகரத்தைத் தலைமையகமாகக் கொண்டு இயங்கும் 'மிற்றோவ்ஸ்கி இன்ரர்நாசனல்' நிறுவனத்துடன் இணைந்து 'சர்வதேச ஆய்வு நிறுவனம்' நடாத்திய அபிப்பிராய ஆய்வு முடிவுகள் வெளிப்படுத்தியுள்ளன. மேலும், சிறீலங்கா அரசாங்கம் முன் வைத்த அரசியல் தீாவுத் திட்ட யோசனைக்கு சதவீத மானவர்கள் மட்டுமே ஆதரவு தெரிவித்துள்ளனர்.

# சிங்களக் குடியேற்றவாசிகள் பொலநறுவையிலிருந்து பெருமளவில் இடம் பெயர்வு

பொலநறுவை மாவட்டத்திலுள்ள திபுலாகல பிரதேச செயலகப் பகுதியிலுள்ள சில இராணுவ முகாம்கள் மாற்றப்பட்டதை அடுத்து, பெருமளவு குடியேற்ற வாசிகள் இடம்பெயர்ந்துள்ளனர்.

விடுதலைப்புலிகளின் தாக்குதலை அடுத்து, இப்பகுதியிலுள்ள சில இராணுவ முகாம்கள் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டன. இதையடுத்து இப்பகுதிகளில் குடியேறியிருந்த சுமார் 500 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வெளியேறி பாதுகாப்பான இடங்களுக்குச் சென்றுள்ளன.

அத்துடன் மகாவலி அபிவிருத்தித் திட்ட அதிகாரிகள் பலரும் தமது வேலையைக் கைவிட்டு வெளியேறியுள்ளனர்.

இடம் பெயர்ந்த பல சிங்களக் குடும்பங்கள் சிங்கபுர மகாவித்தியாலயத்தில் தங்கியுள்ளன.

# முக்கிய ஆவணங்களை இழந்த இடம் பெயர்ந்த மக்கள்

அச்சுவேலி, ஆவரங்கால் பகுதிகளில் இருந்து இராணுவ நடவடிக்கைகளால் இடம் பெயர்ந்த மக்கள் பலர், தமது முக்கிய ஆவணங்களை இழந்த நிலையில் இடம் பெயர்ந்துள்ளனர். இப்பகுதிக்கு இராணுவம் எறிகணை வீச்சுக்களை நடாத்தியவாறு வந்தபோது, அவசர அவசரமாக வெளியேறிய மக்கள் தமது அடையாள அட்டைகள், பங்கீட்டு அட்டைகள், குடும்ப அட்டைகள் மற்றும் முக்கிய ஆவணங்களை இழந்துள்ளனர். தமது முக்கிய ஆவணங்களை இழந்த மக்கள் தற்போதைய சூழலில் என்ன செய்வதென்றறியாமல் நிர்க்கதியான நிலையில் உள்ளனர்.

வலி கிழக்கில் 'இடிமுழக்கம்' இராணுவ நடவடிக்கையினால் பொதுமக்கள் உடமைகள், வீடுகள் என்பன நாசமாக்கப்பட்டதாக அங்கு சென்று வீடு பார்த்துத் திரும்பிய ஆவரங்கால் கிழக்கைச் சேர்ந்த சோமு இராசலிங்கம் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில், 'இராணுவம் சென்றுவிட்டது என்று அங்கு போய்ப் பார்த்த மக்கள் கூறியதையடுத்து நாம் வீடு பார்க்கச் சென்றோம். நாம் 10க்கும் மேற்பட்டோர் சென்று அவரவர் தமது வீடுகளைப் பார்வையிட்டோம். அங்குள்ள பொருட்களை எடுக்க முனைந்தோம். பொருள்கள் ஒன்றுமே அங்கு இல்லை. நகை இல்லை. எல்லார் வீட்டிலும் நீர் இறைக்கும் இயந்திரங்கள் இருந்தன. எல்லா வீட்டிலும் இவை இராணுவத்தினரால் எடுத்துச் செல்லப்பட்டன. பொருள்கள், புடவைகள் எல்லாம் எடுத்து வீதிகளில் போடப்பட்டிருந்தன. வீட்டுக்கதவுகள் வீதிகளில் உடைத்துப் போடப்பட்டும் உள்ளன. வீடுகள் எல்லாமே உடைந்து சீர்குலைந்து காணப்பட்டன. கடைகள் எல்லாம் உடைக்கப்பட்டு, பல பொருட்கள் எடுக்கப்பட்டு மிகுதிப்பொருட்கள் வீதிகளில் எறிந்து காணப்பட்டன. ஆவரங்கால் கிழக்கு லிங்கம் வீதியில் உள்ள தவம் ஸ்டோர்ஸ், செல்லக்கிளி ஸ்டோர்ஸ் ஆகியனவும் சேதத்திற்குள்ளாக்கப்பட்டு இருந்ததென, உரிமையாளர்களே சென்று பார்த்து எமக்குத் தெரிவித்தனர். சடலங்கள் பல உருக்குலைந்து, அடையாளங் காணாமற் கிடந்ததாகவும் காகம் கொத்தித் தின்றுகொண்டு இருந்தது எனவும் தெரிவித்தனர். நாம் எல்லோரும் கையில் கிடைத்த பொருட்களை எடுத்துக்கொண்டு திரும்பியபோது திடீரென இராணுவத்தினர் மறைவிடத்தில் தூரநின்று வரச்சொல்லி கையை அசைத்தனர். அப்போது நானும் என்னுடன் வந்த இருவரும் மறைந்து தப்பி வந்துவிட்டோம். எமக்குப்பின்னால் வந்தவர்கள் மறைய முடியாததால் இராணுவத்தினரிடம் சென்றனர். அவர்களை இராணுவம் உடன் கைது செய்து கூட்டிச் சென்றது' என்றார்.

தமது வீடுகள் உறவினர்கள் நிலைபற்றிப் பார்க்கச் சென்ற 9 பேரையும் இராணுவம் கைது செய்துள்ளது.

'என் கண்முன்னாலேயே எனது வீட்டைக்கூட இராணுவம் எரித்தது. இதை எண்ணும்போது எனது மனம் கொதித்துக்கொண்டு இருக்கின்றது' இவ்வாறு வலி கிழக்கில் இடம்பெற்ற 'இடிமுழக்கம்' இராணுவ நடவடிக்கைகளில் அகப்பட்டு அங்கு 10 நாட்கள் இருந்து விட்டு, தமது உறவினரைத் தேடி மந்துவில் பாடசாலைக்கு வந்து அவர்களுடன் இருக்கும் புத்தூர் மேற்கைச் சேர்ந்த சின்னக்குட்டி முத்தன் (70) என்பவர் தமது வேதனையை மனமுடைந்த நிலையில் தெரிவித்தார்.

'எனது வீட்டைச்சுற்றி ஒரே வெடிச்சத்தங்கள் கேட்டபடி இருந்தன. எனது உயிர் இன்றோடு பிரிந்துவிடும் எனத் திட்டவட்டமாக முடிவு கட்டிவிட்டேன். ஒவ்வொரு எறிகணையும் என்னைத் தூக்கி எறிவதுபோல இருந்தது. எனக்கு ஒரு கால் ஊனமுற்றதால் நடக்கமாட்டேன். இந்த நிலையில் இராணுவம் 2ம் திகதி எனது வீட்டுக்குள் புகுந்தது. இராணுவம் வந்ததும் நெருங்கி துப்பாக்கியை எனது நெஞ்சில் வைத்து ஏதோ சிங்களத்தில் கேட்டனர். நான் கடவுளே என்று கத்தினேன். என்னைச் சுடப்போவதாகத் துப்பாக்கியைத் தயார்படுத்தினார்கள். என்னை விட்டுவிட்டுப் போய்விட்டு மறுதினம் வந்தனர். என்னைத் தூக்கி வெளியில் விட்டுவிட்டு எனது குடிசை வீட்டுக்குத் தீ வைத்தனர். இந்தச் சம்பவத்தை என்னால் பார்க்க முடியாமல் இருந்தது. நான் மறுபுறம் திரும்பிப் பார்த்தபோது எனது வீட்டுப்பகுதியில் எல்லா வீடுகளுக்கும் தீ வைத்து எரித்துக் கொண்டிருந்தனர். எமது பிரதேசத்திலுள்ள இந்துப்பிட்டி மாதிரிக் கிராமமும் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது. இங்கு சுமார் 400க்கு மேற்பட்ட குடிசைகள் எரிக்கப்பட்டிருந்தன' எனவும் கூறினார்.

பலாலி முகாமிலிருந்து வளலாய் மீது நான்கு ஆட்டிலறி செல்கள் ஏவப்பட்டு அங்கு பலத்த சத்தத்துடன் விழுந்து வெடித்தன. இதுவரை ஏற்பட்ட சேத விபரங்கள் இன்னும் தெரியவரவில்லை.

ஒடுக்கப்படும் எமது சுபீட்சத்திற்காகப் போராடி வரும் எமது தேசிய விடுதலை இயக்கத்திற்கு, சர்வதேசத் தமிழ்ச் சமூகம் தொடர்ந்தும் தனது ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்குமென உறுதியாக நம்புகின்றேன்.

**தமிழீழத் தேசியத் தலைவர்**
வே. பிரபாகரன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சகலருமே பொறுப்பு

'முன்னைய அரசியல்வாதிகள் செய்த தவறுகளினால் இன்று, இந்த நாடு இரத்த ஆறால் நனைந்து கொண்டிருக்கின்றது' என, இன்றைய மோசமான நிலைக்கு முன்னைய அரசியல்வாதிகள் மீது சமய கலாச்சார அமைச்சர் லக்சுமன் ஜெயக்கொடி குற்றம் சாட்டியுள்ளார். மேலும் அவர், இன்று உக்கிரமடைந்துள்ள இனப்பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைப்பதற்காகச் சமஸ்டி முறையை வற்புறுத்தி பண்டா செல்வா ஒப்பந்தம் கைச்சாத்தானது. இதனை எதிர்த்து, சிங்களத் தலைவர்கள் பௌத்த பிக்குகளைக் கூட்டி பாதயாத்திரை செய்து ஒப்பந்தம் நிறைவேறுவதை தடுத்துவிட்டனர் எனவும் தமது குற்றச்சாட்டில் தெரிவித்துள்ளார். லக்சுமன் ஜெயக்கொடி, 'முன்னாள் அரசியல்வாதிகள்' என்று குற்றச்சாட்டைப் பொதுப்படையாக வைத்திருப்பினும் மறைமுகமாக அவர் ஜே.ஆர் ஜெயவர்த்தனாவையும், ஐ.தே.க. வையும் குறிப்பிடுகின்றார் என்பது வெளிப்படை ஆகும். ஆனால் ஜெயக்கொடியின் இந்தக் குற்றச்சாட்டுக்கள் தனியாக ஜே.ஆர் ஜெயவர்த்தனாவை என்று சொல்வதை விட, பொதுவாக ஐ.தே.க. அரசியல்வாதிகளைக் குறிப்பிடுவதாகவேயுள்ளது எனக் கூறலாம். ஆனால், இலங்கையின் இனப்பிரச்சனைக்குத் தனியாக ஐ.தே.கவோ, அது ஆட்சியில் இணைத்துக் கொண்டுள்ள ஏனைய அரசியல் கட்சிகளோ மட்டும் காரணம் அல்ல. கடந்த காலத்தில் மாறி மாறி ஆட்சி செய்த சகல சிங்கள அரசியல் தலைவர்களுமே காரணம் ஆகும். ஏட்டிக்குப் போட்டியாக ஆட்சியாளர்கள் தமிழர் ஒடுக்குமுறையிற் காட்டிய ஆர்வமே, இன்றைய நிலைக்குக் காரணம் எனலாம். எடுத்துக்காட்டாகக் கூறினால், தனிச்சிங்கள மொழி மசோதா மூலம் சிங்கள, தமிழ் மக்களிடையே மொழி ரீதியான வேறுபாட்டை உருவாக்கியதும் முதலாவது குடியரசு அரசியல் யாப்பின்மூலம், தமிழ் மக்களுக்கு இருந்த அரசியல் யாப்பு ரீதியான சிறிய அளவிலான பாதுகாப்பை இல்லாதொழித்ததும், மற்றும் பல்கலைக்கழக அனுமதியில் தரப்படுத்தல் மூலம் வெட்டினைச் செய்ததும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சி காலத்திலேயே நடைபெற்றுள்ளது. இந்த நிலையில் இனப்பிரச்சனை தொடர்பாக, முன்னர் இழைக்கப்பட்ட தவறுகள் அமைச்சர் லக்சுமன் ஜெயக்கொடி கூறுவதுபோன்று தனியாக ஐ.தே.கட்சிக்கோ, ஜே.ஆரிற்கோ மட்டும் பொறுப்பல்ல. சிறீலங்காவின் ஆட்சியில் மாறி மாறி அமர்ந்த சகலருமே இதற்குப் பொறுப்பாகும். இதிலிருந்து, இன்றைய இரத்த ஆறு ஓடுவதற்குத் தனியாக முன்னாள் அரசியல்வாதிகள் மாத்திரம்தான் பொறுப்பு என்று கூறுவது தவறாகும். முன்னாள் அரசியல்வாதிகள் என்றால் யார்! இந்நாள் அரசியல்வாதிகள் என்றால் யார்! என்பதே சர்ச்சைக்குரிய விடயம். ஏனெனில் அரசியலிலிருந்து ஒதுங்குவதாக அறிவிப்பவர்கள் கூட, தமது வாழ்நாள் பூராவும் அரசியல் நடாத்தவே முனைகின்றனர். இதற்கும் மேலாக முன்னாள் அரசியல்வாதிகளுடன் இணைந்து பங்காற்றியோர், இன்றைய அரசியலிலும் பங்கேற்பவர்களாகவுள்ளனர். அமைச்சர் லக்சுமன் ஜெயக்கொடிக்கும் இது பொருத்தமானது ஆகும். இவரது கூற்றுப்படி அவர் தனது கடந்தகால அரசியலை மறைக்கப் பார்க்கின்றார். அமைச்சர் ஜெயக்கொடி 1952ஆம் ஆண்டு அரசியலில் ஈடுபடத் தொடங்கி, சுதந்திரக் கட்சியின் தொடக்க காலத்திலிருந்து அதன் உறுப்பினராக இருந்து வருகின்றார். இந்த வகையில் பண்டாரநாயக்கா, சிறிமாவோ ஆகியோரின் ஆட்சிகாலத்தில் அதே அரசில் பங்கேற்றும் உள்ளார். அதிலும் சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஆட்சிக்காலத்தில் (1970-77) பாதுகாப்பு அமைச்சராக இருந்த அதேவேளை, சிறிமாவோவின் குடியுரிமை

தமிழ் மக்களுக்கு இருந்த அரசியல் யாப்பு ரீதியான சிறிய அளவிலான பாதுகாப்பை இல்லாதொழித்ததும், மற்றும் பல்கலைக்கழக அனுமதியில் தரப்படுத்தல் மூலம் வெட்டினைச் செய்ததும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் ஆட்சி காலத்திலேயே நடைபெற்றுள்ளது. இந்த நிலையில் இனப்பிரச்சனை தொடர்பாக, முன்னர் இழைக்கப்பட்ட தவறுகள் அமைச்சர் லக்சுமன் ஜெயக்கொடி கூறுவதுபோன்று தனியாக ஐ.தே.கட்சிக்கோ, ஜே.ஆரிற்கோ பொறுப்பல்ல. சிறீலங்காவின் ஆட்சியில் மாறி மாறி அமர்ந்த சகலருமே இதற்குப் பொறுப்பாகும்.

பறிக்கப்பட்டு சுதந்திரக்கட்சிக்குள் பெரும் நெருக்கடிகள் உருவானபோது பாராளுமன்றத்தில் எதிர்கட்சித் தலைவராகவும் இருந்துள்ளார். இது சுதந்திரக்கட்சியில் அவர் செல்வாக்கைக் காட்டும் ஒன்றாகும். இதனால் இந்த வகையில், இனப்பிரச்சனைக்கு- இரத்த ஆறு ஓடுவதற்கு முன்னாள் அரசியல்வாதிகளைக் குற்றம் சாட்டிவிட்டு ஜெயக்கொடி போன்றவர்கள் தப்பித்துக் கொள்ள முடியாது. அத்தோடு, இந்த இரத்த ஆற்றில் உருவாகிக்கொண்டிருக்கும் அரசியலில் இருந்து கொண்டும் அவ்வாறு அமைச்சர் ஜெயக்கொடி கூறிக்கொள்வது ஏற்புடைய ஒன்றல்ல. ஏனெனில் இனச்சிக்கல் தொடர்பான விடயத்தில், கடந்த காலத்தில் விடப்பட்ட தவறுகளே காரணமாக இருப்பினும் தற்போதுள்ள ஆட்சியாளர்களும் இரத்த ஆறு ஓடுவதைத் தடை செய்ய முயலவில்லை. மறுவழமாக, முன்னைய ஆட்சியாளர்கள் செய்த தவறுகளையே மீண்டும் மீண்டும் இவர்களும் இழைத்து வருகின்றனர். இன்று, கண்மூடித்தனமாக நடாத்தப்படும் தாக்குதலில் தமிழ்மக்கள் நாள்தோறும் இரத்தம் சிந்துகின்றனர். இந்த நிலையில் இன்று இரத்த ஆறு பெருகுவதற்கு முன்னைய அரசியல்வாதிகளே காரணம் என பாகுபடுத்தி பார்க்க முடியாது. ஒட்டுமொத்தமாக சிங்கள அரசியல்வாதிகள் யாவருமே பொறுப்பாகும்.

# கோண்டாவிலும் கொழும்பும்

வடக்கு- கிழக்கில் இடம்பெறும் யுத்தமானது, தனியாக அப்பிரதேசத்திற்குரியதாகவே இருத்தல் வேண்டும் அல்லது கட்டுப்படுத்தப்படல் வேண்டும் என்பது சிங்கள ஆட்சித் தலைவர்களின் விருப்பமாகும். கடந்த காலத்தில் ஆட்சி புரிந்த ஐ.தே.க. சரி, தற்போது ஆட்சி செய்யும் பொ.ஐ.மு. சரி இதனையே விரும்பின. இப்போதும் விரும்புகின்றன. அதற்காகவே முயற்சித்தன. முயற்சிக்கின்றன. இருப்பினும், கடந்த காலத்திலேயே இனப்பிரச்சினையின் தாக்கம் கொழும்பில் பிரதிபலிக்கத் தொடங்கின. ஆனால், கொழும்பில் இடம் பெற்ற பெருந் தொகையான பிரதிபலிப்புகளிற்கு, தாக்குதல்களிற்கு யாருமே இதுவரை உரிமை கோரவில்லை. இறுதியாகக் கொலன்னாவை, உறுகொடவத்த எண்ணெய்க்

கொழும்பில் இடம் பெற்ற பெருந் தொகையான பிரதிபலிப்புகளிற்கு, தாக்குதல்களிற்கு யாருமே இதுவரை உரிமை கோரவில்லை. இறுதியாகக் **கொலன்னாவை, உறுகொடவத்த** எண்ணெய்க் களஞ்சியங்களில் ஏற்பட்ட வெடிப்புக்களிற்கும் இதுவரை உரிமை கோரப்படவில்லை. ஆனால் யார் உரிமை கோரினால் என்ன, உரிமை கோராவிட்டால் என்ன இவை யாவும் இனப் பிரிவினையின் பிரதிபலிப்புக்கள் என்பதில் சந்தேகமில்லை.

களஞ்சியங்களில் ஏற்பட்ட வெடிப்புக்களிற்கும் இதுவரை உரிமை கோரப்படவில்லை. ஆனால் யார் உரிமை கோரினால் என்ன, உரிமை கோராவிட்டால் என்ன இவை யாவும் இனப் பிரிவினையின் பிரதிபலிப்புக்கள் என்பதில் சந்தேகமில்லை. சுருக்கமாகக் கூறுவதானால், சிறீலங்காவின் அரசியலை இன்று தீர்மானிக்கும் சக்தியாகத் தமிழீழ விடுதலைப் போராட்டமே உள்ளது. இரண்டாவது முறையாக ஜே.வி.பி 1988 1989ஆண்டில் நடத்திய கிளர்ச்சியாக இருப்பினும் சரி, கடந்த வார இறுதியில் கொலன்னாவை, உறுகொடவத்தவில் நடந்த தாக்குதல் ஆயினும் சரி சகலதும் இனப் பிரச்சனையின் விளைவுகளும் பிரதிபலிப்புக்களுமே ஆகும். அதிலும் 20-10-95 வெள்ளிக்கிழமையன்று அதிகாலை கொலன்னாவயிலும், உறுகொடவத்தவிலும் இடம் பெற்ற தாக்குதலானது இராணுவ, பொருளாதார ரீதியில் மிகவும் முக்கியமானதாகும். இது, கொழும்பில் ஒரு போரையே கொண்டு வந்துவிட்டது போன்றதொரு நிலையையே தோற்றுவித்தது. ஏனெனில் இத்தாக்குதலின்போது, இராணுவ ரீதியில் இரண்டு அம்சங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. ஒன்று, சிறீலங்கா ஆயுதப்படையின் பாதுகாப்பு ஏற்பாடுகளை உடைத்துக் கொண்டு கொலன்னாவ, உறுகொடவத்த களஞ்சியங்களில் தாக்குதல் நடாத்தப்பட்டமை. இரண்டு, கொழும்பில் ஆயுதப் படையினருடன் தாக்குதல் நடத்திய குழுவினர் சில மணி நேரம் நடாத்திய துப்பாக்கிச் சமர். அதாவது, இத் தாக்குதல் நடவடிக்கைகள் முற்றுப்பெறக் குறைந்தது மூன்று மணி நேரம் எடுத்தது. கொழும்பு நகரம் சுதந்திரத்தின் பின் இவ்வாறான ஒரு மோதலை என்றுமே சந்தித்ததில்லை என்று கூறலாம். 60,000 பேரைப் பலி கொண்ட ஜே.வி.பி இன் இரண்டாவது கிளர்ச்சியின் போது கூட, கொழும்பு நகரில் இவ்வாறான சம்பவங்கள் இடம் பெறவில்லை. இந்த வகையில் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா, 'யுத்தம் கோண்டாவிலில் மட்டும் அல்ல, கொழும்பிற்கும் வந்து விட்டது. கதவைத் திறந்து பார்த்தால் எரிவது தெரிகின்றது' என்று குறிப்பிட்டமை மிகவும் பொருத்தமானதே. ஏனெனில், இத்தாக்குதல், யுத்தத்தின் கொழும்பு வருகையைப் பிரதிபலிப்பதாவே உள்ளது. இந்நிலையில், யுத்தம் கொழும்பிற்கு வந்தது தொடர்பாக எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, புலனாய்வுத் துறையைக் குறை கூறுவதில் அர்த்தமில்லை. ஏனெனில், ஒரு நாட்டிற்குள் நடக்கும் போரானது அதன் சகல பகுதிகளிலும் பாதிப்பை ஏற்படுத்துவது தவிர்க்க முடியாதது. அது தாக்கத்தினையும், பிரதிபலிப்பையும் ஏற்படுத்தவே செய்யும். இனப் பிரச்சனையானது, ஆரம்பத்திலிருந்து சிறீலங்காவின் அரசியல், பொருளாதார ரீதியில் நேரடியாகத் தாக்கத்தினை ஏற்படுத்தியே வந்தது. போர்ச் செலவீடானது படிப்படியாக உயர, அது பொருளாதார ரீதியாகப் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தியது. அதேவேளை, கடந்த ஒரு தசாப்தத்திற்கு மேலாக அரசியலின் போக்கையும் ஆட்சியாளர்களின் கொள்கைகளையும் தீர்மானிக்கும் சக்தியாக இருந்தது. ஆனால், இராணுவ ரீதியான தாக்கம் பெருமளவில் ஏற்பட்டாலும் அவசிய முக்கியத்துவங்களுடன் மட்டுப்படுத்தப்பட்டனவாகவே இருந்தன. ஆனால் கொலன்னாவை, உறுகொடவத்த சம்பவமானது கொழும்பின் பாதுகாப்பு ஏற்பாடுகளையே பெரும் கேள்விக்குறியாக்கி உள்ளதோடு, இராணுவ ரீதியாகச் சிறீலங்கா அரசிற்குப் பெரும் தாக்கத்தை விளைவிக்கக் கூடியதாகவும் உள்ளது. அதுமட்டுமல்லாது, அரசியலில் பொருளாதார ரீதியில் இதன் தாக்கம் என்றுமில்லாதவாறு பிரதிபலிக்கக்கூடியதும் ஆகும். இந்த நிலையில் போரென்பது வடக்கு- கிழக்கிற்குரியது என்ற சிறீலங்கா அரசின் எண்ணத்தைத் தகர்த்துள்ளது என்பதே யதார்த்தமாக உள்ளது. ஆனால், அதற்குச் சந்திரிகா அரசின் மீதோ அல்லது புலனாய்வுத்துறை மீதோ குறை கூறுவதிற் பயனில்லை. இலங்கைத் தீவிற்குரிய போரை அதன் பிரதிபலிப்பை அல்லது எதிர்விளைவை, வடக்கு- கிழக்கு பிரதேசத்திற்கு மட்டும் உரித்தானதாகச் சிந்தனை செய்தமை, சிறீலங்கா ஆட்சியாளர்களின் தவறே. இது ஆளும் கட்சியாகச் சந்திரிகா இருந்தாலென்ன, எதிர்க்கட்சியாக ரணில் விக்கிரமசிங்கா இருந்தாலென்ன சகலருக்குமே பொருந்தும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கூரையேறிக் கோழி பிடிக்க முடியாதவர்கள் வானமேறி வைகுண்டம் போவார்களா?

தமிழீழ விடுதலை ஆதரவாளர் ஒருங்கிணைப்புக்குழு' என்ற (விடுதலைப் புலிகள் ஆதரவுக் குழுக்களின்) அமைப்பின் சார்பில் 'இலங்கையில் இந்திய இராணுவத்தலையீடு கூடாது' என்ற கருத்தரங்கு சென்னையில் ஆனி 6 ஆம் தேதி நடத்தப்பட்டது. நெடுமாறன் தலைமையில் நடந்த இக்கூட்டத்திற் பேசிய பலரும் பிரபாகரனையும் விடுதலைப் புலிகளையும் புகழ்ந்துரைத்தனர்.

**எழிலரசு - திராவிட தமிழர் கழகம்:**

ஈழத்திலே நடைபெறுகிற போராட்டம் வெற்றி பெற வேண்டும் என்று உண்மையிலேயே நமக்கெல்லாம் அக்கறை இருக்குமானால்- தமிழ் நாட்டில் இருக்கிற காவிரி நீர்ப் பிரச்சனை, கண்ணகி கோயிற் பிரச்சனை, கச்சதீவுப் பிரச்சனை போன்ற பல பிரச்சினைகளை முன்நிறுத்தி, நாம் ஆயுதப் போராட்டத்தைத் துவக்கினால் இந்திய ராணுவம் ஈழத்தின்பக்கம் திரும்பாது. இந்தியாவின் ராணுவத் தலையீடு இலங்கையில் இருக்குமானால் இங்கே நாங்கள் ஒரு ஆயுதப் போராட்டத்தைத் துவங்குவது தவிர்க்க முடியாதது'

**சுப.வீரபாண்டியன் தமிழ்-தமிழர் இயக்கத் தலைவர்:**

எந்த ஒரு நாடும் இந்தியாவின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதை இந்தியா விரும்புவதில்லை, ஆனால் இந்தத் தெற்காசியாவில் இருக்கிற எல்லா நாடுகளின் உள்நாட்டு விவகாரங்களிலும் தலையிடுவதை இந்தியா நிறுத்துவதில்லை.

'உள்ளூரில் இருக்கிற வீரப்பனையே பிடிக்க முடியவில்லை. உலகம் முழுவதும் பாராட்டுகிற ஒப்பற்ற மாவீரனாக இருக்கிற பிரபாகரனை ஒரு வாரத்திற் பிடிப்போம் என்று சொல்லுவது கேலிக்கூத்தான காரியமாகும்'.

**தீனன் -தமிழர் குடியரசுக்கட்சி:**

நீங்கள் தப்பித்தவறி மீண்டும் இந்திய இராணுவத்தைத் தமிழ் ஈழத்துக்கு அனுப்பினாற் தமிழகத்தில் உள்ள உணர்வுள்ள தமிழர்கள் ஓரணியிற் திரண்டு இங்கே இருந்து செல்லுகின்ற இராணுவத்தை அந்த டாங்கிகளை நாங்களே உடம்பிற் குண்டைக் கட்டிக் கொண்டு தூள் தூளாக்குவோம்- வெறும் வாய்வீச்சு வீரர்களல்ல நாங்கள்.

இந்தியாவினுடைய கலாசாரம், தமிழனுடைய கலாசாரம் பட்டாக்கத்தி கலாசாரம். நாங்கள் அவர்களை வெட்டிச் சாய்த்து விடுகிறோம். தமிழ் இனத் துரோகிகளைக் களை எடுக்க வேண்டும். பிரபாகரனைப் பிடிக்க வேண்டும் என்ற எண்ணம் இருந்தால் அதை மாற்றிக்கொள்ளுங்கள். அந்த எண்ணத்தோடு ஈழத்துக்குச் சென்றால், ஒரு போரை அங்கு தோடுத்தால்-இந்திய இராணுவத்தை இங்கேயே எதிர்த்து நாங்கள் போர் நடத்துவோம். ஆயுதம் ஏந்தவேண்டிய அவசியம் கூட இல்லை. எப்படி இருந்தாலும் தமிழகம் வழியாகத்தான் செல்ல வேண்டும். கட்டுமரத்திலே குண்டுவைத்து நீங்கள் செல்லுகிற கப்பலைத் தகர்ப்போம் ஜாக்கிரதை!

**அருள்மொழி - வழக்கறிஞர் தி. க:**

இந்திய - இலங்கை ஒப்பந்தப்படி, மேற்பார்வையிடுகிறோம் என்ற பெயரில் இந்திய இராணுவம் அங்கே நுழைந்தது. ஆனால் அந்த இராணுவம் செய்த கொடுமைகளையும், படுகொலைகளையும், மனித உரிமைகளை மண்ணிலே மிதித்துப்போட்ட செய்திகளையும் நாம் இன்னும் மறக்கவில்லை.

"நம்முடைய கவலை எல்லாம் அவர்கள் பிரபாகரனைப் பிடித்து வருவார்களா என்பதல்ல. தமிழ் நாட்டிற்கும் பெங்களூருக்கும் இடையிலே காட்டிலே வாழுகிற வீரப்பனைப் பிடிக்கிறோம் என்ற பெயரிலேயே இந்தச் சாதாரண காவல்துறை நடத்திவருகிற அட்டூழியங்களை நாம் பத்திரிகைகளிற் படிக்கிறோம். தன் சொந்த மக்கள் தம் மொழி பேசுகிற மக்கள் மீது இரண்டு மாநிலக் காவல்துறையும் ஏவி விடுகிற வன்முறையைப்பற்றிப் படிக்கிறோம். ஏற்கனவே இப்படிப்பட்ட இரத்த வெறியாட்டங்களுக்குப் பழகிப்போன இந்திய இராணுவம், அறுபது வயதுப் பெண்ணைப் பாலியற் கொடுமைக்கு உட்படுத்துகிற மனோநிலை வெறி பிடித்த இராணுவம், ஒரு மாவீரனைப் பிடிக்கிறேன் என்ற பெயரில் அந்த மண்ணுக்குள் நுழைந்தால் அந்த மக்களுடைய நிலை என்னவாகும் என்பதற்காக நாம் கவலைப்படுகிறோம்"

**கி. வீரமணி - தி. க. பொதுச்செயலாளர்:**

இந்திய இராணுவம் ஏற்கனவே பட்டதுபோதும். கெட்ட பின்பும் ஞானம் வரவில்லை என்றால் என்ன அர்த்தம்! பொருளாதாரக் கண்ணோட்டத்தோடு பார்த்தால் நமது நாட்டுக்கு இழப்பு. சுயமரியாதைக் கண்ணோட்டத்தோடு பார்த்தால் நாட்டினுடைய மிகப்பெரிய இராணுவம் ஏற்கனவே சந்தித்ததே அவமானமே தவிரப் பெருமை அல்ல. எனவே இன்னொரு முறை ஒரு தேசிய அவமானத்தை அவர்களுக்குத் தேடித் தராதீர்கள்".

**பழ. கருப்பையா - ம.தி.மு.க:**

இந்திய இராணுவம் மீண்டும் இலங்கைக்குச் செல்ல வேண்டும் என்று சொல்கிறார்கள், நான் கேட்கிறேன் இந்திய இராணுவம் அங்கு சென்று என்ன கிழித்துவிடப்போகிறது. கூரையேறிக் கோழி பிடிக்க முடியாதவர்கள் வானம் ஏறி வைகுண்டத்தைக் காட்டுவேன் என்று சொல்வதைப் போல நீ போய் என்ன செய்யப் போகிறாய்! இதற்குமுன் உன்நிலைமை தெரியாதா?"

"தமிழ் ஈழம் ஏற்கனவே தனி நாடாகத்தான் இருக்கிறது. என்ன புதிதாக முளைக்க வேண்டும்! அட நாய்களா உங்கள் நரசிம்மராவும், சந்திரிகாவும் ஒப்புக்கொண்டால் அது தனிநாடு. இல்லை என்றால் இல்லையோ! அது ஏற்கனவே தனிநாடுதான். அந்த நாட்டிற்கு அதிபர் பிரபாகரன்தான்.

-" ..நாட்டினுடைய ஒருமைப்பாடு குலைந்து விடாமல் (இலங்கை) பேச்சுவார்த்தை நடக்க வேண்டுமென்று மார்க்ஸிஸ்ட் கட்சி சொல்கிறது. நான் கேட்கிறேன் கட்டுக்கோப்புக் குலைந்துவிட்டால் என்ன! அது என்ன பெண்ணினுடைய இளமையா! என்ன தேச ஒற்றுமை! என்னடா தேசம்! 19ம் நூற்றாண்டில் வெள்ளைக்காரன் கண்டுபிடித்ததுதானே! அதற்கு முன்னால் எங்கே தேசம் இருந்தது! என்னுடைய பாட்டன் இந்தியனாக இருந்தானா! என்னுடைய பேரன் இந்தியனாக இருக்க வேண்டிய கட்டாயம் இருக்குமா! ஈழம் விடுதலை அடைந்துவிட்டால் தமிழனுடைய முதற் தாயகம் பிரிந்துவிட்டால் இரண்டாவது தாயகம் தோன்றுவதற்கான காலம் கனிந்துவிடும் என்ற அச்சம்.

"..ஒன்று வேண்டுமானாற் செய்யலாம். எல்லா ஈழத் தமிழர்களையும் கொன்றுவிட்டு, அந்த நாட்டைச் சுடுகாடாக்கலாம். உலகத்திலுள்ள வல்லரசுகளெல்லாம் சேர்ந்து எது வேண்டுமானாலும் செய்யலாம். அதன்பிறகு தமிழ்நாட்டிற்கு வரலாம். உலகத்திலுள்ள எல்லா மக்களையும் சுட்டுக்கொன்றுவிட்டுச் சுடுகாட்டை ஆளுங்கள் நாய்களா!"

**தியாகு - தமிழ் தமிழர் இயக்கம்:**

காஷ்மீரில் பொய்த் தேர்தல் நடத்தினார் நேரு. ஏதோ காஷ்மீர் இந்தியாவுக்கு என்பதுபோல். ஒப்புக்கொள்ள முடியாது. தமிழ்நாடு தமிழருக்கே காஷ்மீர் காஷ்மீரிகளுக்கே. இந்தியருக்கல்ல. காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதியல்ல, நீ கபளீகரம் செய்து விழுங்குவதற்கு அது ஒன்றும் ஏமாந்த நாடும் அல்ல.

"..ராஜிவினுடைய உயிருக்கு அவ்வளவு மதிப்பு இருக்குமானால், இது ஒரு அரசியல் நிகழ்வு என்று ஒதுக்கப்பட முடியாத அளவுக்குப் பெரும் குற்றமாக இருக்குமானால், எங்கள் ஈழத்தமிழர் ஐயாயிரம் பேரைக் கொன்று குவித்தாயே, அதற்கு எங்கே வழக்கு! எங்கள் தமிழ்ப் பெண்களின் மானம் பறித்தாயே, அதற்கு எங்கே வழக்கு! எதற்கெல்லாம் வழக்கோ அதற்கும் தனி நீதிமன்றம் வேண்டும்".

**நெடுமாறன் - தமிழர் தேசிய இயக்கம்:**

சீனாக்காரன், இலங்கையின் பரப்பளவை விட மூன்று நான்கு மடங்கு அதிகமான இந்தியப்பகுதியை ஆக்கிரமித்திருக்கிறான். 1962ல் ஆக்கிரமித்துக் கிட்டத்தட்ட 32 வருடங்கள் ஆகிவிட்டன. அதைத் திரும்பவும் பிடிப்பதற்கு இராணுவத்தை அனுப்ப நம்மால் முடியவில்லை. அங்கே போனால் என்ன நடக்கும் என்பது உங்களுக்குத் தெரியும். வாலை ஒட்ட நறுக்கிவிடுவான் என்று சும்மா இருக்கிறீகள்.

"நீங்கள் இராணுவத்தை அனுப்பி அவரை (பிரபாகரனை) ஒழிக்க முயற்சி செய்தீர்கள். வெற்றி பெற முடியவில்லை. நீங்கள் படுதோல்வியடைந்து திரும்பினீர்கள். இன்னமும் அந்த முயற்சியைச் செய்வதற்கு ஏகாதிபத்திய தாசர்கள் நினைக்கிறார்கள்".

விடுதலைப்புலிகள் புகழ்பாடவும், தமிழகத்தில் அவர்களுக்கு ஆதரவு திரட்டவும் நடத்தப்பட்ட இந்தக் கூட்டம், தமிழகத்தின் பிற நகரங்களிலும் நடத்தப்படும் என்றும் தன் பேச்சின் முடிவில் நெடுமாறன் அறிவித்தார்.

## தீவிர உணர்ச்சியும், தியாகமுமே, புலிகளின் பெரிய படைக்கலனாகும்

### புலிகளின் ஆயுத பலம் குறித்து மதிப்பீடு செய்யும் பி.பி.சி

சிறீலங்கா அரச படையினருடன் ஒப்பிடும்போது விடுதலைப் புலிகளின் ஆயுத பலம் குறைவான போதிலும் அவர்களிடமுள்ள மிகப் பெரிய படைக்கலங்களாகப் போராளிகளின் தீவிர உணர்ச்சியும், தியாகமரணமும் விளங்குகின்றன. கரும்புலிகளிற் சேர போராளிகள் இடையறாது முன்வருவது தம்முடைய கொள்கையில் அவர்களின் அர்ப்பணிப்பைக் காட்டுகின்றது. இவ்வாறு புலிகளின் ஆயுத பலம் என்ற தலைப்பில் பிபிசி. ஒலிபரப்பிய கண்ணோட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:

கடந்த 12 ஆண்டுகளில் சிறீலங்கா இராணுவம் 10 மடங்காக அதிகரித்துள்ளது. ஆனால் அந்தளவு பெரிய படைக்கு இருக்க வேண்டிய கனரக ஆயுதங்களின்றி பெரும்பாலும் இலகு காலாட்படையையே அது நம்பியுள்ளது என வல்லுனர்கள் கூறுகின்றனர்.

50 டாங்கிகள், துருப்புக் காவிகள் சிறீலங்கா இராணுவத்திடம் உள்ளன. கடற்படையும் விமானப்படையும் ஒப்பு நோக்கும்போது போதுமானதாக இல்லை. விமானப்படை நான்கு விமானங்களை இழந்துவிட்ட போதும் இன்னமும் நான்கு குண்டுவீச்சு விமானப் பிரிவுகளும் ஆறு போக்குவரத்து விமானங்களும் உள்ளன. இவ்வாறாக அரச படையுடன் ஒப்பிடுகையில் விடுதலைப் புலிகளிடம் இருப்பவை அளவில் பெரிதும் குறைந்தவை.

விடுதலைப் புலிகள் பல படிநிலை கொண்ட இரகசிய அமைப்பு தகவல்களை கடுமையாக கட்டுப்படுத்துகிறது. விடுதலைப் புலிகளின் படைப்பலம் 17 ஆயிரத்திற்கும் அண்மையில் பெருகியிருப்பதாக புலனாய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவர்களில் பெரும்பாலானோர் யாழ். குடாநாட்டுப் பகுதியில் உள்ளனர்.

இராணுவத்திற்கெதிரான போரில் விடுதலைப் புலிகளின் பெரிய ஆயுதம் அதன் போராளிகளின் தீவிர உணர்ச்சி எனலாம். தியாக மரணம் என்பதும் பெரிய படைக்கலனாக உள்ளது. கரும்புலிகளில் சேர போராளிகள் இடையறாது முன்வருவது தம்முடைய கொள்கையில் அவர்களின் அர்ப்பணிப்பைக் காட்டுகின்றது. முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி,

தொடர்ச்சி 16 ஆம் பக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சிங்கள அரசின் செய்தித் தணிக்கை எதிர்பார்த்த பலனைத் தரக்கூடியதா?

கடந்த மாதம் 21ஆம் நாள் நள்ளிரவு முதல் உள்நாட்டுப் போர் தொடர்பான செய்திகளுக்கு சிறீலங்கா அரசு கடும் தணிக்கை விதியை வர்த்தமானி அறிவித்தல் மூலம் அமுலுக்குக் கொண்டு வந்துள்ளது. இது குறித்து மறுநாள் செய்தியாளர் மாநாட்டில் அறிவித்த தகவற் துறையமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா இத் தணிக்கை நடைமுறை தற்காலிகமான ஒன்றே என வழமைபோற் தெரிவித்தார்.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்ட இந்தச் செய்தித் தணிக்கையானது நடைமுறைப் போர் தொடர்பான அனைத்துத் தகவல்களும் சிறீலங்கா தகவல்துறையின் அனுமதியின்றி உள்நாட்டிலோ, வெளிநாட்டிலோ அச்சுப்பதிப்பின் மூலமாகவோ, ஒளிபரப்பு மூலமாகவோ வெளியிடத் தடை விதிக்கின்றது. குறிப்பாக சிறீலங்கா ஆயுதப்படைகள் தொடர்பான தகவல்கள், ஆயுத மற்றும் இராணுவ நகர்வுகள், படையினரின் பிரசன்னங்கள் போன்ற விடயங்கள் செய்தியாக, செய்தி விபரணமாக, விபரண நிகழ்ச்சியாக வெளியிடுவது தடுக்கப்படுகின்றது. இவ்விதிகளை மீறும் செய்தி நிறுவனப் பிரதிநிதி மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதற்கும் அதன்மூலம் ஐந்தாண்டுச் சிறைத் தண்டனை வழங்கவும் அரசுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. தற்போது வெளிநாட்டுச் செய்தியாளர்கள் மீதான தடை நீக்கப்பட்டுவிட்டது.

இராணுவம் தொடர்பான செய்திகளைக் கொழும்பிலுள்ள சில பத்திரிகைகள் வெளியிடுவதனால் முக்கிய இராணுவ இரகசியங்கள் புலிகளுக்கும் கிடைத்து விடுகின்றது. எனவே இது புலிகளுக்குச் சாதகமான நடவடிக்கையே என அண்மைக்காலமாகச் சில அமைச்சர்கள்-அநுருத்த ரத்வத்த உட்பட- குற்றஞ்சாட்டி வந்தனர். இதன் தொடர்தான் அரசின் செய்தித்தணிக்கை எனச் சில தரப்பினர் கருதுகின்றனர். ஆனால் அரச படைகள் குறித்த இரகசியத் தகவல்களைப் பத்திரிகையாளர்களை விட புலிகளின் உளவுப் பிரிவினர் அதிகமாகவே அறிந்துள்ளனர்

## ஏன் இந்த நடவடிக்கை?


சில செய்தித்தாள்களும், இலத்திரனியற் தொடர்புச் சாதனங்களும் நாட்டின் பாதுகாப்பிற்கும், மக்களின் நலன்களுக்கும் குந்தகம் விளைவிக்கும் வகையிற் பாதுகாப்புத் தொடர்பான செய்திகளைப் பொறுப்பற்ற விதத்தில் வெளியிட்டமையே தனது இந்தத் தணிக்கைச் சட்டம் அமுலாவதற்கான காரணம் என அரசு தன்னை நியாயப்படுத்திக் கொள்கின்றது.

ஆனால் இது எவ்வகையில் உண்மை என்ற சந்தேகம் இந்தத் தணிக்கைச் சட்டம் அமுலுக்கு வந்த காலப்பகுதியை நோக்கும் போது எழுகின்றது. ஏனெனிற் காங்கேசன்துறைத் துறைமுகத்திற் கடற்படையினரின் தளம் மீது விடுதலைப் புலிகள் நடாத்திய பாரிய தாக்குதலைத் தொடர்ந்து மறுநாள் இத் தணிக்கை அமுலுக்கு வருவதாக அரசு அறிவித்தது. தணிக்கை அமுலுக்கு வந்த மறுநாள் அரசு விமானப்படை வடமராட்சி கிழக்குப் பகுதியிற் பெரும் இனப்படுகொலை ஒன்றை நிகழ்த்தி முடித்தது. அதாவது தனது போர்த் தோல்விகளும் இன ஒழிப்பும் வெளி உலகு அறியாமற் தடுப்பதற்கே இத்தணிக்கை நடைமுறையை அரசு கொண்டு வந்தது என எண்ண இடமுண்டு.

## பலனளிக்கவில்லை

அரசு எதை எண்ணி இத்தகவற் தடையை அமுல்படுத்தியதோ அது பலன் தரவில்லை என்பதை இச்சம்பவங்களைத் தொடர்ந்து செய்தி நிறுவனங்கள் குறிப்பாக பிபிசி நிறுவனம் வெளியிட்ட செய்திகள் நிரூபித்தன. காங்கேசன்துறையில் அரசின் கடற்போர்த் தோல்வியையும், நாகர்கோவிலில் அரசின் இனப்படுகொலையையும், சம்பவங்கள் நடைபெற்ற மறுதினமே பிபிசி வெளியிட்டது. வடக்கில் பணியாற்றும் அரச சார்பற்ற சர்வதேசத் தொண்டர் நிறுவனங்கள் தமது தலைமையகங்களுக்கு அனுப்பிய தகவல்கள் மற்றும் விடுதலைப் புலிகளின் சர்வதேச நிலையத் தகவல் மையங்களில் இருந்து பெற்ற செய்திகளை பிபிசி ஒலி பரப்பிய போது அரசின் செய்தித்தணிக்கை எவ்வளவு தூரம் பலனளிக்கக்கூடியது என்பதைத் தொட்டுக்காட்டியது. நாகர்கோவில் மகா வித்தியாலயம் மீதான குண்டுவீச்சினாற் பாடசாலைச் சிறுவர்கள் கொல்லப்பட்ட செய்திகள் சில மேற்கத்திய செய்தித்தாள்களின் முக்கிய செய்திகளாக இடம்பிடித்ததாகக் கூறப்படுகின்றது.

இன்றைய நவீன தொழில்நுட்பத் தகவற் பரிமாற்ற யுகத்தில் முழு உலகே ஒரு சிறு கிராமமாகக் குறுக்கப்பட்டுள்ளது. பொசனியாவில் நடப்பது சில மணி நேரங்களில் வவுனியாவில் இருப்பவருக்கு தெரிந்து விடுகின்றது. இத்தகைய நிலையிற் தகவல்களைத் தடுப்பது எவ்வளவு



கடினம் என்பதை, காங்கேசன்துறை மற்றும் நாகர்கோவில் என்னும் சம்பவங்களும் சிறீலங்கா அரசிற்குத் தெளிவாகவே உணர்த்தியிருக்கின்றது. இத் தகவல்களைச் சிறீலங்கா அரசுத் தொடர்புச் சாதனங்கள் விழுந்தடித்து மறுநாள் மறுத்ததில் இருந்தே இது தெரிகின்றது.

இலங்கையந்தன்

## தடை ஏன்?

ஜேஆர் அரசின் காலத்திலும் 1985 வைகாசி மாத இறுதிப் பகுதியிலும் அப்போதைய சூழ்நிலைகளை அடுத்துக் கடும் செய்தித் தணிக்கை அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. அக்காலத்திற் செய்தித்தாள்களிற் செய்திகளை விடத் தணிக்கை செய்யப்பட்டது என்ற குறிப்பே செய்தித்தாள்களை அதிகமாக ஆக்கிரமித்திருக்கும். ஜே. ஆர். அரசின் இந்தசெய்தித் தணிக்கை அமுலான பின்பே இனப்படுகொலைகளும் இராணுவத்தாக்குதல்களும் அதிகளவில் முடுக்கிவிடப்பட்டன.

## கொழும்புப் பத்திரிகைகள்

இராணுவம் தொடர்பான செய்திகளைக் கொழும்பிலுள்ள சில பத்திரிகைகள் வெளியிடுவதினால் முக்கிய இராணுவ இரகசியங்கள் புலிகளுக்கும் கிடைத்துவிடுகின்றது. எனவே இது புலிகளுக்குச் சாதகமான நடவடிக்கையே என அண்மைக்காலமாகச் சில அமைச்சர்கள்-அநுருத்த ரத்வத்த உட்பட-குற்றஞ்சாட்டி வந்தனர். இதன் தொடர்தான் அரசின் செய்தித்தணிக்கை எனச் சில தரப்பினர் கருதுகின்றனர். ஆனால் அரசபடைகள் குறித்த இரகசியத் தகவல்களை கொழும்புப் பத்திரிகையாளர்களை விட புலிகளின் உளவுப் பிரிவினர் அதிகமாகவே அறிந்துள்ளனர் என அண்மையிற் கொழும்புத் தினசரி ஒன்றின் இராணுவ விமர்சகர் ஒருவர் எழுதியிருந்தமையை இங்கு சுட்டிக் காட்டுவது பொருந்தும்.

உண்மையற் கொழும்புப் பத்திரிகைகளில் வெளியாகும் இராணுவச் செய்திகள், கட்டுரைகள், ஆய்வுகள் என்பன முக்காற் பகுதிக்கு வெறும் கட்டுக்கதைகளாகக் கற்பனை வடிவங்களாகவே இருப்பதை அவதானிக்க முடியும். இராணுவ உயர்பீடத்தின் உள் முரண்பாடு அல்லது அதிகாரிகளின் பதவி மற்றும் இடமாற்றம் தொடர்பான தகவல்கள் மட்டுமே இவற்றில் ஏற்கக்கூடிய உண்மைகளாக இருக்கும்.

பத்திரிகைகளுக்கு முழுச் சுதந்திரம் எனத் தேர்தல் வாக்குறுதிகளை அள்ளி வழங்கி ஆட்சியிலமர்ந்த சந்திரிகா அரசைக்கண்டு மனங் குளிர்ந்த, இந்தத் தென்னிலங்கைப் பத்திரிகையாளர்கள் இன்று அதே சந்திரிகா அரசின் இரும்புக் கரப்பிடிக்குள் சிக்கித் திணறுகின்றனர். அரசின் போர் தொடர்பான செய்தித் தணிக்கையாற் தமது ஞாயிறு வார இறுதிப் பதிப்புகள் பெரிதும் பாதிக்கப்பட்டு விட்டதாகவும், அரசின் இத்தடை அதன் பலவீனத்தையே காட்டுவதாகவும், தடையினால் வீண் வதந்திகளே பரவ வழி ஏற்பட்டுள்ளதாகவும் இப்பத்திரிகைகள் ஓலமிடத் தொடங்கியுள்ளன.

அரசின் போர் தொடர்பான செய்தித்தணிக்கையாற் தமது ஞாயிறு வார இறுதிப் பதிப்புகள் பெரிதும் பாதிக்கப்பட்டு விட்டதாகவும், அரசின் இத்தடை அதன் பலவீனத்தையே காட்டுவதாகவும், தடையினால் வீண் வதந்திகளே பரவ வழி ஏற்பட்டுள்ளதாகவும் இப்பத்திரிகைகள் ஓலமிடத் தொடங்கியுள்ளன.

தற்போதைய போரில் தாம் அடுத்தடுத்துச் சந்திக்கும் தோல்விகளுடன் எப்படிச் சிங்கள மக்கள் முன்னே முழிப்பது, அவர்களால் நிராகரிக்கப்பட்டு விடுவோமோ என அரசு அஞ்சியதன் வெளிப்பாடே இத் தணிக்கை ச்சட்டம்.

தற்போதைய போரில் தாம் அடுத்தடுத்துச் சந்திக்கும் தோல்விகளுடன் எப்படிச் சிங்கள மக்கள் முன்னே முழிப்பது, அவர்களால் நிராகரிக்கப்பட்டு விடுவோமோ என அரசு அஞ்சியதின் வெளிப்பாடே இத் தணிக்கைச்சட்டம். பிரமாதமான பிரச்சாரங்களுடன் கடந்த ஆடி மாதத்தில் எடுக்கப்பட்ட முன்நோக்கிய பாய்ச்சல் நடவடிக்கை படுதோல்வியடைந்த பின் சிக்கலில் மாட்டிய சந்திரிகா அரசு அப்போதே இந்தச் செய்தித்தணிக்கைத் திட்டத்திற்கு ஆலோசித்திருக்க வேண்டும்.

அண்மைக்காலமாகச் சில சிங்கள, ஆங்கிலப் பத்திரிகை நிறுவனங்கள் மீதான இரகசியப் பொலிசாரின் பாய்ச்சலும், பத்திரிகைகள் 'இராணுவ வட்டரங்கள் கூறின' என்ற சொற்பதத்தை ஆதாரமின்றிப் பொறுப்பற்றவிதத்திற் பாவிக்கக்கூடாது எனப் பாதுகாப்பு அமைச்சின் அண்மைக்கால எச்சரிப்பும் இதை உறுதிப்படுத்துகின்றன. சந்திரிகா அரசு நாட்டு நலனுக்காகவும், மக்கள் நலனுக்காகவும் செய்தித்தணிக்கையை அமுல்படுத்தியதாகக் கூறுகின்றது. 'ஒரு பழத் தோட்டத்தில் அரிக்கும் புழுக்களைத் தடுக்க அச்சடித்த அறிக்கைகளைத் தயாரிப்பது" போல் பயனற்ற ஒரு நடவடிக்கையாகவே அரசின் இந்த செய்தித்தணிக்கை நடைமுறையும் முடியும்.

இதைத்தான் இந்தத் தணிக்கை நடைமுறை அமுலுக்கு வந்த இந்த ஒரு வாரத்திற்குள் நடந்த சம்பவங்களும் வெளிநாட்டுச் செய்தியாளர்கள் மீதான தடை நீக்கமும் கட்டியம் கூறி நிற்கின்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஆளுநங்கட்சியிலும் எதிர்க்கட்சியிலும்

## அரசியல் மையமாகும் அனுரா

சிறீலங்காவின் அரசியலில் அனுரா பண்டார நாயக்காவின் பெயர் மீண்டும் அடிபடத் தொடங்கியுள்ளது. அனுரா, ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணியின் பிரமுகரா அல்லது ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினரா என்பதிற் பலருக்கும் சந்தேகம் ஏற்படும் விதத்தில் அவரது செயற்பாடுகள் அமைந்து வருகின்றன.

அந்தவகையில், பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா தனது கடைசி மகனின் மேற் செலுத்தும் பாசம் இன்று வெளிப்படையாகவே பல அரசியற் சிக்கல்களையும் தோற்றுவித்துள்ளது எனலாம்.

அனுரா பண்டாரநாயக்காவின் செல்வாக்குப் பெருகுவ தென்பது ஜனாதிபதி சந்திரிகா குமாரணதுங்காவைப் பொறுத்தவரை யில் வேப்பங்காயாகவே அன்று தொட்டு இருந்தவருகிறது.



இந்தநிலையில் ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினரான அனுரா பண்டாரநாயக்கா, பொதுஜன ஐக்கிய முன்னணியிற் செல்வாக்குப் பெறும் வழிகளை ஒரங்கட்டுவதற்குச் சந்திரிகா குமாரண துங்க பெரும் முயற்சிகளை மேற்கொண்டுவருகிறார்.

அனுராவின்மேல் சந்திரிகா காட்டும் இந்தவெறுப்பு, சந்திரிகாவை எதிர்ப்பவர்களை அனுரா வின் ஆதரவாளராக, அனுதாபம் காட்டுபவர்களாக மாற்றிவிடுவதாக அவதானிகள் கூறுகின்றனர்.

கடந்த செவ்வாயன்று இடம் பெற்ற அனுரா, சந்திரிகா ஆகியோரின் தகப்பனும், முன்னாள் பிரதமருமான எஸ் . டபிள்யூ . ஆர் . டீ. பண்டாரநாயக்காவின் சிரார்த்ததின த்தன்று இந்தக் குடும்ப மோதல் ஹொரகொல்லை சமா தியில் வெளிப்பட்டது.

அனுரா பண்டாரநாயக்கா தனது தகப்பனின் சமாதிக்கு உத்தியோகபூர்வமாக முக்கிய பிரமுகர்கள் அஞ்சலி செலுத்தும் வேளையில் அஞ்சலி செலுத்துவதற்கு அனுமதி வழங்கப்படவில்லை.

இதையடுத்து அனுராவும், சந்திரிகாவின் மூத்த சகோத ரியான சுனேத்ரா ரூபசிங்காவும், முக்கிய பிரமுகர்கள் அஞ்சலி செலுத்திய பின்னரே ஹொரகொல்லை சமாதிக்குச் சென்றனர்.

சாதாரண பொதுமக்களோடு அவர்கள் கலந்து சென்று அஞ்சலி செலுத்துவதை அரச தொடர்புச் சாதனங்களும் முற்றாகவே இருட்டடிப்புச் செய்தன.

இந்த வைபவத்திற்கு முதல் நாள் - அதாவது கடந்த திங்களன்று பிரதமர் சிறிமாவோ பண்டாரநாயக்கா அனுராவுடன் தொலைபேசியிற் பேசினார். "நானும் உன்னோடு சேர்ந்து தந்தையின் சமாதியில் அஞ்சலி செலுத்த விரும்புகின்றேன். ஆனால், உனது அக்கா அமைச்சரவை உறுப்பினர்களோடு என்னை வருமாறு வற்புறுத்துகின்றார்" எனக் கூறினார்.

இதற்கு அனுரா, "நீங்கள் அமைச்சர்கள் என்ற ரீதியிலேயே ஹொரகொல்லைக்குப் போங்கள். உங்களைத் தூக்கி வீசுவது பற்றித் தீவிரமாக ஆராயப்பட்டு வரும் நிலையில் அவதானமாக நடந்து கொள்ளுங்கள்" என்று தெரிவித்தார்.

இது மட்டுமல்லாமல், கடந்த ஒரு வார காலமாகவே அனுராவின் மேலான சந்திரிகாவின் பாய்ச்சல்கள் அதி-கரித்து வருவதைத் தென்னிலங்கைப் பத்திரிகைகள் பலவும் சுட்டிக் காட்டுகின்றன.

அமைச்சரவையின் இரகசியத் தீர்மானங்கள் அனுரா வினால் வெளியே கொண்டு போகப்படுகின்றன. அமைச்சரவை விடயங்களை அனுராவுக்கு கூறுபவர்கள் யாராக இருந்தாலும் அவர்களின் மேற்கடுமையான நடவடிக்கை எடுக்கப்போவதாகச் சந்திரிகா குமார ணதுங்க கடந்த வாரம் நடந்த கூட்டத்திற் தெரிவித்தார்.

அதன்போது சிறிமாவோ, "யார்! அனுராவைச் சொல்லுகிறாயா!" என்று கேட்டபோது, "ஆம், அனுராவைத்தான் சொல்லுகிறேன்" என்று சந்திரிகா கடுமையாகக் கூறியதாகத் தென்னிலங்கைப் பத்திரிகை-யொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

'த ஐலன்ட்', 'திவயின' பத்திரிகைகளுக்கும் அனுராவே அரசின் இரகசியத் தகவல்களை வழங்குவதாகவும் சந்திரிகா குற்றம் சுமத்தியுள்ளார்.

அனுராவின் தாய் மாமனான சீவலி ரத்வத்தவே 'த ஐலன்ட்', 'தீவயின' பத்திரி கையின் உரிமையாளராக இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

அனுராவுக்கு வக்காலத்து வழங்கு வதற்காகத் தன்னை நோயாளி எனக் காரணம் காட்டி ஒதுக்க முயற்சிகளைச் சந்திரிகா எடுத்து வருவதாகவும், சிறிமாவோ பண்டாரநாயக்கா வேதனையோடு தனது குடும்ப நண்பரொருவருக்குத் தெரிவித்தும் உள்ளார்.

தன்னை விரைவிற் பிரதமர் பதவியிலிருந்து மாற்று வதற்கான முயற்சிகள் தீவிரமடைந்துள்ளதாகவும் தர்மசிறி சேனநாயக்கா, ரிச்சாட் பத்திரான, ரட்ணசிறி விக்கிரமநா யக்கா போன்றோர் தனது பதவிக்குப் போட்டி யிடுவதாகவும் தெரிவித்துள்ளார்.

அனுராவுக்கு ஆதரவாகப் பொதுஜன ஐக்கிய முன்னணியிற் சில சக்திகள் தீவிரமாக இறங்கியுள்ளதைக் கண்டு ஐக்கிய தேசியக் கட்சியும் தனது அரசியல் இலாபங்களுக்காக அனுராவை இன்னும் இறுகப்பிடிக்கும் முயற்சிகளில் இறங்கியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரசார நடவடிக்கைகளுக்கான பொறுப்பாளராகவும், கம்பஹா மாவட்டத்தின் ஐ.தே.க. அமைப்பாளராகவும் அனுராவைச் ஸ்ரீகோத்தா நியமித்து ள்ளது.

கம்பஹா மாவட்டத்தின் ஐ.தே.க. கிளைக் காரியாலயம் ஹொரகொல்லையிலேயே அமைக்கப்பட்டுள்ளதும் கவனி க்கத்தக்கது.

அண்மையில் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் 89-வது பிறந்த தினம் கொழும்பின் மூன்று நட்சத்திரக் ஹோட்டலான கொலிடேயின்னில் கொண்டாடப்பட்டபோது அனுராவின் முக்கியத்துவம் அங்கு பிரகடனப்படு த்தப்பட்டது.

மத்தியில் ஜே.ஆர். ஜெயவர்த்தனா அமர்ந்திருக்க அவருக்கு இருபுறமும் ரணில் விக்கிரம சிங்காவும், அனுராவும் அமர்ந்திருந்தனர். அடிக்கடி அனுராவோடு பேசவும் செய்தார் ஜே. ஆர்.

விழாவின் இறுதியில் ஜே.ஆர். ஆற்றிய உரையும் அனுராவை மேலும் ஐ.தே.க.வின்பால் வசப்படுத்து வதாகவே இருந்தது.

தொடர்ச்சி 16 ஆம் பக்கம்

**அனுராவின் மேலான சந்திரிகாவின் பாய்ச்சல்கள் அதிகரித்து வருவதைத் தென்னிலங்கைப் பத்திரிகைகள் பலவும் சுட்டிக் காட்டுகின்றன.**

**அமைச்சரவையின் இரகசியத் தீர்மானங்கள் அனுராவினால் வெளியே கொண்டு போகப்படுகின்றன. அமைச்சரவை விடயங்களை அனுராவுக்கு கூறுபவர்கள் யாராக இருந்தாலும் அவர்களின் மேற் கடுமையான நடவடிக்கை எடுக்கப்போவதாகச் சந்திரிகா குமாரணதுங்க கடந்த வாரம் நடந்த கூட்டத்திற் தெரிவித்தார்.**

# அடித்தளத்தை சிதைக்க

'சிறீலங்கா இராணுவம் மேற்கொள்ளும் தாக்குதல் நடவடிக்கைகள், விடுதலைப் புலிகளுக்கு எதிரானது மட்டுமே ஒழிய, தமிழ் மக்களிற்கு எதிரானது அல்ல. இது ஒரு சமாதானத்திற்கான போர் ஆகும்' என சிறீலங்கா அரசு குடாநாட்டில் நடாத்தும் தாக்குதல்களிற்கு விளக்கம் கூறுகின்றது. ஆனால், சிறீலங்கா இராணுவம் மேற்கொள்ளும் ஒவ்வொரு தாக்குதல் நடவடிக்கைகளின் போதும் அப்பாவித் தமிழ் மக்கள் கொல்லப்படுவதும், தமது வாழ் விடங்களையும், விளைநிலங்களையும், பெரும் பொரு ண்மியச் செயற்பாடுகளையும் கைவிட்டுவிட்டு வெளி யேறுவதும் வழமையானதாகும். இந்தவகையில், குடாநாட்டிற் தற்பொழுது வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் சனத்தொகையில் அரைவாசிக்கு மேலானோர் தமது குடியிருப்புக்களை விட்டு இடம்பெயர்ந்த நிலையிலேயே வாழ்கின்றனர். இதே சமயம், கடந்த சித்திரை 19 ஆம் நாளுக்குப் பின்னர் இராணுவம் மேற்கொண்ட தாக்குதலிற் சுமார் 400க்கு மேற்பட்ட அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டும் 2000க்கும் மேலானோர் காயம் அடைந்துமுள்ளனர். மேலும் கொல்லப்பட்ட மக்கள் சண்டைகளிற்கு இடையில் சிக்கி கொல்லப்பட்ட மக்கள் அல்ல. சண்டை இடம்பெறும் பகுதிகளிற்கு அப்பால் தொலைதூரத்தில் சுமார் 10 'கிலோமீற்றர்' அப்பால் இருந்தும்கூட கொல்ல ப்பட்டுள்ளனர். இதிலும் தம்மீது தாக்குதல் ஏதும் நடாத்தப்படும் என்ற உணர்வுகூட இல்லாத பகுதியில் இருந்த மக்கள் கூடக் கொல்லப்பட்டுள்ளனர். அத்தோடு, பெருமளவிலான தமிழ் மக்களினது சொத்து க்கள் சிறீலங்கா இராணுவத்தால் அழிக்கப்பட்டும், சூறையாடப்பட்டும் உள்ளன. ஆயிரக்கணக்கான மக்கள் வாழ்விற்குத் தேவையான பொருண்மிய மூல வளங்களும் அழிக்கப்பட்டுள்ளன. அல்லது அப்பகுதி யிலிருந்து மக்கள் விரட்டப்பட்டுள்ளனர். இந்தநிலை யில், தமிழ்மக்கள் மீது தாக்குதல் நடாத்துவதோ அன்றி அவர்களைக் கொலை செய்வதோ, துன்புறுத்து வதோ எமது நோக்கம் அல்ல என்ற சந்திரிகா அரசினது பேச்சுக்கள் யதார்த்தத்திற்குக் புறம்பானவை மட்டுமல்ல கேலிக்குரியவையுமாகும். விடுதலைப் புலிகளிற்கு எதிரான தாக்குதல் என்ற ரீதியில் சிறீலங்கா அரசு மேற்கொள்ளும் தாக்குதல்கள், நீண்டதொரு ஒடுக்குமுறைத் திட்டம் கொண்ட நோக்கமாகும். இது தமிழ் மக்களின் சமூக பொருண்மிய வாழ்வைச் சிதைப்பது மட்டுமன்றி, தமிழர் தேசியம் என்பதைச் சிதைக்கும் அழிக்கும் நோக்கம் கொண்டதுமாகும். தமிழீழ விடுதலைப் போராட்டமானது, ஆயுதப்போரா ட்டமாகக் கூர்மையடைந்து சுமார் 12 ஆண்டுகள் கடந்துவிட்டன. இக்காலகட்டத்தில் சிக்கலுக்குத் தீர்வுகாண சிறீலங்கா அரசானது இராணுவ ரீதியில் தன்னாலான சகல முயற்சிகளையும் செய்து பார்த்து விட்டது. ஆனால் போராட்டத்தைத் தோற்கடிக்கவோ அல்லது கட்டுப்படுத்தவோ அதனால் முடியவில்லை. அதற்கு மாறாகப் போராட்டம் வலுவுள்ளதாகவும், உறுதியானதாகவும் வளர்ந்தே வந்துள்ளது. இதற்குத் தமிழ் மக்களின் சமூக, பொருண்மியக் கட்டமைப்பு உறுதியானதாக இருந்து வந்தமையே காரணமாகும். இதுவே தமிழ் மக்களினது தேசியத்தை விடாது உறுதிப்பாடானதாக வைத்திருந்தது. இந்த நிலை யிற்தான் தற்பொழுது தமிழ்மக்களின் சமூக, பொருண்மியக் கட்டமைப்பை முற்றாகச் சிதைத்து அழித்து விடவேண்டும் என்று சிறீலங்கா அரசு கங்கணம் கட்டி நிற்கின்றது. இதற்கான ஒரு வழியாகவே தமிழ் மக்களை அவர்களின் வாழ்விடங்க ளிலிருந்தும், விளைநிலங்களிலிருந்தும் விரட்டிவிட அரசு முனைகின்றது. இது அவர்களின் பொருண்மிய வாழ்வைச் சிதைத்து, சமூகக் கட்டுமானங்களை அழித்துவிடும் என அரசு கருதுகின்றது. அதாவது அகதிமுகாம்களில் இடம்பெயர்ந்த நிலையில் வாழும் மக்களின் தேசியப் பண்புகள் கலைக்கப்பட்டுவிடும் என்ற நீண்ட நோக்கில் சிங்கள அரசு செயற்படுகின்றது. இதன் காரணமாகப் படிப்படியாக விடுதலைப் போரா ட்டமும் பலவீனப்பட்டுப் போய்விடும் என்பதோடு, இராணுவரீதியில் தோற்கடிக்கக் கூடியதாக இருக்கும் எனவும் சிறீலங்கா அரசு கருதுகின்றது.

இந்தநிலையில் இன்று தமது தேசியத்தைக் காப்பதற்கான பெரும் போராட்டத்தை நடாத்த வேண்டிய ஒரு வரலாற்றுக் கட்டத்தில் தமிழ்மக்கள் இலங்கையில் இருக்கின்றார்கள். இன்று, தமிழ்மக்கள் தமது போராட்டத்திலிருந்து பின்வாங்குதல் அல்லது தாமதித்தல் என்பது, இலங்கையில் தமிழ்த் தேசியம் கேள்விக்குறியாக்கப்பட்டுவிடும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முன்னோக்கிய பாய்ச்சல் தோல்வி:

# களநிலை புரியாத அதிகாரிகளும் விநியோகச் சிக்கலுள்ள இராணுவமும்

1983 இல் ஈழப்போர் ஆரம்பித்தபோது 12 ஆயிரம் பேருடன் இருந்த சிறீலங்கா இராணுவத்தின் பலம் இப்போது ஒரு லட்சமாகியுள்ளது. வருடாந்தம் 15 பில்லியன் ரூபா செலவிடப்படுகிறது. மனிதவலு, ஆயுதபலம் என்பவற்றில் இராணுவம் அபரிமிதமான வளர்ச்சி கண்டுள்ளது. எனினும் இராணுவம் இப்போது எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினை பாரிய நடவடிக்கைகளின் போது படையினருக்கான விநியோகமேயாகும்.

> இராணுவ நடவடிக்கைகளின்போது ரவைகளுக்கு ஏற்படும் பற்றாக்குறைக்கு அனுபவமற்ற பிரிகேட் அதிகாரிகளை நியமிக்கும் இராணுவ உயர்பீடமும் பொறுப்பேற்க வேண்டும். பாரியளவு இராணுவ நடவடிக்கையில் ஈடுபடாத அனுபவம் ஏதுமற்ற கள அதிகாரிகளே வடக்குப் போர்முனையிற் தற்போது பணியாற்றுகின்றனர். அவர்களின் போர் திட்டமிடற் திறமையின்மைக் காரணத்தாலும் அச்சத்தின் காரணத்தினாலும் அவர்கள் ரவைகளை அதிகளவிற் செலவழித்து விடுகின்றனர். லீப் போவேட் நடவடிக்கையின் முதல் ஐந்து தினங்களில் 6000 சுற்று ஆட்லறி எறிகணைகள் செலுத்தப்பட்டிருக்கின்றன. போர் வரலாற்றில் அதிகளவில் பாவிக்கப்பட்ட ஆட்லறி எறிகணை வீச்சாக இது இருக்கலாம். இது இராணுவ எதிர்ப்புத் திறன் இன்மையைக் காட்டுகின்றது.

இராணுவத்திற்கான விநியோகத்திற்கான வழிமுறைகளைப் பலப்படுத்தாது இராணுவ ஆட்பலத்தை அதிகரிப்பதிலேயே கடந்த காலங்களிற் பதவி வகித்த பாதுகாப்பு அமைச்சர்களும் இராணுவத்தளபதிகளும் குறியாக இருந்தனர். மரபுவழி போரிடும் படைக்கு விநியோக உதவி எப்போதும் ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் இருக்க வேண்டும்.

"பயனைட்டுகள்" என இராணுவத்திற் சுருக்கமாக அழைக்கப்படும் போரிடும் சிப்பாய்க்கும் அவருக்கான விநியோக உதவிச் சிப்பாய்க்கும் இடையில் ஒரு விகிதாசாரம் இருக்கவேண்டும். அதாவது ஏழு போராடும் சிப்பாய்களுக்கு மூன்று உதவும் சிப்பாய்கள் என இந்த விகிதாசாரம் இருக்கவேண்டும். ஆனாற் புலிகளுக்கு எதிரான போரில் இராணுவ ஆட்பலத்தை அவசர அவசரமாக அதிகரிப்பதே நோக்கமாக இருந்ததால் சிறீலங்கா இராணுவத்தில் ஆறு போராடும் சிப்பாய்களுக்கு ஒரேயொரு உதவும் சிப்பாய் மட்டுமே உள்ளார். இதுவே குடாநாட்டில் எடுக்கப்பட்ட ஒப்பரேஷன் லீப் போவேட் இராணுவ நடவடிக்கை தோல்வியடைந்தமைக்குக் காரணம். இந்த இராணுவ நடவடிக்கை விநியோகங்கள் சரியான சமயத்திற் கிடைக்காததால் 72 மணி நேரம் தாமதித்தே ஆரம்பிக்கப்பட்டது. மூன்று நாள் கழித்து நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டபோதும் கூடத் தேவையான விநியோகம் கிடைத்திருக்கவில்லை. 78 சதுர கிலோ மீற்றரைப் பிடித்ததாக இராணுவம் அறிவித்த பின்னர், அது தன்னிடம் சடுபடைத்திறன் குறைந்து விட்டதை உணர்ந்தது. இதே போன்றுதான் முன்னைய இராணுவ நடவடிக்கையின் போதும் நடந்தது. ஆனாற் தவறு திருத்தப்படவில்லை. யாழ்தேவி இராணுவ நடவடிக்கையிலும் இதுதான் நடந்தது. லீப் போவேட் நடவடிக்கையின் போதான விநியோகச் சீர்கேட்டிற்குக் காரணம் திட்டமிடலின்மையே. இராணுவத்தின் திட்டம் புதிதாகத் தாம் கைப்பற்றிய பகுதிகளிற் பதுங்கு குழிகளை அமைத்து முன்னணிக் காவல் நிலையை அமைப்பது என்பதே. ஆனாற் புலிகள் நடத்திய புலிப்பாய்ச்சல்



நடவடிக்கை களத்தில் நின்ற படை அதிகாரிகளுக்குக் கிலியூட்டியது. முன்னணிக் காவல் நிலைகளை அமைப்பது பயனற்றது என அவர்கள் பலாலிக்கே பின்வாங்கினர்.

தரை நிலைமைக்கும் தேவைகளுக்கும் இடையிலான வேறு பாட்டைச் சில அதிகாரிகள் அறியாதிருந்தமை குறித்து ஆச்சரியம் தெரிவிக்கப்படுகிறது. வடக்கின் முக்கிய நிலையான பலாலியைப் பாதுகாக்கப் பெருமளவு படையினர் நிறுத்தப்பட்டுள்ளனர். பலர் தமது உயிரை இழந்திருக்கின்றனர். பலாலியைப் பாதுகாக்க இவ்வளவு பெரிய தொகையிற் படையினர் அவசியமில்லை எனில் அவர்கள் வடக்கு-கிழக்கில் பல இராணுவ நடவடிக்கைகளுக்கு பயன் படுவர். இதனால் எதிர்காலத்தில் நகரும் முன்னிலைக் காவற் திட்டத்தை (Mobile Defence System) பிரயோகிக்கத் திட்டமிடப்படுகின்றது.

90 சதவீதமான விநியோகத்தை வடக்கிற்குக் கொண்டு வரும் கடற்படை கூடக் காங்கேசன்துறை தாக்கப்படுவதாற் பெரும் சிக்கலுக்குள்ளாகி உள்ளது. 1990 முதல் கடற்படையின் அரைப்பகுதிக் கடற்கலன்கள் கடற்புலிகளால் அழிக்கப்பட்டுவிட்டது.

இராணுவ நடவடிக்கைகளின் போது ரவைகளுக்கு ஏற்படும் பற்றாக்குறைக்கு அனுபவமற்ற பிரிகேட் அதிகாரிகளை நியமிக்கும் இராணுவ உயர்பீடமும் பொறுப்பேற்க வேண்டும். பாரியளவு இராணுவ நடவடிக்கையில் ஈடுபடாத அனுபவம் ஏதுமற்ற கள அதிகாரிகளே வடக்குப் போர்முனையிற் தற்போது பணியாற்றுகின்றனர். அவர்களின் போர் திட்டமிடற் திறமையின்மைக் காரணத்தாலும் அச்சத்தின் காரணத்தினாலும் அவர்கள் ரவைகளை அதிகளவிற் செலவழித்து விடுகின்றனர். லீப் போவேட் நடவடிக்கையின் முதல் ஐந்து தினங்களில் 6000 சுற்று ஆட்லறி எறிகணைகள் செலுத்தப்பட்டிருக்கின்றன. போர் வரலாற்றில் அதிகளவில் பாவிக்கப்பட்ட ஆட்லறி எறிகணை வீச்சாக இது இருக்கலாம். இது இராணுவ எதிர்ப்புத் திறன் இன்மையைக் காட்டுகின்றது.

இரண்டாவது பிரச்சினை, நடவடிக்கையில் ஈடுபடும் படையினரின் கண்டபடியிலான பரவலான துப்பாக்கிச் சூடு. சிப்பாய் ஒருவன் எதிரி மீது சரியாகச் சூடு நடத்தாவிடின் எதிரி அவ்விடத்திற்கு முன்னேறி விடுவான் என இராணுவ விதி கூறுகின்றது. சிப்பாய்கள் பற்றைக்கு பின்னாலும் புலிகள் இருக்கலாம் என அஞ்சித் தாம் நடக்கும் பாதை நெடுகிலும் காணும் ஒவ்வொரு பற்றைக்கும் சூடு நடத்திக்கொண்டு போகின்றனர். சிறப்பான பயிற்சியின்மையும், அனுபவமின்மையுமே இதற்குக் காரணம். இது ரவைகளுக்கான



பற்றாக்குறையைக் களத்தில் ஏற்படுத்துவதோடு ஏற்கனவே குறைவாக இருக்கும் விநியோகத்தை மேலும் சிக்கலுக்குள்ளாக்கிவிடும்.

லீப் போவேட் படையினர் பின்வாங்க ஆரம்பித்ததும் இராணுவத்தளபதியும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும் உடனடியாகவே அனைத்துப் பழிகளையும் மேஜர் ஜெனரல் றோகான் தளுவத்தையின் கைகளில் மாட்டிவிட்டுத் தப்பிக்கொண்டனர். பாதுகாப்புச்சபைக் கூட்டத்தில் ஜனாதிபதி தனக்கு விநியோக வழிச்சிக்கல் குறித்தோ அல்லது வேறு இராணுவத் தரப்பு விடயங்கள் குறித்தோ எந்தத்தகவலும் வழங்கப்படாது மறைக்கப்பட்டது எனக் கடுமையாகப் பேசினார். தன்னைத் தவறாக இவைவழி நடத்திவிட்டன என்றார். ஜனாதிபதியின் அனைத்து ஏச்சுக்களையும் மேஜர் ஜெனரல் றோகான் தளுவத்தவே ஏற்றுக்கொள்ள வேண்டியிருந்தது.



முன்னோக்கிய பாய்தலின்போது சுட்டுவீழ்த்தப்பட்ட விமானச் சிதறல்கள்

லீப்போவேட் இரண்டாவது பகுதி மாரியளவில் திட்டமிடப்படுகின்றது. அதே விநியோகப் பிரச்சினை இப்போதும் உள்ளது. முதல் நடவடிக்கையிலிருந்து இராணுவம் பாடம் படித்திருக்கும். இந்த நடவடிக்கைக்குத் திறமையான அனுபவமுள்ள படை அதிகாரிகள் நியமிக்கப்படலாம். முதல் நடவடிக்கைக்கு அரசியல்ரீதியாகத் திட்டமிடப்பட்டு அவசரமாக மேற்கொள்ளப்பட்டது. ஆனால் இனிநன்கு ஆயுத்தப்படுத்திய பின்பே ஆரம்பிக்க வேண்டும் அல்லது பேரழிவே ஏற்படும்.

> சிப்பாய் ஒருவன் எதிரி மீது சரியாகச் சூடு நடத்தாவிடின் எதிரி அவ்விடத்திற்கு முன்னேறி விடுவான் என இராணுவ விதி கூறுகின்றது. சிப்பாய்கள் பற்றைக்கு பின்னாலும் புலிகள் இருக்கலாம் என அஞ்சித் தாம் நடக்கும் பாதை நெடுகிலும் காணும் ஒவ்வொரு பற்றைக்கும் சூடு நடத்திக்கொண்டு போகின்றனர். சிறப்பான பயிற்சியின்மையும். அனுபவமின்மையுமே இதற்குக் காரணம். இது ரவைகளுக்கான பற்றாக் குறையைக் களத்தில் ஏற்படுத்துவதோடு ஏற்கனவே குறைவாக இருக்கும் விநியோகத்தை மேலும் சிக்கலுக்குள்ளாக்கிவிடும்.

**வருண கருணாதிலக**

நன்றி: கவுண்டர் பொயின்ற்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கடலோடிக் களங் காணும்



மதுஷாவுக்கு நாங்கள் வைத்த பட்டப் பெயர் நீர்க்காகம், கடலுக்குள் இறங்கி ஆள் நீந்தத்தொடங்கினாற் தலையை மேலுக்கு உயர்த்தி நீந்தும். ஆளின்ரை கறுப்பு நிறத்திற்கு அந்த நீச்சல் அசல் நீர்க்காகம் நீந்துறமாதிரி இருக்கும். வேகமான நீச்சற்காரி. அந்தத் திறமைதான் அவளை நீரடி நீச்சற் பிரிவுக்குத் தெரிவு செய்ய வைத்தது.

இரவு, பகல் பாராத கடல் வாழ்க்கை. அவர்களுக்கு வாழ்க்கையே கடல் தான். ஆனால் அதிலே அவள் சோர்வடைந்ததில்லை. சலிப்படைந்ததில்லை. அவள் கடற் புலிகள் பிரிவுக்கு வந்தபோது, தான் திருமலையிற் கரும்புலியாகப் போகவேண்டும் என்றே எல்லோரிடமும் கூறினாள். அதுபோலவே அவளுக்கு வாய்ப்புக்கிடைத்தது.

அவள் பிறந்து வளர்ந்து ஓடிவிளையாடிய, அடிக்கடி நினைவுகூருகின்ற திரியாயின் சாவி ஆற்றையும், அவள் படித்த கல்லாம்பத்தைப் பள்ளிக்கூடத்தையும் கொண்ட மண்ணிலே, அதன் கடலிலே வந்து குந்தியிருக்கும் எதிரிகளை அழிக்க வேண்டும், அங்கேதான் வீரச்சாவடைய வேண்டும் என்ற தாகம் அவளது ஆத்மாவுக்குள் ஊறியிருந்ததை நாங்கள் கண்டோம்.

அந்த அவளது கனவு நிறைவேறியபோது

சிறீலங்கா இராணுவத்தின் இரு பெரிய போர்க்கப்பல்களான சூரயா, ரணசறு எரிந்து போயின. பகைவனின் முதுகெலும்பாக இருக்கின்ற படைத்தளம் அமைக்கப்பட்டுள்ள திருமலைத் துறைமுகத்துள், சுற்றிவரப் பகைவனைச் சுமந்து நிற்கும் கடலுக்குள் வெகுதூரம் நீரினுள் மறைந்து சென்ற மதுஷாவும், சாந்தாவும், தணிகைமாறனும், கதிரவனும் கடலில் கரைந்து போயினர். அதுவே திருமலையின் முதற் கடற்கரும்புலித் தாக்குதலாகும். மூன்றாவது கட்ட ஈழப்போரின் முதலடியாகவும் அமைந்தது.

திருமலையின் கோட்டையிலே கொடியேற்றவேண்டும் என்ற அவளது கனவும், மீண்டும் சாவி ஆற்றிலே எம் மக்கள் குளிக்கவேண்டும் என்ற ஆசையும் எங்கள் காதுகளில் ஒலித்தபடி——

அவள் அடிக்கடி சொல்லுகின்ற,

'அந்த அம்புத்தலை வெள்ளி (வேட்டைக்காரன்) யில்தான் நான் இருப்பன் பாருங்கோ'என்று கீச்சக்குரலிற் சொல்லுகின்ற மதுஷா,

எங்கடை குறும்புக்காரி எங்களுக்குள் நிறைந்து போனாள்.

இயக்கத்திற் தன்னை இணைத்துக் கொண்ட குறுகிய காலத்துக்குள்ளேயே எம்மோடு இருந்து மின்னல் போல மறைந்துபோனது அவளது சாந்தமான முகம். அவள் அமைதியானவள். தேவையேற்படுகின்ற சந்தர்ப்பங்களுக்கு மாத்திரம் அவளது வாய் திறக்கும்.

1990 ஆம் ஆண்டின் ஒரு முன் நிலவில்—

இராணுவம் தீவுப்பகுதியைப் பிடித்தபோது சாந்தாவின் குடும்பம் புங்குடுதீவிலிருந்து சிதறிப்பிரிந்து, பின் ஒன்றாகி யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது. அவள்தான் வீட்டின்



மூத்தபிள்ளை. அதனாலோ என்னவோ அவளிடமிருந்த பொறுப்புணர்ச்சி, அவளது உழைப்பு அக்குடும்பத்துக்குத் தேவையாய் இருந்தது.

1993 இன் நடுப்பகுதியிற் சாந்தா கடற்புலிகள் மகளிர் படையணியின் ஐந்தாவது பயிற்சி முகாமிற் பயிற்சி எடுக்கும் போது, எதற்கும் சலிக்காத சகிப்புத்தன்மை அவளிடம் மிகுதியாக இருந்தது.

கால் தரையில் வைக்க முடியாதளவு பித்தவெடிப்பு ஏற்பட்ட போதெல்லாம் சப்பாத்துக்கள் அணிந்து தரைப் பயிற்சி எடுத்து, கடற்பயிற்சிகளை மிகுந்த திறமையோடு எடுத்தவள். தரையிலே பின்னின்ற பயிற்சிகளை, இரட்டிப்பாகத் திறமையாகக் கடலிலே கடற்பயிற்சியின்போது செய்தாள்.

பயிற்சி முகாமுக்கு வந்த பத்தாம் நாளே முதலில் நீந்தி, நீச்சற்பயிற்சி முழுவதும் முடித்து——

அவள் அசுர நீச்சற்காரிதான்.

யாருடனும் சீறிச்சினக்காத பண்பும் எல்லாருடைய வேலைகளையும் தன்தலையிற் போட்டு செய்கின்ற பண்பும் அவளை எல்லோரிடமிருந்தும் பிரித்து இனங்காட்டியது. எந்த வேலை செய்யும்போதும் தான்தான் முதலிற் செய்து முடிக்கவேண்டுமென்ற ஆர்வம் அவளிடம் மிகுதியாயிருந்தது.

திருமலைத் துறைமுகத்துள் அவளது கடைசிச் சண்டை அவளது எதிர்பார்ப்புக்கு ஏற்ப வெற்றியாக அமைந்தபோது, அவளது இறுதி வார்த்தைவோக்கியில்—

'மற்ற இலக்கையும் அடிக்க அண்ணை அனுமதி தந்தால்.'

கடலுக்குள்ளேயே உண்டு உறங்கி... அவளது காலம் குறுகியதுதான். ஆனால் கதை பெரியது.

தமிழினியின் வீரச்சாவைக் கேட்டு முல்லைத்தீவு-பொக்கணையிற் சனம் அழுதது. அவளிற் சனத்திற்கு மிகுந்த விருப்பம். அவள் அப்படித்தான் மக்களோடு பழகினாள். மக்கள் மத்தியில் வேலை செய்தாள்.

கடற்கரையில் கட்டுமரம் ஏற்ற ஐயா ஒருவர்சிரமப்பட்டுக் கொண்டிருக்கின்றார் என்றால் தமிழினி போய் மரத்தைத் தள்ளிக் கடலுக்குள் இறக்கி விடுவாள். யாரும் ஏழ்மைப்பட்ட சனத்தைக் கண்டால் கண் கலங்குவாள். அவ்வளவுதூரம் தமிழினி மக்களில் ஒருத்தியாய் மக்களின் இன்பதுன்பங்களில் பங்கேற்று நின்றவள். தனது குறுகிய கால அரசியற் செயற்பாடுகளில் மக்கள் மத்தியில் நிறைந்து போனவள்.



அவள்மேல் மிகுந்த பாசமாய் இருந்த அண்ணா ஒருவரை 1991ஆம் ஆண்டு காலப்பகுதியில் சிறீலங்கா நேவிப்படை கடலிலே பிடித்துக் கொண்டு போனது. போனது போனது தான். அவள் கொதித்துப்போனாள்.

'என்ரை அண்ணாவைப்பிடித்த நேவியை. அந்த போட்டை அழிக்க வேண்டும்' அவள் சொன்னாளாம்.

1992 ஆம் ஆண்டின் நடுப்பகுதியிற் கடற்புலிகள் மகளிர் படையணியின் முதலாவது பயிற்சி

முகாமிற் தமிழினி பயிற்சி எடுத்தாள். படகு ஓட்டுவது, நீந்துவது அவளுக்கு வலு இலகுவான விடயங்களாகவேயிருந்தன.

பின்னர் நளாயினி படையணியின் ஓட்டியாக நின்றாள். பூநகரி தவளைக் தாக்குதலுக்குப் பின்னர் அவள் தன்னை ஒரு கடற் கரும்புலியாய் இணைத்துக் கொண்டாள். அதன் பிறகு அவளது காலமெல்லாம் கடலோடு ஒன்றிப்போனது.

'புலிப்பாய்ச்சல்' இராணுவ அடியின் தொடராக நாம் கடலிலே கொடுத்த அடிக்கு, 'எடித்தாரா' தரையிறங்கும் கலத்தினை அழிக்கவெனச் சென்ற போது ஒரு இலக்கு வெற்றியளிக்க, மற்றையதைத் தாக்க முன்னர் எதிரியின் துப்பாக்கிச் சன்னங்கள் எமது படகைத் துளைத்ததில் படகு மூழ்கி— தமிழினி வரவேயில்லை.

மாதவி அக்காவின் 'பிக்அப்' முகாம வாசலில வந்து நின்றால், ஓடி வந்த பிள்ளைகள் வாகனத்துள் எட்டிப்பார்த்து, 'வைதேகியக்கா வரேல்லையே' என்பார்கள். எல்லாப் பிள்ளைகளுக்கும் வைதேகி யிலே விருப்பம்.



'ஏன் வைதேகியக்கா உங்களுக்கு ஒரு நாளும் கோபம் வாறேல்லையே' என்று பிள்ளைகள் கேட்கும் போது சிரித்தபடி நிற்பாளாம்.

வைதேகி

எங்கள் கண்களுக்குள் நிற்கும் சாந்தமான, அமைதியான போராளி. அவளது போராட்ட வாழ்க்கை குறுகியதுதான். ஆனால் கடற்புலிகள் மகளிர் படையினரின் செயற்பாடுகளுள் அவள் தனி முத்திரையைப் பதித்துக் கொண்டவள். கடற்புலிகளின் முதலாவது பயிற்சி முகாமில் பயிற்சியெடுத்த வைதேகி, பயிற்சி முகாமிலேயே குழுவை நிர்வகிக்கின்ற திறமையுள்ளவளாக இனங்காணப்பட்டாள். பொறுமையும், எதையும் தீவிரமாக யோசித்து, சரி பிழை பார்த்து முடிவெடுக்கின்ற தன்மையும் அவளிடம் எப்போதுமே இருந்தது. அவள் எந்தப் பிள்ளையையாவது உரத்து அதட்டி ஏசியதை நாங்கள் ஒருபோதும் கண்டதில்லை.

கடற்புலிகள் மகளிர் படையணி பங்கு பற்றிய அநேகமான கடற் சண்டைகளில் வைதேகியும் பங்கெற்றவள். கிளாலிக் கடலில் மக்கள் பாதுகாப்பு நடவடிக்கையிலும், பூநகரி தவளைத் தாக்குதலிலும், இன்னும் சாகரவர்த்தனா கடற்படைக் கப்பல் தகர்ப்புத் தாக்குதலின் போதும், மண்டைதீவு இராணுவ முகாம் தகர்ப்பின் போதும் அவள் பங்கேற்றவள். களங்களில் மட்டுமன்றி, நிர்வாக வேலைகளிலும் வைதேகியின் செயற்பாடு குறிப்பிடத்தக்கதாய் அமைந்தது. குறிப்பிட்ட கால அதிகாரிகள் பயிற்சியின்போது படிப்பில் மிகுந்த ஆர்வம் காட்டினாள்.

இறுதியாக, எம்மால் மேற்கொள்ளப்பட்ட கொக்குத் தொடுவாய் இராணுவமுகாம் தாக்குதலுக்குத் தரைவழிச் சண்டைக்கென்றே சென்றாள். அதுதான் அவளது கடைசிச் சண்டையாகவும் அமைந்தது.

'இந்தச் சண்டையிலை திரும்பி வந்து புலிப்பாய்ச்சலில் கடலில் விட்ட ஆயுதங்களைத் திரும்பவும் கடலிலை அடிபட்டு எடுப்பன்'

என்று கூறிச்சென்ற வைதேகி திரும்பி வரவே இல்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# பெண்புலிகள்

தன்னோடு ஒன்றாகப் பயிற்சி எடுத்து, ஒன்றாகவே கடற்புலிகள் மகளிர் படையணியை வளர்த்தெடுத்த தன் தோழியரை ஒவ்வொருவராக அனுப்பி வைத்ததை, இதயம் நம்பமறுத்த நிகழ்வுகளான அவர்களின் வீரச்சாவுகளை அவளால் தாங்கவே முடியவில்லை. ஆனாலும் அவர்கள் ஒவ்வொருவரது கனவுகளும் அவளுக்குள் குடி கொண்டிருந்தன. அந்தக் கனவுகளின் உயிர்ப்பாகச் சுகன்யா படையணியும், நளாயினி படையணியும், மங்கை படகு கட்டுமானப்பிரிவும் உயிர்பெற்று வளர்ந்த போது, மாதவியும் அவளது தோழியர் கலந்த கடலிலேயே கலந்து போனாள்.

எங்கள் மாதவி!

போராளிகளின் இதயங்களுக்குள் ஊடுருவி அவர்களின் மனங்களில் வாழ்கின்ற இனிய தோழி. அநேக பயிற்சி முகாங்களுக்கு அவள் பயிற்சி ஆசிரியராக இருந்ததாலோ என்னவோ, அவள் எங்கள் போராளிகள் எல்லோரது மனங்களையும் மிகுதியாகத் தொட்டுச் சென்றாள்.



'எங்கள் மாதவியக்கா' என்று கண்கலங்கி அவளை, அவளது திறமைகளை நினைவு கூரும் போராளிகள் ஏராளம். ஒவ்வொரு போராளியினதும் உணவிலிருந்து உடையிலிருந்து பயிற்சி, படிப்பு என்று எல்லாவற்றையும் அவளே கவனித்து, சின்னச் சின்ன விடயங்களிலும் அக்கறை எடுத்து எவரையும் குறையில்லாமல் வளர்த்தவள்.

தன் சொந்த வாழ்வில் மிகுந்த சோகத்தைச் சுமந்து வந்தபோராளிகளை நன்றாகக் கவனித்து அவர்களிடம் எந்தக் குறையும் தோன்றாதவாறு நடந்து கொள்கின்ற பண்பை நாம் மாதவியிடம் மிகுதியாகவே கண்டோம்.

லெப். கேணல் நளாயினியின் வீரச்சாவுக்குப்பின் கடற்புலிகள் மகளிர் படையணியை வளர்த்தெடுக்கின்ற பொறுப்பு மாதவியிடம் கொடுக்கப்பட்டது. அந்த நாள் தொடங்கி அதுவே அவள் மூச்சாக இருந்தது. ஒவ்வொரு போராளிகளும் துறைசார்ந்தவர்களாக வளர வேண்டும் என்பதை அடிக்கடி சுட்டிக்காட்டி, செயல்களிலும் காட்டினாள். அதேபோல தனக்குத் தெரியாத விடயங்களைத் துறைசார்ந்த போராளிகளிடம் கேட்டுத் தெரிந்துகொள்வதில் அவள் என்றுமே பின்னின்றதில்லை.

மிகக் குறுகிய காலத்துக்குள் கடற்புலிகள் மகளிர்படையணியின் வளர்ச்சிக்குள் அவளது அயராத உழைப்பும், போராளிகளோடு பழகிய கணப்பொழுதுகளும் எங்களுக்குள் நீள நிறைந்து நிற்க, அவளது சுவடுகளில் ஆழப் பதிந்தவர்களாய், அவளது பெயரைச் சொல்பவர்களாய் கடலிலும் தரையிலும் எங்கள் மகளிர் படையணி—

# முடிவு உன் கையில்!



உன் உள்ளக் குமுறலின்
உள்ளார்ந்த வேதனைகள்
கோரமாயெரிந்து உன்னைக்
கொடுமைப்படுத்துகின்றன...
யுத்தம்.. வேண்டாம்.... என
உன் இதயம் சத்தமிடுகிறது
வேதனையொலிகளும், புண்பட்ட தோழரின்
போர்க்கள முனகல்களும்... மீண்டும்
உன்னுள் புதைந்து.. அந்த
கோர நாட்களை பிரசவித்துக்கொள்ளுகிறது.
வேண்டாம்! வேண்டாம்!
யுத்தமும் அதன் கோரச் சத்தமும்-என்
காதுகளில் விழவேண்டாமென
சத்தமிட்டது.
புரிந்து கொள்வார்களென்று
புதிய முகங்களிடம் முறையிட்டு... உன்
கோரிக்கைகள் நேரெதிரில் நிராகரிக்கப்படவில்லை
நிறைவேற்றப்படவுமில்லை...அவர்கள்
உன் மருந்துகளுக்கென்று
ஊராரிடம் உதவி சேர்த்தார்கள்.
அவற்றால்.....
தங்கள் கோட்டைச் சுவர்களை
உயரக்கட்டினார்கள்... உன்னை
சிறைவைத்து சித்திரவதை செய்ய
புதியவர்களை அமர்த்திக்கொண்டர்கள்...
யுத்தத்தின் சத்தங்களை-நீ
நிராகரிக்கின்றாய்...ஆனாலும்
வன்முறை உன்னை
வலிந்து இழுக்கின்றது.
வன்முறைக் கரங்கள்-உன்
வாழிடத்தில் வாளேந்தி நிற்கின்றன...
வாழ்வா? சாவா? நீ
இருபது ஆண்டுகள் இம்சைப்பட்டவன்
எதையும் எதிர்த்து நின்றவன்
முடிவு உன்கைகளில் மூச்சு விடுகின்றது...
எடுத்துக்கொள்!!

-அடம்பனூர் செ.திருமாறன்

# புறப்படு என் தோழா



தமிழ் ஈழம் காணவே வாருங்கள்- நம்
தலைவர் அணியிலே சேருங்கள்
பிரபாகரன் எனும் பேர் சொன்னால்
பெரும்பான்மை இனத்தின் படை பயந்தோடும்

பொங்கி எழுந்திடும் புலிகளின் வீரம்
என்றும் மறையாது
தங்குதடைகளைத் தாண்டிப் பாய்ந்திடும்
துணிவும் குறையாது
சங்கத் தமிழினம் சாய்ந்து போவதா
சங்கே எழுந்துவிடு
எங்கள் உயிரினம் என்றும் சாவதா
இன்றே முழங்கிவிடு
தலை குனிந்து போவதோ தாங்காது
இனிமேலும் தமிழினம் -தூங்காது



ஆண்ட பரம்பரை மீண்டும்
ஒருமுறை
ஆள்வதில் என்ன குறை
அடிமை விலங்கினை அறுத்து எறியவே
புறப்படு என் தோழா
அன்னை பூமியாம் ஈழ மண்ணையே
காத்திடு என் தோழா
கொடிய விலங்குகள் கூட்டத்தை நீயும்
அழித்திடு என் தோழா - ஒரு
கொள்கை இல்லா மனிதர்கள் தம்மை
பழித்திடு என் தோழா
புலிப்படையின் சாதனை பல நூறு - அதை
என்றும் எழுதுமே வரலாறு
தனி ஈழம் இங்கே நாமும் காணும்
தூரம் அதிகமில்லை

— யாழ்நகர் இளையபாரதி

www.tamilarangam.net



# வலிகாமத்தில்..

5 போராளிகள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர். தாயக மீட்புப் போரில் தம்முயிரை அர்ப்பணித்த இம்மாவீரர்களுக்கு எமது வீரவணக்கங்கள்.

சிறீலங்காவின் கொலைவெறி இனஅழிப்புப்படையினர் அளவெட்டியிலிருந்து ஏவிய கடுமையான எறிகணை வீச்சுக்களாலும், துப்பாக்கிப் பிரயோகத்தாலும் உடுவில், நவாலி, சண்டிலிப்பாய், மானிப்பாய், சங்கரத்தை, சங்கானைப் பகுதிகள் பாதிப்புக்குள்ளாயின. இரவில் தமது குடிமனைகளிலிருந்து பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்த மக்கள், மறுநாள் அதிகாலை வீடு திரும்பியபொழுது வீடுகள் பல சேதமடைந்திருந்ததைக் கண்டனர். இருந்த போதிலும் தெய்வாதீனமாக ஒருபொதுமகன் மட்டுமே, எறிகணை வீச்சால் காயமுற்றார்.

## அதிர்ச்சியால் மரணம்

பலாலி முப்படைத்தளத்திலிருந்து வடமராட்சிப் பகுதி, திக்கம், பொலிகண்டி ஆகிய மக்கள் குடியிருப்புப் பகுதிகள் நோக்கி ஏவப்பட்ட எறிகணை வீச்சின்போது ஏற்பட்ட அதிர்ச்சியினால் ஒருவர் மரணமடைந்தார்.

## மரக்கறிப் பங்கீடு நிறுத்தம்

யாழ். குடாநாட்டில் பணிபுரியும் அரச சார்பற்ற நிறுவனங்கள் சிறிலங்காவின் முன்னோக்கிப் பாய்தல், இடிமுழக்கம் ஆகிய இனஅழிப்பு முயற்சிகளின்போது அகதிகளான 8000 பொதுமக்களுக்கு வழங்கி வந்த மரக்கறிப் பங்கீட்டை நிறுத்தியுள்ளன. இவர்கள் தென்மராட்சிப் பகுதியில் 11 தற்காலிக முகாம்களில் தங்கியிருந்தனர். இவர்கள் தங்கியிருக்கும் பாடசாலைகளும் வீடுகளும்கூட சிறீலங்கா இராணுவத்தினரின் எறிகணை, குண்டுவீச்சுக்களால் சேதமடைந்தன. இதனால் இவர்கள் பருவப்பெயர்ச்சிக் காற்றையும், மழையையும் எதிர் கொள்ள முடியாது தவிக்கின்றனர். இவர்களுக்கு உதவும் முயற்சிகளில் தமிழர் புனர்வாழ்வுக் கழகம், வடக்கு-கிழக்கு அபிவிருத்திக் கழகம் என்பன ஈடுபட்டுள்ளன. இவர்களுக்கான சமைக்கப்பட்ட உணவுகள் இவ் அமைப்புக்களால் வழங்கப்பட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளையில் கடந்த 17ஆம் திகதியும், 25ஆம் திகதியும் 1050 குடும்பங்கள் கிளிநொச்சி, முழங்காவில், பூநகரி, கண்டாவளை, இலக்கைகோவிற் பகுதிகளில் குடியமர்த்தப்பட்டன.

## ஐ.நா. அகதிகள் ஆணையாளர் அலுவலர்கள் விஜயம்

வலிகாமம் மீதான சிறீலங்காவின் இன அழிப்பு முயற்சிகளால் இடம்பெயர்ந்த அகதிகளுக்கெனத் தென்மராட்சியில் அமைக்கப்பட்டுள்ள பதின்மூன்று அகதிகள் பராமரிப்பு முகாம்களை, ஐக்கிய நாடுகள் சபையின் அகதிகள் ஆணையாளரின் பிரதிநிதிகள் பார்வையிட்டு வாழும் நிலைகள் பற்றித் தெரிந்துகொண்டனர். இவ் அகதிகளின் வேண்டுகோளுக்கமைய உடுபுடவைகளையும், சுகாதார வசதிகளையும் செய்துகொடுக்க, ஐநா அகதிகள் ஆணையாளர் அலுவலகம் முன்வந்துள்ளது.

# அரியாலையில்...

குண்டுவீச்சில் பலியானவர்களுள் அடங்குவர். மூன்று நாட்களுக்கு முன்னர் திருமணமாகி, கொக்குவில் பகுதிநோக்கிச் சிறீலங்கா இராணுவத்தினர் நடத்திய எறிகணைத் தாக்குதலுக்கு அஞ்சி இடம்பெயர்ந்து அரியாலை நாவலடிப் பகுதியில் வந்து தங்கியிருந்தனர். இச்சம்பவ தினத்தன்று காலை கிணற்றடிக்கு முகம் கழுவச் சென்றபோது சுப்பர் சொனிக் விமானம் மாறி மாறி வீசிய இருகுண்டுகளுக்கு உடல் சிதறிப் பலியாகியுள்ளனர்.

இக் கோரச் சம்பவத்தில் பலியானவர்கள் பெயர்விபரம்:-

20 வயதான சின்னத்தம்பி பாஸ்கரன், 20 வயதான பாஸ்கரன் பத்மலோஜினி ஆகியோரே அத்தம்பதியினராவர். மேலும் 4 பிள்ளைகளின் தந்தையான சின்னத்தம்பி குணசேகரன், குணசேகரன் ஜெயசிங்கம், இரத்தினசிங்கம் இராஜேந்திரகுமார், புவனேந்திரன் சசிகபூர், வைரமுத்து உதயகுமார், 14 வயதான செல்வராசா சசிகுமார், 12 வயதான செல்வராசா தவச்செல்வன், 5 பிள்ளைகளின் தந்தையான செல்லத்துரை குலசிங்கராசா ஆகியோரே இவ்வாறு பயங்கரமாகக் கொல்லப்பட்டவர்களாவர்.

அரியாலை நாவலடிப்பகுதி இடுகாடு போல் காட்சியளித்தது. பிரபா வீதியின் மையப்பகுதியில் தென்னந் தோப்புக்கிடையே குடிசைகள் அமைத்துக் குடும்பம் குடும்பமாக வாழ்ந்தவர்கள் குடும்பத் தலைவர்களையும், உறவினர்களையும் பிள்ளைகளையும் குடியிருப்புக்களையும் இழந்து நிர்க்கதியான நிலையில் நிலத்தில் வீழ்ந்து கதறிக் கதறி அழும் காட்சி பெரும் சோகத்தை விளைவிப்பதாகவும், குண்டுத் தாக்குதலின் கோரத்தை வெளிப்படுத்துவதுமாக இருந்தது. 'புக்காரா' மற்றும் எறிகணை வீச்சுக்கு அஞ்சி இணுவில், கொக்குவில் பகுதியில் இருந்து உயிரைப் பாதுகாக்க அரியாலையில் உறவினர் வீடுகளில் தங்கியிருந்தவர்கள் சுப்பர்சொனிக் தாக்குதலில் கோரமாகப் படுகொலை செய்யப்பட்டுச் சிதறிக் கிடந்தனர். முறிந்து வீழ்ந்து கிடந்த தென்னை மரங்களின் இடையே அகப்பட்டுக் கிடந்த உடல்கள் ஒருபுறம், திருமணமாகி 3 தினங்களில் ஒன்றிணைந்து பிணமாகிக் கிடந்த தம்பதிகள் மறுபுறமாக அப்பகுதி எங்கும் இடுகாடுபோல் காட்சியளித்தது. சிதறிய உடற்கூறுகளும், தசைத்துண்டங்களும் விழுந்த மரங்களிற் தொங்கிக் கிடந்தன. வீட்டுச் சுவர்களில் தசைத் துண்டங்கள் இரத்தம் தோய்ந்த நிலையில் ஒட்டிக் கிடந்தது. சுமார் 200 மீற்றர் சுற்று வட்டாரத்தில் சிதறிக்கிடந்ததாக யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியாகும் ஈழநாதம் செய்தித்தாள் குறிப்பிட்டுள்ளது. தற்பொழுது யாழ். குடாநாட்டில் சண்டை நடைபெறும் இடத்தில் இருந்து தொலைதூரத்தில் இருக்கும் இப்பகுதியில் விமானத் தாக்குதல் நடைபெற்றது சந்திரிகா அரசின் தமிழ் மக்களை முற்று முழுதாகத் துடைத்தழிக்கும் நோக்கத்தை அப்பட்டமாக எடுத்துக்காட்டுகிறது. அத்தோடு விடுதலைப் புலிகளின் எதிர்த் தாக்குதலால் பலத்த இழப்புக்களைச் சந்திக்கும் சிறீலங்கா இராணுவம் மக்கள் குடியிருப்புக்கள் மீது இவ்வாறான கண்மூடித்தனமான தாக்குதல்களைச் செய்துவருகின்றது.

# மட்டக்களப்பில்..

ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

## நேரடி மோதலில் இரு போராளிகள், இருநாட்டுப் பற்றாளர்கள் வீரச்சாவு

மட்டக்களப்பில் சந்திவெளி எனும் இடத்தில் 22.10.95 காலை 5.50 மணியளவில் சிறீலங்கா இராணுவத்துடன் ஏற்பட்ட நேரடி மோதலில் போராளிகள் கப்டன் ஜெகபரன் (ஜெகன்) தேசகன் குகதாசன் மட்டக்களப்பு, கப்டன் அன்ரன் (பவளசிங்கன்) குமாரசாமி லோகேந்திரராஜ் மட்டக்களப்பு, ஆகிய போராளிகளும், இவர்களுடன் 2 முழுநேர ஆதரவாளர்களும் வீரச்சாவு அடைந்தனர். இவர்களின் பெயர் விபரம் கிடைக்கப்பெறவில்லை.

## மன்னாரில் கண்ணிவெடித் தாக்குதல்

மன்னார்த்தீவில் 5ஆம் கட்டை இராணுவ முகாமில் இருந்து பிளம்சி. இராணுவ முகாமை நோக்கிச் சென்ற இராணுவ உழவுஇயந்திரத்தின் மீது, விடுதலைப் புலிகள் 25.10.95 அன்று மதியம் 12.20 மணியளவில் கண்ணிவெடித் தாக்குதலை மேற்கொண்டபோது, பல இராணுவத்தினர் கொல்லப்பட்டதாகத் தளச்செய்தி தெரிவிக்கின்றது. இச்சம்பவத்தில் விடுதலைப் புலிகள் தரப்பில் எதுவித சேதமும் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## முல்லை படகு விபத்தில் போராளி ஒருவர் வீரச்சாவு

முல்லை மாவட்டத்தில் 26.10.95 அன்று ஏற்பட்ட படகு விபத்தொன்றில் போராளியொருவர் வீரச்சாவடைந்தார். கப்டன் உலகன் (இந்திரலிங்கம் ஜீவமோகன் நெடியகாடு, வல்வெட்டித்துறை) எனும் போராளியே வீரச்சாவடைந்தவராவர். வன்னி மாவட்டத்தில் ஏற்பட்ட விபத்தொன்றில் மட்டக்களப்பைச் சேர்ந்த 2ஆம் லெப். கவியரசன் கிருஸ்ணபிள்ளை வீரமரணமடைந்தார்.

தாயக மீட்புப்போரில் வித்தாகிப் போன இம் மாவீரர்களுக்கு எமது வீரவணக்கங்கள்.

# ஐ.நா முதல் ஐரோ....

சனாதிபதி சந்திரிகா தனது மனித உரிமை மீறல்களையும், இராணுவ நடவடிக்கைகளையும் கண்டித்து நடத்தப்பட்ட இவ் ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்துகொண்ட பெருந்திரளான மக்களைக் கண்டு பெரும் தர்மசங்கடத்திற்கு உள்ளனார். இதில் அமெரிக்காவையும் பிரித்தானியாவையும் சேர்ந்த தமிழர்களின் முன்னணிப் பிரமுகர்கள் உரைநிகழ்த்தினர். இவ் ஆர்ப்பாட்டத்தில், தமிழ் மக்களின் ஒரே ஒரு அதிகாரமுள்ள பிரதிநிதிகள் தமிழீழ விடுதலைப் புலிகளே என்பதை வெளிப்படுத்தும் மகஜர் ஒன்றும், ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகத்திடமும் பல்வேறு துதரக அதிகாரிகளிடமும் சர்வதேச தகவற்றொடர்பு சாதன முகவர்களிடமும் கையளிக்கப்பட்டது.

## ஐரோப்பிய பாராளுமன்றம் முன்பாக

பிரான்சிலுள்ள, ஸ்ராஸ்பேர்க் நகரில் அமைந்துள்ள ஐரோப்பியப் பாராளுமன்றத்தின் முன்றலில், 23.10.95 அன்று திங்கட்கிழமை, சிறீலங்கா அரசின் தமிழ் மக்கள் மீதான இனப்படுகொலையைக் கண்டித்தும் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போரை அங்கீகரிக்கக் கோரியும், தமிழ் மக்களின் பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகளை அங்கீகரிக்கக் கோரியும் நடைபெற்ற மாபெரும் எழுச்சிப் பேரணியில், 7000க்கும் மேற்பட்ட தமிழ்மக்கள் கலந்து கொண்டனர். நிகழ்வின் தொடக்கத்தில், தமிழீழத் தேசியக் கொடி விடுதலைப் புலிகளின் மத்திய குழு உறுப்பினர் திரு. லோறன்ஸ் திலகர் அவர்களால் ஏற்றப்பட்டது. விடுதலைப் புலிகளின் பணியகப் பிரதிநிதிகள், முன்னாள் ரூபவாகினித் தலைவர் திரு. வசந்தராசா உட்படப் பலர் உரையாற்றினர். திரு. வசந்தராசா உரையாற்றுகையில், 'தமிழ்மக்கள் ஒரு சிறுபான்மையினர் அல்ல. அவர்கள் ஒரு தேசிய இனம். விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரனின் பாதையில் அணிதிரண்டிருக்கும் பல்லாயிரக்கணக்கான மக்களின் தேசிய அபிலாசைகளை அனைத்துலகமும் புரிந்து கொள்ள வேண்டும். தமிழ் மக்களின் விடுதலையைத் தலைவர் பிரபாகரன் தனது வீரம் செறிந்த போராட்டத்தினாலும், சிறந்த மதிநுட்பத்தாலும் வென்றெடுப்பது உறுதி' என்றும் தெரிவித்திருந்தார். இதில் ஐரோப்பியப் பாராளுமன்றத் தலைவருக்கு முகவரியிட்ட மகஜர் ஒன்றை, பெல்ஜியத்தைச் சேர்ந்த ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர் இடமும் ஸ்ராஸ்பேர்க்கின் இயக்குனர் கலாநிதி. பிரிட்ஸ் இடமும் கையளித்தனர்.

இப்பேரணிக்கு, ஏனைய ஐரோப்பிய நாடுகளான யேர்மனி, நெதர்லாந்து, சுவிஸ், நோர்வே, சுவீடன், இங்கிலாந்து, டென்மார்க், இத்தாலி ஆகிய இடங்களில் இருந்தும் தமிழீழ மக்கள் பெரும் ஆர்வத்துடன் பெரும் எண்ணிக்கையிற் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## அவுஸ்திரேலியாவில்

23.10.05 அன்று அவுஸ்திரேலியாவின் தலைநகர் கன்பராவில் உள்ள பாராளுமன்றத்திற்கு முன்பாக தமிழீழ மக்கள் ஒன்றுகூடி, தமிழீழம் மீதான போரை நிறுத்த சிறீலங்காவை வற்புறுத்தும்படியும், விடுதலைப் புலிகளுடன் சிறீலங்கா அரசினைப் பேச வைக்குமாறும் கோரி விழிப்புப் போராட்டம் ஒன்றை நடத்தினர். இதன் போது மேற்படி கோரிக்கைகள் அடங்கிய மகஜர் ஒன்று அவுஸ்திரேலியப் பிரதமருக்கும், அமைச்சர்களுக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் கையளிக்கப்பட்டது.

தொடர்ச்சி 18 ஆம் பக்கம்

# ஐக்கிய நாடுகளின்...

வாழ்விடங்களை விட்டு வெளியேறி அடைந்துவரும் துன்பங்கள் பற்றியும், தற்போது உருவாகியுள்ள உணவு நெருக்கடி, மருத்துவப் பொருட்கள் பற்றாக்குறை தொடர்பாகவும் எமது தலைமை அலுவலகத்திற்கு விபரங்களை உடனுக்குடன் அனுப்பி வைக்க உள்ளேன்.

நான் இங்கே தங்கி இருக்கும் இரண்டு வாரங்களிலும் இப்போதுள்ள சூழ்நிலைகளை அவதானித்து அதுபற்றி முழுமையான அறிக்கை ஒன்றையும் தயாரிக்க உள்ளேன். குடாநாட்டிற்கு நேரடியாக வந்து பார்ப்பதன் மூலம் இங்குள்ள மக்கள் எதிர்நோக்கும் துன்பங்களையும், அவர்களின் நிறைவேற்றப்படாத தேவைகளையும் என்னால் உணர முடிகின்றது. சர்வதேச மனிதாபிமான அமைப்புக்களைச் சேர்ந்த பிரதிநிதிகள் குடாநாட்டிற்கு விஜயம் செய்வது இன்றைய காலகட்டத்தில் முக்கியமானது என நான் கருதுகிறேன். அதன் வழியாகவே குடாநாட்டு மக்களின் இன்றைய நிலைபற்றி சர்வதேச சமூகம் அறிந்து கொள்ள முடியும்.


யாழ். போதனா வைத்தியசாலை, யாழ். அரச செயலகம், மந்துவில் பகுதியில் அகதிகள் தங்கியுள்ள இடங்கள், மாநகரசபை, அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் ஆகியவற்றிக்குச் சென்று பல தகவல்களையும் பெற்றுள்ளேன். அதேவேளை, என்னோடு யாழ்ப்பாணம் வந்து 19.10.95 இல் திரும்பிச் சென்ற எமது அமைப்பின் சகஅதிகாரிகளும் மேற்படி விடயங்கள் பற்றித் தலைமையகத்திற்கு அறிவிப்பார்கள்' எனவும் அவர் தெரிவித்தார். மட்டுவிலில் உள்ள ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான துதரக அலுவலகத்தின் பொறுப்பதிகாரியான இவரின் மேற்பார்வையிலேயே யாழ். அலுவலகமும் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





மன்னாரில் அடம்பனில் பிறந்து கோப்பாயில் இந்திய இராணுவத்தினருடனான மோதலில் வீர ச்சாவடைந்த பெண்புலி 2 வது லெப்டினன்ட் மாலதியின் 8 வது நினைவுநாள், தமிழீழ விடுதலைப் புலிகளின் டென்மார்க் கிளையினரால் 15.10.95 ஞாயி றன்று மிகச் சிறப்பாக நினைவு கூரப்பட்டது.

தமிழீழ விடுதலைப் போரில் முதன் முதலாக வீரமரணமடைந்த பெண் போராளியான மாலதியின் நினைவு நாளை, டென்மார்க்கிலுள்ள பெண்கள் ஒன்றிணைந்து நடாத்தினர். இந்நிகழ்ச்சி, முற்றாகப் பெண்களினால் நடாத்தப்பட்டமை சிறப்பம்சமாக அமைந் திருந்தது.

தமிழீழ விடுதலைப் போரில் பெண்கள்', 'பெண் விடுதலை விளக்குகள்' என்னும் தலைப்புக்களில் செல்விகள் சுகன்யா வடிவேல், சாந்தினி தளைசிங்கம் ஆகி யோர் உரையாற்றினர். 'மாலதியாய், அங்கையற்கண்ணியாய், களாயினியாய், கரும்புலியாய் ஆனாளே தமிழிச்சி' என்னும் தலைப்பில் கவிதா நிகழ்வு நடைபெற்றது. பரதத்தையும், அபிநயத்தையும் உள்ளடக்கிய இக்கவிதா நிகழ்வுக்கான கவிதைகள் வானதி, கஸ்துாரி ஆகிய போராளிக் கவிஞர்களின் கவிதைகளால் உருவாக்கப்பட்டிருந்தன. இதில் ஆறு பெண்கள் பங்குபற்றினர்.

மேஜர் பாரதியால் எழுதப்பட்ட 'காதோடு சொல்லி விடு' என்னும் கவிதைத் தொகுதியும் வெளியீடு செய்யப்பட்டது. மேற்படி நூலை குமுதினி அருளானந்தராசா வெளியீடு செய்து வைத்தார். சுமித்திரா சுகேந்திராவின் மாணவியர் பரதநாட்டிய நிகழ்ச்சிகளை நடாத்தினர்.

பெண் கலைஞர்களின் கைவண்ணத்தில் எழுந்த, 'வீராச்சி அம்மன்' என்னும் நாடகம் மேடையேற்றப்பட்டது. பெண்புலிகளோடு ஒன்றிணைந்து எல்லைக் கிராமங்களில் நின்று போராடிவரும் துணைப்படை மூதாட்டிகளின் வீரத்தையும், அவர்களின் மண்பற்றையும், தமிழ் மக்கள் மீது கொண்டுள்ள பாசப்பிணைப்பையும் வீரத்தோடு எடுத்துச் சொல்லியது இந்த நாடகம்.



மகளிரை உள்ளடக்கி தமிழீழ இசைக்குழுவினர் 'புயற்கால இராகங்கள்' என்னும் இசைநிகழ்ச்சியை நடத்தினர். செல்விகள், தர்சினி, ரஜனி, துகித்தா ஆகியோர் புதிதாக வாத்தியங்களை இசைத்தனர். நிகழ்ச்சிகளை திருமதி சுமதி கிறிஸ்டி, சுகன்யா வடிவேல் ஆகியோர் தொகுத்தளித்தனர்.

பெண்களினால் உருவாக்கப்பட்டு பெண்

தொடர்ச்சி 18 ஆம் பக்கம்

# இத்தாலியில் புலிகளை அங்கீகரிக்கக் கோரி தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினர் நடாத்திய நிகழ்ச்சியில் கலைநிகழ்வுகள்





கடந்த 18-ம் திகதி தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினருடன் 25 வெளிநாட்டு அமைப்புகள் ஒன்றிணைந்து கலாச்சார நிகழ்வுகளை நடத்தின. 23-ம் திகதி பாரிஸ் ஸ்ராஸ்பூக்கில் ஐரோப்பிய பாராளுமன்றத்துக்கு முன்பாக, தாயக விடுதலையையும், தமிழீழ விடுதலைப்புலிகளையும், தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையையும் அங்கீகரிக்கக் கோரியும், சிறீலங்கா அரசின் கண்மூடித்தனமான குண்டு வீச்சுக்களையும், இன அழிப்பினையும் கண்டித்தும் நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணிக்கு ஆதரவு நல்கும் முகமாக, இத்தாலி தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினர் பலெர்மோ (Villa Trabia)



பூங்காவில் போட்டோ கண் காட்சியினையும், கலை கலாச்சார நிகழ்ச்சினையும் வழங்கினர். பலெர்மோவில் சக்தி வாய்ந்த குண்டு வெடிப்புத் தாக்குதலில் கொல்லப்பட்ட பிரபல்யமான நீதிபதியான பொர்சலினோ அவர்களின் பாரியார் நாடாவை வெட்டி ஆரம்பித்து வைத்தார். 21-10-95 இல் இரவு 9.00 மணியளவில் தமிழீழ தேசம் சார்பில் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினர் நிகழ்ச்சிகளை வழங்கினர்.

ஆரம்ப நிகழ்வாக, லெப்மாலதி கலைப்பள்ளி மாணவிகள் தமிழீழ தேசப் படத்தினைத் தாங்கி வந்தனர். அதற்கான விளக்கமும் கொடுக்கப்பட்டது. இரண்டாவதாக, தமிழீழ தேசத்தின் தேசியக்கொடி . மேடையிலேயே வண்ண விளக்கினால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. எமது தேசியக் கொடியின் புலிச்சின்னம் பற்றியும் அதிலுள்ள சிவப்பு, மஞ்சள், கறுப்பு ஆகிய மூன்று நிறத்திற்கும் உரிய அர்த்தம் பற்றியும் தெளிவு படுத்தப்பட்டது.

முடிவில் தமிழீழ தேசியத் தலைவர் திரு.வே.பிரபாகரன் அவர்களின் நிழல் படமும் தாங்கி வைக்கப்பட்டு விளக்கம் கொடுக்கப்பட்டது. அதன் பின் மாலதி கலைப்பள்ளி மாணவிகள், "மாவீரரே எங்கள் மாதவ வேங்கைகளே" 'வெள்ளலையே நில் அலையே' ஆகிய பாடல்களுக்கு அபிநயம் வழங்கினர். இவர்கள் வெளி நாட்டு மக்களிடம் இருந்து பெரும் வரவேற்பையும், கரகோசத்தையும் பெற்றனர். தொடர்ந்து "இளையதாரகை" இசைக்குழுவினர், தமிழீழப் புரட்சிக்கான ங்களை வழங்கி கரகோ சத்தைப் பெற்றனர். தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் எமது நாட்டு உணவு வகைகள் தயாரிக்க ப்பட்டு விற்பனையும் செய்யப்பட்டது. முடிவில் ஆர்ப் பாட்டப் பேரணிக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் அனைத்து வெளி நாட்டு மக்களிடமும், 2ம் லெப்.மாலதி கலைப்பள்ளி மாணவிகளும், தமிழர் ஒருங்கிணைப்புக் குழு உறுப்பினர்களும் கையெழுத்துக்களைப் பெற்றுக் கொண்டனர். இறுதி நாளான 22.10.95 ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணியளவில் பலெர்மோ மாநகரசபை



முதல்வரான திரு. Leo Luca Orlando, கலந்து கொண்டு தமிழீழத் தேச நிகழ்வுகளின் நிழற் பாடங்களைப் பார்வையிட்டார். நவாலி தேவாலயம் மீதான குண்டு வீச்சு பற்றிய வீடியோ தொடர்ச்சியாகக் காட்டப்பட்டது. இத்தாலி மொழியில் தயாரிக்கப்பட்ட துண்டுப் பிரசுரங்களும் வழங்கப்பட்டு, கையெழுத்துக்கள் பெறப்பட்டன. மாலை 4.30 மணிக்கு தேவாலயத்தில் ஸ்ராஸ்பூக் பேரணிக்கு ஆதரவாகவும் 23ம் திகதி, விடுதலைப் போரில் மாவீரர்களாகியவர்களுக்கும், பொதுமக்களுக்குமாக அஞ்சலி செய்யப்பட்டதுடன், விடுதலைக்கு ஆதரவு நல்குவேன் என்ற உறுதி மொழி எடுக்கும் படியும் தெரிவிக்கப்பட்டது. தமிழர் ஒருங்கிணைப்புக் குழுக் காரியாலயத்தில் 22, 23 திகதிகளில் மாவீரர்களுக்கும், பொது மக்களுக்கும் தொடர்ச்சியாக அஞ்சலி செலுத்தப்பட்டதோடு, தமிழ் மக்களால் உறுதிமொழியும் எடுக்கப்பட்டது.

# மாவீரர் நாளை முன்னிட்டு நெதர்லாந்தில் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டி

நெதர்லாந்திலுள்ள Wykeen zee என்னுமிடத்தில் 14-10-95 சனிக்கழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை, மாவீரர் நாளை முன்னிட்டு மாபெரும் கரப் பந்தாட்டச் சுற்றுப்போட்டியை தமிழீழ விடுதலைப் புலிகளின் நெதர்லாந்துக் கிளையினர் நடாத்தினர்.

மாவீரர்களுக்கான வீரவணக்கத்துடன் ஆரம்பமான இக் கரப்பந்தாட்டப் போட்டியில், பிரதம விருந்தினராக தமிழீழ விடுதலைப் புலிகளின் நெதர்லாந்துக் கிளைப் பொறுப்பாளர் திரு. அருமைநாயகம் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தினார்.

மாவீரர்கள் பற்றி உரை நிகழ்த்திய அவர், நெதர்லாந்திலுள்ள தமிழர்களும் மற்றய நாடுகள்போல் விளையாட்டு க்களில் வளர்ச்சியடைய வேண்டுமென வும் கேட்டுக் கொண்டார்.

தொடர்ந்து, இவ் விளையாட்டைப் பொறுப்பேற்று நடாத்திய செல்வன் செல்வச்சந்திரன் அவர்கள், கரப்பந்தாட்டப் போட்டியின் விதிமுறைகள் பற்றிக் கூறியதுடன், போட்டியையும் ஆரம்பித்து வைத்தார்.

முதல் முறையாக நெதர்லாந்தில் நடைபெற்ற இக்கரப்பந்தாட்டப் போட்டியில் Schagan, Haarling, Bevevrwyk போன்ற இடங்களிலுள்ள 7 விளையாட்டுக் குழுவினர் பங்குபற்றினர். மிக விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் தாரகை வி. கழகம் யு, தாரகை வி. கழகம் டீ, டீநளநசறலம வி. கழகம் யு ஆகியன முறையே 1ம், 2ம், 3ம் இடத்தைப் பெற்று மாவீரர் வெள்ளிக்கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சந்திரிகா அரசுக்கு கிடைத்த ஏமாற்றம்

ஜெயராஜ்

"விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரில் உலகமே எம் பின்னால்" என்பதே மூன்றாம் கட்ட ஈழப்போர் ஆரம்பித்த பின்னர் மேற்குநாடுகளிற் சிறீலங்கா அரசிற்கு ஆதரவான பிரசாரத்தில் ஈடுபட்டிருந்த வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் அறிவிப்பாக இருந்தது.

இவ்வறிவிப்பானது பாராளுமன்றத்திலும், பத்திரிகையாளர் மாநாட்டிலும் அடிக்கடி எதி-ரொலித்தது.

அமைச்சர் கதிர்காமரின் இவ்வறிவிப்பை சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகாவும் பிரதி-பலித்தார். இதன் பிரகாரம் விடுதலைப்புலிகளுக்கு எதிரான முழு அளவினதான போருக்கு உலகின் ஒட்டுமொத்தமான அங்கீகாரமும் பெறப்பட்டு விட்டதாகவும் அரசாற் கருதப்பட்டது. சந்திரிகா அரசு அவ்வாறு நம்பியதிலும் தவறில்லை. ஏனெனில் அமெரிக்காவின் அங்கீகாரமே உலகநாடுகளின் அங்கிகாரமாகவும் உள்ள இன்றைய நிலையில் அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலகம் சந்திரிகா அரசிற்கு அனுசரணையாகப் பேசியது அரசிற்கு நம்பிக்கை ஊட்டியிருக்கலாம்.

மூன்றாம் கட்ட ஈழப்போர் ஆரம்பிக்கப்பட்டபோது மேற்குலக நாடுகள் முழுமையாகவே சிறீலங்கா அரசு சார்பு நிலைப்பாட்டையே எடுத்தன. விடுதலைப்புலிகளே மீண்டும் போரை ஆரம்பித்ததாகவும் - சமாதானப் பேச்சுவார்த்தைகளை முறித்துக்கொண்டதாகவும் - முன்னறிவித்தல் இன்றி மோதல் தவிர்ப்பு உடன்பாட்டை முறித்துக்கொண்டதாகவும் அவற்றின் கண்டனங்கள் இருந்தன.

மேற்குலகம் இவ்வாறு தெரிவித்த கண்டனங்கள் பொதுவாகவே சிறீலங்கா அரசாங்கம் வழங்கிய தகவல்களின் அடிப்படையிலானதாகவே இருந்தன. இதன் காரணமாக மேற்குநாடுகள் மூன்றாம் கட்டப்போர் ஏன் ஆரம்பமாக வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகியது என்பதைக் கண்டுகொள்ளத் தவறின. ஒரு வகையில் அவை ஒரு பக்கச்சார்பான முடிவுகளாக, ஒரு நடு நிலைமையாளருக்கு உரிய முடிவாக இல்லாது இருந்தது.

இதில் முக்கியமான விடயமாக இருந்தவை சிறீலங்கா அரசாங்கம் சமாதானம் நோக்கிய முன்முயற்சிகள் எதையும் மேற்கொள்ளவில்லை என்பதை மேற்குலகம் சரியாகப்புரிந்து கொள்ளாமையாகும். அத்தோடு, விடுதலைப்புலிகள் மோதல் தவிர்ப்பு நிலையில் இருந்து விலக வேண்டிவரும் என சுமார் நான்கு வாரங்களுக்கு முன்னரே அதுவும் இருதடைவைகளில் - கடித மூலம் எச்சரித்திருந்தமையை அவை அறிந்து கொள்ளாமல் அல்லது பொருட்படுத்தாமல் இருந்து விட்டமையுமாகும்.

> **மூன்றாம் கட்ட ஈழப்போர் ஆரம்பிக்கப்பட்டபோது மேற்குலக நாடுகள் முழுமையாகவே சிறீலங்கா அரசு சார்பு நிலைப்பாட்டையே எடுத்தன. விடுதலைப்புலிகளே மீண்டும் போரை ஆரம்பித்ததாகவும், சமாதானப் பேச்சுவார்த்தைகளை முறித்துக்கொண்டதாகவும், முன்னறிவித்தல் இன்றி மோதல் தவிர்ப்பு உடன்பாட்டை முறித்துக்கொண்டதாகவும் அவற்றின் கண்டனங்கள் இருந்தன.**
>
> **மேற்குலகம் இவ்வாறு தெரிவித்த கண்டனங்கள் பொதுவாகவே சிறீலங்கா அரசாங்கம் வழங்கிய தகவல்களின் அடிப்படையிலான தாகவே இருந்தன.**

ஆகையினால், போர் ஆரம்பித்தபோது மேற்குலகம் ஒன்றன் பின் ஒன்றாக விடுதலைப்புலிகள் இயக்கத்தைக் கண்டனம் செய்தபோது சந்திரிகா அரசாங்கம் திருப்தி கொண்டது. விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரில் உலகமே தன் பின்னால் திரண்டுள்ளது எனவும் தமது பிரசார நடவடிக்கைகள் பூரண வெற்றிகண்டிருப்பதாகவும் அது கருதியது.

சந்திரிகா அரசாங்கத்திற்கு மகிழ்ச்சி அளிப்பதற்கு வேறு காரணங்களும் இருந்தன. சிறீலங்கா அரசிற்குப் போருக்கெனப் பெரும் நிதியும் நவீன ஆயுத தளபாடங்களும் தேவையாக இருந்தன. இவற்றை மேற்குலகின் அங்கீகாரம் கிடைத்தால் மட்டுமே பொருளாதார நெருக்கடியில் உள்ள சிறீலங்காவால் இலகுவாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய வாய்ப்பு இருக்கும். ஆகையினால் மேற்குலகின் ஆதரவு பெரும்போருக்குத் தன்னைத் தயார்படுத்தலாம் என்ற நம்பிக்கையைச் சிறீலங்காவுக்குக் கொடுத்தது.

இவையாவற்றையும்விடச் சந்திரிகா அரசாங்கத்தின் முக்கிய இலக்கில் ஒன்றாக இருந்தது விடுதலைப்புலிகள் இயக்கத்தின் நடவடிக்கையை மேற்குலகிற் தடை செய்வதற்கான நடவடிக்கையாகும். விடுதலைப்புலிகள் இயக்கத்தைப் 'பயங்கரவாத இயக்கம் என்ற ரீதியிற் தடைசெய்வதன் மூலம் புலிகளின் செயற்பாட்டை உலகின் ஏனைய பகுதிகளிற் கட்டுப்பாட்டிற்குக் கொண்டு வருவதோடு அவர்களின் விநியோக மார்க்கங்களையும் கட்டுப்படுத்த முடியும் எனவும் அது கருதியது.

இந்த நிலையில் மேற்குலகின் ஆதரவானது போருக்கான நிதி மற்றும் ஆயுத தளபாட உதவிகளோடு மேற்குலகில் புலிகளின் செயற்பாட்டைக் கட்டுப்படுத்துவதாகவும் அமையலாம் எனச் சிறீலங்கா அரசாங்கம் கருதியிருந்தது. இதற்கான முழு அளவினதான நடவடிக்கையிலும் இறங்கியது.

இதன் ஒரு கட்ட நடவடிக்கையாக இலங்கையில் விடுதலைப்புலிகள் இயக்கத்தை தடைசெய்யவும், இதனை அடிப்படையாகக் கொண்டு மேற்குலகிற் தடை செய்யுமாறு கோரவும் சிறீலங்கா அரசு முயற்சி மேற்கொண்டது. இதன் மூலம் இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலமான அரசியற் தீர்வு என்பதற்கான வழியை முற்றாகவே அடைத்து விடவும் சந்திரிகா அரசு தயாராக இருந்தது.

ஆனால், சந்திரிகா அரசானது எதிர்பார்த்த அரசியற் சூழ்நிலை நீண்ட காலத்திற்கு நீடிக்கவில்லை. மேற்கு நாடுகள் நடுநிலைப் பார்வையின்றி விடுதலைப்புலிகளைக் கண்டித்துக் கொண்டாலும் இனப்பிரச்சினைக்கு இராணுவ ரீதியிலான தீர்வு காண முடியாது என்பதையும், விடுதலைப்புலிகளைப் புறக்கணித்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது என்பதையும் அவை விரைவிலேயே புரிந்து கொண்டன.

ஒருவகையிற் புலிகள் விடயத்திற் பிரிட்டன், அமெரிக்கா போன்ற நாடுகளின் பார்வையிற் குழப்பமே இன்னும் உள்ளது என்றே கூறலாம். விடுதலைப்புலிகள் இயக்கத்தைப் 'பயங்கரவாதக் குழு' என அமெரிக்கா முத்திரையிட விரும்பினாலும் கூடத் தமிழ் மக்களின் பிரதிநிதிகள் விடுதலைப்புலிகள் தான் என்ற யதார்த்தத்தை நிராகரிக்க முடியாது உள்ளமையே அக்குழப்பங்களுக்குக் காரணமாகும்.

இது அமெரிக்காவின் தென்கிழக்காசிய விவகாரங்களுக்கான துறைச் செயலர் ரொபின் ரஃபேல் பேச்சிலேயே தெரிந்தது. "விடுதலைப்புலிகள் பயங்கரவாத நடவடிக்கையே செய்கின்றனர். எங்களுடைய பயங்கரவாத அமைப்புக்கள் பற்றிய இறுதியான அறிக்கையிலும் அவர்கள் இடம் பெறுகின்றனர். ஆனால், எந்தளவிற்கு அவர்கள் நடவடிக்கைகள் அமைகின்றது என்பதை இது தெளிவாகக் காட்டும் என நான் நினைக்கவில்லை" என அவர் தெரிவித்தார். இவரின் இக் கூற்றானது விடுதலைப்புலிகள் விடயத்தில் அமெரிக்காவின் குழப்பத்தையே காட்டுகின்றது.

ஆயினும், விடுதலைப்புலிகள் இயக்கத்தைத் தடை செய்யும் விடயத்தை ஒரு சட்டங்களுக்கு உட்பட்ட விவகாரமாகவே அவர்கள் நோக்குகின்றனர். ஆகையினால் இவ்விடயத்தில் அவர்கள் அவசரப்படத் தயாராக இல்லை. எடுத்துக்காட்டாக விடுதலைப்புலிகள் இயக்கத்தை, பிரிட்டனிற் தடைசெய்வது குறித்துச் சிறீலங்கா அரசாங்கம் முயற்சித்தபோது பிரிட்டனின் வெளிவிவகார அமைச்சில் இருந்து ஆதரவான பதில் எதுவும் கிடைக்கவில்லை.

இது குறித்துப் பிரிட்டிஷ் வெளிவிவகார அமைச்சர் கதிர்காமரிடம் "விடுதலைப்புலிகளின் லண்டன் அலுவலகம் மூடப்படமாட்டாது. இதனைச் சிறீலங்கா புரிந்து கொள்ளவேண்டும் இது எந்தவகையிலும் அவர்களின் நடவடிக்கைகளை ஏற்றுக்கொள்வதாக அர்த்தப்படுத்தப்படக் கூடாது. சிறீலங்கா அரசாங்கம் சமாதானத்தை அடையத் தாரா-ளமான துணிச்சலான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். பிரிட்டன் விடுதலைப்புலிகள் இயக்கத்தைப் பற்றி நன்கு தெரிந்து கொண்டுள்ளது" எனத் தெரிவித்திருந்தார்.

இதை ஒத்தது போன்றதொரு நிலைப்பாட்டையே அமெரிக்காவும் விடுதலைப்புலிகள் விவகாரத்தில் எடுத்தது. அண்மையிற் சிறீலங்காவிற்கு விஜயம் செய்த அமெரிக்க வெளிவிவகாரத் திணைக்களத்தைச் சேர்ந்த தென்னாசிய விவகாரங்களுக்குப் பொறுப்பான துணைச்செயலர் ரொபின் ரஃபேல் இனப்பிரச்சினைத் தீர்வு பற்றியும் விடுதலைப்புலிகள் பற்றியும் குறிப்பிடுகையில், "அமெரிக்காவின் சட்டவிதிகளைப் புலிகள் மீறினால் மட்டுமே நாம் எதையும் செய்யமுடியும். அமெரிக்காவிற் தமிழர்கள் புலிகளுக்கான நிதி சேகரிப்பதையும் தடுக்க முடியாது. அதன் மூலம் புலிகள் ஆயுதங்களை வாங்கினாற் கூட நாம் எதையும் செய்யமுடியாது. அமெரிக்காவின் சட்டங்களை மீறினால் மட்டுமே நாம் நடவடிக்கை எடுக்கமுடியும் என்பதோடு, "சகல நிலைகளையும் நாம் சிறீலங்கா அரசாங்கத்துடன் ஆராய்ந்து நிற்கின்றோம். மீண்டும் பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டும் என்பதை நாம் வலியுறுத்தினோம்" எனத் தெரிவித்தார்.

அமெரிக்காவின் இந்நிலைப்பாடானது, அண்மையில் அதன் மக்கள் பிரதிநிதிகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒன்றிலும் பிரதிபலித்தது. அத்தீர்மானத்தில் "இலங்கையில் இடம் பெறும் யுத்தத்தை நிறுத்திச் சமாதானத்தை உருவாக்கச் சிறீலங்கா அரசாங்கமும் விடுதலைப்புலிகள் இயக்கமும் பேச்சுவார்த்தையில் ஈடுபடவேண்டும்" எனத் தெரிவிக்கப்பட்ட அதேவேளை, "இது தொடர்பான. நல்லெண்ண முயற்சியில் ஈடுபடவும் அமெரிக்கா தயாராகவுள்ளது" எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

> **சந்திரிகா அரசானது எதிர்பார்த்த அரசியற் சூழ்நிலை நீண்ட காலத்திற்கு நீடிக்கவில்லை. மேற்கு நாடுகள் நடுநிலைப் பார்வையின்றி விடுதலைப்புலி களைக் கண்டித்துக் கொண்டாலும் இனப்பிரச்சினைக்கு இராணுவ ரீதியிலான தீர்வு காண முடியாது என்பதையும், விடுதலைப்புலிகளைப் புறக்கணித்து இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது என்பதையும் அவை விரைவிலேயே புரிந்து கொண்டன.**

இந்தவகையில், மேற்குலகம் இனப்பிரச்சினை தொடர்பாகக் கொண்டுள்ள தற்போதைய நிலைப்பாடானது சந்திரிகா அரசின் இனப்பிரச்சினைக்கு இராணுவத்தீர்வு என்ற நிலைப்பாட்டிற்கு முழுமையான ஆதரவானதாகவோ அன்றி சந்திரிகா அரசாங்கம் கூறிக்கொண்டதுபோல் 'உலகம் எம் பின்னால்' என்பதைப் பிரதிபலிப்பதாகவோ தெரியவ-ில்லை.

ஆனால், மேற்குலகின் குறிப்பாக அமெரிக்காவின் இத்தீர்மானமானது அதன் தென்னாசியா தொடர்பான நிலைப்பாட்டின் ஒரு அங்கமாகவும் அதேவேளை, இனப்பிரச்சினை தொடர்பான மதிப்பீட்டின் அடிப்படையிலானதும் என்றே கூறலாம்.

இன்று சர்வதேச ரீதியாகத் தனிப்பெரும் வல்லரசாக உருவாகியுள்ள அமெரிக்கா உலகிற்கெனப் புதியதொரு அரசியல் ஒழுங்கை உருவாக்க முனைப்பதாலும் உலகம் முழுவதும் அதன் நிலைப்பாடு ஒரே மாதிரியானதாக, ஒரே பார்வை கொண்டதாக இல்லை. குறிப்பாக, தென்னாசியாவிலும் கிழக்காசியாவிலும் அமெரிக்காவின் கொள்கையிற் கெடுபிடிப்போருக்கான அணுகுமுறை தென்படுவதாகவே அரசியல்-இராணுவ

தொடர்ச்சி 16 ஆம் பக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இந்திய மேலாதிக்கத்தின் பகடைக்காய்களாக பாகிஸ்தானில் வாழும் மொகாஜிர் மக்கள்

பாலகுமாரன்

மொகாஜிர் இன மக்களின் மனக்குறைகளை எப்போதுமே பாகிஸ்தானில் வாழும் சிந்தி, பஞ்சாபி, பட்டாணிய, பலூச்சி இன மக்கள் புறம் தள்ளித் தமக்கும் மொகாஜிர்களுக்குமிடையிலான வேறுபாடாகக் கருதுவதால் நிலைமை மோசமாயிற்று. இவ்வெறுப்பும் இந்தியாவிலிருந்து இவர்கள் இடம் பெயர்ந்தவர்கள் என்பதால் இந்திய உளவாளிகள் இவர்களுடன் ஊடுருவி விட்டனர் என்கிற சந்தேகமும் இப்போது பாரிய வன்முறைக் களங்களைத் தோற்றுவிக்கின்றன.

பாகிஸ்த்தானின் பெய்ரூட்' என்றே இப்போது கராச்சிப் பெருநகரம் அழைக்கப்படுகிறது. பாகிஸ்தானின் ஒரேயொரு பாரிய கராச்சி நகரம் இப்போது செயலிழந்துவிட்டது. எல்லை கடந்த வன்முறைச் சம்பவங்களால் ஆயிரக்கணக்கில் மக்கள் கடந்த இரு வருடங்களுக்குள் பலியாகிவிட்டனர். இவ்வருடம் இதுவரை பலியானோர் 10 மில்லியன் சனத்தொகை கொண்ட கராச்சியில் 750 க்கும் மேலாகிவிட்டது. அதுவும் கடந்த நான்கைந்து தினங்களாகப் பல பத்துப் பேர் பலியாகிவிட்டனர். இவ்வன்முறைக்கு வழிவகுத்த காரணங்கள் பல்வேறு பரிணாமங்களைக் கொண்டவை. சிக்கலானவை. இப்போது உச்சம் பெறும் இக் கலவரங்கள் தொடர்பாக நாள்தோறும் தலைப்புச் செய்திகளை வெளியிடும் இந்திய - பாக்கித்தானிய செய்தி ஊடகங்கள் அவற்றினை வெளிப்படுத்தும் விதமே இச்சிக்கலின் ஆழத்தைப் புரிய வைக்கும். மிகக் கடுமையான தொனியில் இந்தியாவை மறைமுகமாகக் கண்டித்து வரும் பெனாசிர் பூட்டோ அம்மையார் அண்மையில் இவ் வன்முறைகளை 'தனது அரசை நிலையறச் செய்ய வெளிநாடு ஒன்று மேற்கொள்ளும் கிளர்ச்சி' என்றார். இவ் வன்முறைகட்குப் பொறுப்பு என அவர் குற்றம் சாட்டும் இந்திய - பாகிஸ்தான் பிரிவினையின் போது இந்தியாவிலிருந்து இடம் பெயர்ந்த) மொகாஜிர் இசுலாமிய மக்களை 'பயங்கரவாதிகள்' என்றும் 'நாட்டுப்பற்றற்ற இந்தியாவின் எடுபிடிகள்' என்றும் தூற்றினார். அதேவேளை இந்தியத் தரப்பிலோ தமது உரிமைகட்குப் போராடுகின்றவர்களை எவ்வாறு பயங்கரவாதிகள் என்று அழைக்கலாம் எனத் தார்மீகக் கேள்வி எழுப்பப்படுகிறது. மொகாஜிர் மக்கள் போராட்டத்திற்கு ஆதரவான வகையிலே பெரும் எடுப்பிலே இந்தியத் தரப்பிலே செய்யப்படும் பிரச்சாரங்கள் தமிழீழம் தொடர்பாகச் சில காலம் முன்னர் இந்தியத் தரப்பு "முதலைக்கண்ணீர்" வடித்த காலங்களை எவருக்கும் நினைவிற்குக் கொண்டு வரும்.

## மொகாஜிர் மக்கள் போராட்டம்

இப்போது பாகிஸ்தான் அரச எதிர் நோக்கும் சிக்கல்கள் ஏராளம். காஷ்மீர் சிக்கல் ஒருபுறம், பாகிஸ்தானின் வடமேற்கு எல்லைப்புற மாகாணத்திற் கொந்தளிப்புகள்

கராச்சியிற் தற்போது இடம் பெற்று வரும் வன்முறைகளே பாரிய நெருக்கடியைப் பெனாசிர் அம்மையாரின் அரசிற்கு ஏற்படுத்துகின்றன. அதிலும் சிந்து மாகாண வன்முறைகள் முப்பரிமாணங்களைக் கொண்டதாக நாட்டின் பெரும்பான்மை சுனி (sunni) மதப்பிரிவினருக்கும் சிறுபான்மை சியாப் பிரிவினர்க்கும் இடைப்பட்டதாகக் கராச்சியின் பாதாள உலகப் போதைப்பொருள் வணிக வன்முறைகளின் மோதல்களாக இருந்த போதும் இவற்றில் மொகாஜிர் மக்களுக்கும் அரசிற்கும் இடையிலான மோதல்களே முதன்மையானதாக இன்றுள்ளன.

மறுபுறமாக இருந்த போதும் சிந்து மாகாணத்திற் குறிப்பாக அதன் தலைநகரான கராச்சியிற் தற்போது இடம் பெற்று வரும் வன்முறைகளே பாரிய நெருக் கடியைப் பெனாசிர் அம்மையாரின் அரசிற்கு ஏற்படுத்துகின்றன. அதிலும் சிந்து மாகாண வன்முறைகள் முப்பரிமாணங்களைக் கொண்டதாக நாட்டின் பெரும் பான்மை சுனி (sunni) மதப்பிரிவினருக்கும் சிறுபான்மை சியாப் பிரிவினர்க்கும் இடைப்பட்டதாகக் கராச்சியின் பாதாள உலகப் போதைப்பொருள் வணிக வன்முறை களின் மோதல்களாக இருந்த போதும் இவற்றில் மொகாஜிர் மக்களுக்கும் அரசிற்கும் இடையிலான மோதல்களே முதன்மையானதாக இன்றுள்ளன. ஏனைய மோதல்கள் இப்போது பின் தள்ளப்பட்டுள்ளன. மொகாஜிர் மக்களின் போராட்ட அமைப்பான M.Q.M (Mohajir Quami Movement) மொகாஜிர் குவாமி அமைப்பைச் சேர்ந்த போராளிகள் கையிலே இப்போது முன்னெப்போதும் காணப்படாத நவீன ஆயுதங்கள் காணப்படுகின்றன. வாகனக் குண்டு வெடிப்புக்கள் இப்போது நிகழத் தொடங்குகின்றன. எறிகணைத் தாக்குதல்களும் நடைபெறுகின்றன. எறிகணைச் செலுத்திகளொடு இப்போது M.Q.M போராளிகள் நடமாடுகின்றனர். பாக்கித்தானின் ஏனைய பகுதிகளிலிருந்து கராச்சியைப் பிரிக்கச் சதி நடப்பதாகப் பூட்டோ அம்மையார் இப்போது கூறத் தொடங்கியிருப்பது பலருக்கும் 1971 -ம் ஆண்டு வங்காள தேசப் (கிழக்கு பாகிஸ்தான்) பிரிவினையின் போது நடந்தவற்றை மீண்டும் நினைவுபடுத்துகின்றது. தற்போது இலண்டனில் நாடு கடந்து வசித்து வரும் M.Q.M அமைப்பின் தலைவர் அல்டாப் குசைன் (Altaf Hussain) பெனாசிர் பூட்டோ அம்மையாரின் இனவெறிப் பேச்சுக்களால் முழு மொகாஜிர் இனமே கொந்தளிப்பதாகக் கூறி மொகாஜிர் மக்கள் போராட்டங்களை இப்போது மேலும் வேகப்படுத்து கின்றார். கடந்த சில நாட்களுக்கு முன்னர் மொகாஜிர் இனச் சிறுமியொருவர் பாலியல் வன்முறைக்குப் பெனாசிர் பூட்டோ அம்மையாரின் பாகிஸ்தான் மக்கள் கட்சியின ;(P.P.P - Pakistan People Party) உறுப்பினரொருவரால் உட்படுத்தப்பட்டதாகக் குற்றம் சமத்தி 3 நாள் முழுமையாகக் கராச்சி நகரைச் செய லிழக்கச் செய்த போதே அதிகளவு வன்முறைகள் ஏற்பட்டன. சிந்து மாகாணத்திற் தமக்குப் பொருண்மிய அரசியலுரிமை மறுக்கப்படுவதாக முறைப்படும் மொகாஜிர் குவாமி அமைப்பினர் சிந்து மாகாண நிர்வாகத்திற் தமக்குரிய இடமளிக்கப்படாவிட்டாற் தனியான மாநிலம் கோர வேண்டி வரும் என்று கூறி வருகின்றனர். தொடக்கத்திற் பங்காள தேசத்தந்தை எனப்படும் முஜிபுர் ரகுமான் வழியிலே தனிநாடு கோர முன் வங்காள முசலிம்கள் நலனுக்காக அவர் மிதமான கோரிக்கைகளை வைத்தது போலவே தாம் இப்போது செயற்படுவதாக இவர்கள் கூறிக்கொள்கிறார்கள்.

## பகடைக்காய்கள்

வெளிப்பார்வைக்கு இவ்வாறான பிரச்சனைகள் தென்பட்டாலும் மொகாஜிர்களின் சிக்கலென்பது வேறு வகையான அரசியற் பரிணாமத்தைக் கொண்டிருப்பதே நாமறிய வேண்டிய சங்கதியாகும். இந்திய - பாகிஸ்தான் பிரிவினையின் போது ஏற்பட்ட இந்து முசலிம் கலவரங்களால் பாதிக்கப்பட்ட வட இந்திய மாநில முசலிம்கள் இலட்சக்கணக்கில் பாகிஸ்தானின் தென் மூலையிற் சிந்து மாகாணத்தில் கராச்சியிலும் அதைச் சுற்றியும் குடியேறினர். உருது மொழி பேசும் மொகாஜிர் இசுலாமியர் என அழைக்கப்படும் இவர்கள் மிகச்சிறுபான்மையினரான போதும் காலப்போக்கிற் பெருவளர்ச்சி கண்டு கராச்சியிற் பொருண்மிய ரீதியாகவும் கல்வியிலும் ஏனைய முசலிம் இனத்தாரை விட மேல் நிலையுடையவராக மாறினர். இவர்களின் இத்தகைய வளர்ச்சி சிந்து மாகாணத்தின் மைந்தர்களாகத் தம்மைக் கருதும் சிந்தி இனத்தவர்க்குப் பொறுக்கவில்லை.

அத்தோடு மொகாஜிர் இன மக்களின் மனக்குறைகளை எப்போதுமே பாகிஸ்தானில் வாழும் சிந்தி, பஞ்சாபி, பட்டாணிய, பலூச்சி இன மக்கள் புறம் தள்ளித் தமக்கும் மொகாஜிர்களுக்குமிடையிலான வேறுபாடாகக் கருதுவதால் நிலைமை மோசமாயிற்று. இவ்வெறுப்பும் இந்தியாவிலிருந்து இவர்கள் இடம் பெயர்ந்தவர்கள் என்பதால் இந்திய உளவாளிகள் இவர்களுடன் ஊடுருவி விட்டனர் என்கிற சந்தேகமும் இப்போது பாரிய வன்முறைக் களங்களைத் தோற்றுவிக்கின்றன. இந்தியா வும் தனது மேலாதிக்க நலன்கட்காகப் பாகிஸ்தானைச் சீர்குலையச் செய்யத் தேவையானபோது அழுத்தம் கொடுக்க மொகாஜிர் மக்களிடையேயிருந்த வெறுப்புணர்வைப் பயன்படுத்தியது. 'றோ' அமைப்பின் ஊடாகத் தலையீடுகள் நடைபெற்றன. மொகாஜிர் குவாமி அமைப்பின் உருவாக்கத்திற்குக் கூட றோவே காரணமாயிற்று. எனவே கராச்சியில் நிகழும் குண்டு வெடிப்புக்கள, மோதல் கள், பாகிஸ்தானின் பொருண்மியத்தை மிக மோசமாகப் பாதிக்கின்றன. பழிக்குப் பழியாகவே கராச்சியில் இயங்கிய இந்தியத் துணைத் தூதரகம் பல தடவை தாக்கப்பட்டு இறுதியாகச் சென்ற டிசம்பர் மாதம் மூடப்பட்டது. மொகாஜிர் அமைப்பினரோடு தொடர்பு கொண்டு அவர்களைத் தூண்டி உதவி வருவதாகப் பாக் அரசு அப்போது குற்றம் சாட்டியது. எனவே இந்தியா வின் தென்னாசியக் கொள்கை தொடர்பான சிக்கலில் மொகாஜிர் மக்கள் பகடைக்காய்களாக்கப் பட்டதாலே இப்போது பெனாசீர் பூட்டோ அம்மையார் இம்மக்களின் தலைவர்களைச் சிறையிலிட்டும், இவர்களைப் பயங்கரவாதிகள் என்றும் கூறுவதோடு இம்மக்களின் நியா யமான கோரிக்கைகளை நிறைவேற்றவும் மறுத்து வருகின்றார். அதேவேளை இந்தியத்தரப்பிலும் இம்மக்களின் சிக்கல்களைத் தீர்ப்பதை நோக்கமாகக் கொண்டு செயற்பட்ட மொகாஜிர் தலைவர்களை ஓரம் கட்டி தனது அரசியல் நலனுக்கு அழுத்தம் கொடுக்கும் கருவியாக இவர்களைப் பயன்படுத்தும் அவலநிலை தோன்றியதால் இப்போது மொகாஜிர் மக்களின் சிக்கல் வேறு வடிவத்தை, பரிமாணத்தைப் பெற்று இழுபறியாகி விட்டது.

## பஞ்சாபிய சிந்தி, மொகாஜிர் மோதல்கள்

பாகிஸ்தான் தென்னாசியாவின் முசுலிம்கள் தாயகம் எனப் பொதுவிற் கூறப்பட்டாலும் இங்கேயும் பல பிரதேச, இனச்சிக்கல் வடிவங்கள் உள்ளன. இவற்றாலும் மொகாஜிர் மக்கள் பாதிக்கப்படுவது இன்னொரு கதை. தொடக்கத்தில் மேற்குப் பாகிஸ்தான், பாகிஸ்தானிலிருந்து பிரிந்தபோது மேற்குப் பாகிஸ்தான் சனத்தொகையில் 65 விழுக் காட்டிற்கும் மேலான இசுலாமிய பஞ்சாபியரே ஆதிக்கம் செலுத்தும் நிலை தோன்றியது. (ஏனைய இனங்களுள் 13 விழுக்காடு சிந்தி இனத்தவரும் 85 விழுக்காடுகள் பஷ்டுன்கள் எனப்படும் மலை வாழ் மக்களும் இருந்தனர்)

பிரிவினையின்போது மேற்குபாகிஸ்தான், வடமேல் எல்லைப்புற மாகாணம், சிந்து மாகாணம், பஞ்சாப் மாகாணம், பலுச்சித்தான் மாகாணம் எனப்பல மாகாணங்களை உள்ளடக்கியிருந்தது. பஞ்சாபியர் முன்னர் ஆங்கிலேய ஏகாதிபத்தியம் உருவாக்கிய இந்திய இராணுவத்தில் முதன்மை நிலையிருந்தமையால் இயல்பாகவே ஆட்சி அதிகாரம் இவர்கள் கைக்கே மாறியது. இப்பஞ்சாபியர் பதவி கிடைத்ததும் சும்மா இருக்கவில்லை. ஏனைய இனங்களைக் குறிப்பாக வளமான சிந்து மாகாணத்திற் செழிப்புடன் வாழ்ந்த சிந்துக்கள்மேல் மேலாதிக்கம்

தொடர்ச்சி 16 ஆம் பக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## இந்திய மேலாதிக்கத்தின்.....

செலுத்தினர். அவர்கள் நிலங்களைப் பறித்தனர். குடியேற்றங்கள் உருவாக்கினர். இராணுவம் மூலம் அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விட்டனர். அதேபோல மொகாஜிர் மக்களும் பாதிக்கப்பட்டதாற் தொடக்கத்திற் சிந்துக்களோடு மொகாஜிர்கள் ஒன்றுபட்டு நின்றனர். முன்னர் சல்பிகார் அலி பூட்டோ 1970 களின் பின் பிரதம மந்திரியானபோது இவ்வுறவு பாதிப்புக்குள்ளாயிற்று. சிந்தியினத்தவரான பூட்டோ மொகாஜிர்களை ஓரம்கட்டும் முயற்சியாக அவர்களது கல்வி, வேலை வாய்ப்புக்களைக் குறைத்தார். அடக்குமுறைகளை அம்மக்கள் மீதே ஏவினார். இதன் காரணமாகவே இந்தியாவின் றோ தலையிட மேலும் வாய்ப்புக்கிடைத்தது. எனவே 1993 இல் நடைபெற்ற தேர்தலிற் பெனாசீர் அம்மையார் வெற்றிபெற்ற போதும் மொகாஜிர் மக்கள் இத்தேர்தலைப் புறக்கணித்தனர். ஆனால் இதேவேளை பஞ்சாபியரைப் பெரும்பான்மை யாகக் கொண்ட இராணுவமோ சிந்தி இனத்தார்க்கு எதிராகக் கடும் கசப்புணர்வு கொண்டது. (முன்னர் சல்பிகார் அலி பூட்டோ) பஞ்சாபியரான இராணுவத்தளபதி சியாவுல் கக்கால் பதவி நீக்கப்பட்டுத் தூக்கிற் போடப்பட்டது தெரிந்ததே. எனவேதான் பெனாசிர் பூட்டோ அம்மையாருக்கு முன்னர் பதவியிலிருந்த பஞ்சாபியரான நவாப் செரிப் பிரதமமந்திரியாக இருந்தபோது கராச்சியிற் கலவரத்தை அடக்க இராணுவம் அழைக்கப்பட்டது. ஆனால் MQM போராளிகள் இராணுவத்தின் நோக்கத்தை அடையவிடவில்லை. அடக்க முடியாததால் இராணும் திருப்பிப் பெறப்பட்டது. எனவே மொகாஜிர் மக்கள் இப்போது இந்தியாவின் அரசியல் சதுரங்க ஆட்டத்தில் பகடைக்காயாகி சிந்து மாநிலத்தில் பாக்கிஸ்தான் மக்கள் கட்சி ஆட்சியின் அதன் மாநில முதல்வரான அப்துல்லாசா என்பவராலும் பூட்டோ அம்மையாராலும் ஒடுக்கப்பட்டும் பாக்கிஸ்தான் பஞ்சாபிய பேரினவாத இராணுவ அடக்குமுறைக்குட்பட்டும் அல்லலுற்று உள்ள நிலைமையே மிஞ்சியுள்ளது.

### பாக் படும் பாடு

இவ்வாறாக இன்று 130 மிலியன் மக்களைக் கொண்ட பாகிஸ்தான் தோன்றி 48 வருடங்கள் கழிந்த பின்னும் தனது மக்கட்கு நல்வாழ்விற்கான பாதையைக் காட்ட முடியாமல் அழிவுப்பாதையிற் செல்லும் நிலை தோன்றிவிட்டது. ஜம்மு காஷ்மீரில் மோதல்கள் உச்சம் பெறும் அதேவேளை கராச்சியிலும் கதிகலங்க வைக்கு மளவு வன்முறை மோதல்கள் வெடிப்பதும் இதற்கு இந்தியாவும் பாக்கிஸ்தானும் ஆளை ஆள் குற்றம் சாட்டுவதும் எதிர்காலத்தில் இந்திய உபகண்டத்தின் நிலை எத்தகையதாக அமையப் போகின்றது என்பதை விளக்கி நிற்கின்றது. தனது சீரழிவுக்கு இப்போது இந்தியாவை மட்டுமன்றி நடுவழியிற் தன்னைக் கைவிட்டதாக அமெரிக்காவையும் பாகிஸ்தான் பழி சுமத்தும் நிலையே தோன்றிவிட்டது. ஆப்கான் சிக்கலின்போது அமெரிக்காவின் செல்லப் பிள்ளையாக வேண்டிய உதவிகளைப் பெற்று மகிழ்ந்த பாகிஸ்தான் இப்போது அமெரிக்காவின் வேண்டாதபிள்ளை. ஆப்கான் சிக்கலின் போது வருடாந்தம் 600 மிலியன் அமெரிக்க டொலராகவிருந்த உதவி இப்போது 13 மிலியன் டொலராகச் சரிந்து விட்டது. அது மட்டுமன்றி அணுகுண்டு தயாரிக்கும் ஆற்றல் இருப்பதாகக் கூறி முன்னர் 38 F16 நவீன போர் விமானங்கள் விற்கும் திட்டத்தையும் இப்போது அமெரிக்கா கைவிட்டு விட்டது - விற்காமல் விட்டாலும் பரவாயில்லை. கொடுத்த 650 மிலியன் டொலர் பணத்தைத் தன்னும் இன்னும் திரும்பப் பெறமுடியவில்லை. இதேவேளை மக்கள் வாழ்க்கை நிலையோ கீழ்நோக்கிச் செல்கின்றது. வருடாந்தம் மொத்தச்செலவில் 30 விழுக்காட்டை இராணுவத்திற்குச் செலவிடும் பாகிஸ்தான் தனது மொத்தத் தேசிய உற்பத்தியில் 2 விழுக்காட்டையே கல்விக்குச் செலவிடுகின்றது. அதன் பயன் 27 விழுக்காட்டினரே இன்று நாட்டிற் கல்வியறிவு பெற்றவர்கள். பெண்கள் நிலையோ சொல்லுந்தரமன்று. மிக்கக் குறைந்த சமூக பொதுநல அபிவிருத்தி கொண்ட நாடாகப் பாகிஸ்தான் இருப்பதே மொத்தத்தில் நாமறிய வேண்டிய செய்தி.

எனவே இத்தகைய நிலையில் அமெரிக்க வெறுப்புணர்வு வளர்வதும், இசுலாமிய அடிப்படை வாதத்தின் பால் நாட்டம் செல்வதும், ஆப்கான் போரின் மறைமுக விளைவாக இன்று பாகிஸ்தானில் வேர்விடுகின்றது. ஏனென்றால் ஆப்கான் போரின்போது 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இசுலாமிய அரபுலகப் போராளிகள் முஜாதின்கட்கு ஆதரவாகப் போரிடப் பாக் வந்து சேர்ந்ததாக இப்போது சில தகவல்கள் தெரிவிக்கின்றன. இவர்களிற் பலர் இன்னமும் உள்ளனர். எனவே இன்று அமெரிக்காவுக்குப் பாகிஸ்தான் போக்கு வேப்பங்காயாகக் கசக்கத் தொடங்குகிறது. இத்தகைய அரசியற் சதி வலைப் பின்னலில் இழையாகச் சிக்கிவிட்ட பாகிஸ்தானை என்றுமே தலையெடுக்கச் செய்ய விடாமல் இந்தியா முயல்வதே இன்று நடக்கும் நடப்பாகும். எனவே இப்போது பெனாசிர் பூட்டோ அம்மையார் என்ன செய்யயப் போகின்றார் என்பதே எழும் கேள்வி. கராச்சியில் இராணுவத்தை நிலை கொள்ளச் செய்யப் போகின்றாரா! அல்லது மொகாஜிர் மக்களின் நியாயமான அபிலாசைகளைத் தீர்க்க முயலப் போகின்றாரா! அல்லது எல்லாவற்றிற்கும் பெரிய திசைதிருப்பலாகக் காஷ்மிர் விவகாரத்தைத் தூக்கிப் பிடிக்கப் போகின்றாரா! என்பதே இனி வரலாறு சொல்ல வேண்டிய சங்கதியாகவுள்ளது. நரசிம்மராவின் திசை திருப்பல் உத்திகளை அம்மையாரும் கவனத்திற் கொள்வாரென்றே நாம் நம்புகின்றோம்.

## தீவிர உணர்ச்சியும் தியாகமும்...

சிறீலங்கா சனாதிபதி பிரேமதாசா ஆகியோர் போன்ற அரசியற் கொலைகளுக்குக் கரும்புலிகளே காரணமானவர்கள் என்று கருதப்படுகிறது. கடந்தாண்டு சிறீலங்கா கடற்படைக்கு ஏற்பட்ட மிகப்பெரிய இழப்புக்களுக்கும் அவர்களே காரணம் ஆகும். கடந்த ஏப்பிரல் 19ஆம் நாள் திருகோணமலை துறைமுகத்தில் இரு கடற்படைப் பீரங்கிப்படகுகள் தகர்க்கப்பட்டதும் இதில் அடங்கும்.

ஆனால் தீவிர உணர்ச்சிப் பெருக்கில் மட்டும் புலிகள் நம்பியிருக்கவில்லை.

போராளிகள் சிறந்த முறையில் ஆயுதம் தரித்திருக்கிறார்கள். அவர்களுக்கு ஆயுதத்தளபாடங்கள் பல வழிகளில் வருகின்றன. சில சிறீலங்கா அரச படையினரிடமிருந்து கைப்பற்றப்படுகின்றன. சிலவற்றை அவர்களே உற்பத்தி செய்கின்றனர். வேறு சில வெளிநாட்டு ஆயுத வியாபாரிகளிடம் வாங்கப்படுகின்றன.

ஓரளவு தானியங்கித் துப்பாக்கி போன்ற காலாற்படை ஆயுதங்கள் எப்போதுமே வெளிநாடுகளிலிருந்து வருவது வழக்கமாகும். 1980களின் நடுப்பகுதியில் இந்தியாவில் தமிழ் இயக்கங்கள் பயிற்சி பெறத் தொடங்கிய போது புலிகள் ஏ.கே. 47 ரகத் துப்பாக்கிகளைப் பெறத் தொடங்கினர்.

அதுமுதல் புலிகளுக்கு பன்னாட்டு ஆயுதச் சந்தை, ஆயுதங்களைப் பெறும் முக்கிய இடமாகியது. வெளிநாடுகளிலிருந்து வாங்கப்பட்ட ஆயுத தளபாடங்களில் இரவில் பார்க்கும் 'பைனாகுலர்' தொலைநோக்கி, தொலைத் தொடர்புக் கருவிகள், கனரக இயந்திரத் துப்பாக்கிகள், எறிகணைகள் என்பன அடங்கும்.

இந்த ஆண்டு புலிகள் நுட்பம் வாய்ந்த ஆயுதங்களைப் பெற்றுள்ளனர்-ஸ்ரிங்கர் ஏவுகணைகள், பீரங்கிகள், இலகு ரக விமானங்கள் இதில் அடங்கும். இவ் விமானங்கள் பிரான்சிடம் இருந்து வாங்கப்பட்டதாகச் சிறீலங்கா அரசு கூறுகின்றது. கிழக்கு ஐரோப்பாவில் ஆயுதங்களை வாங்குவதில் எந்தச் சிக்கலுமில்லை என இராணுவ வல்லுனர்கள் கூறுகின்றனர்.

புலிகளின் ஏவுகணைப் பலம் இராணுவ சம பலத்தில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. சிறீலங்காப் படையின் ஆதிக்கத்திற்கு பெரும் சவால் விடப்பட்டுள்ளது.

இதை மட்டும் புலிகள் நம்பியிருக்கவில்லை. அவர்களால் கைப்பற்றப்படும் காவல்துறை, இராணுவ முகாம்களில் இருந்தும் புலிகளால் ஆயுதங்கள் எடுக்கப்படுகிறது.

1993இல் கரையோர ரோந்துப் படகுகளையும், டாங்கியையும் புலிகள் கைப்பற்றினர். புலிகள் தம் கட்டுப்பாட்டுப் பகுதியில் சில ஆயுதங்களை உற்பத்தி செய்கின்றனர்.

இதில் மோட்டார், வெடிகுண்டுகள், கண்ணிவெடிகள் சிலவாகும். சில ஆண்டுகளுக்கு முன் புலிகள் நீர்மூழ்கிக் கப்பலின் மூல முன்மாதிரி ஒன்றைக்கூட உற்பத்தி செய்துவிட்டதாக தகவல்கள் கூறின.

யாழ்ப்பாணத்தில் மற்றைய வாழ்க்கைக் கூறுகள் போலவே போரும் தமிழ் சமுதாயத்தின் அளப்பெரும் போர்மதியை வெளிக்காட்டியுள்ளது.

போர் முடிவுற்றபின் இந்த கூர்மதி நுட்பம் மேலும் ஆக்கபூர்வமான விடயங்களுக்கு மாற்றப்படும் என நம்புவோமாக என அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ஆளுங்கட்சியிலும்...

"ஐக்கிய தேசியக் கட்சியை வளர்க்க வேண்டிய பொறுப்பு அனுராவிடம் உள்ளது. இதற்கு ஏனைய சகலரும் ஒத்துழைப்புத் தரவேண்டும். கம்பஹா மாவட்டத்தில் ஐ.தே.க. கூடிய வாக்குகளைப் பெற அனுரா வழி செய்வார் என்று நம்புகிறேன்" என ஜே.ஆர். உரை நிகழ்த்தினார்.

ஒட்டு மொத்தத்தில், சிறிலங்காவின் இன்றைய அரசியற் களத்தில் முக்கிய பிரமுகராக அனுரா மாறி வருகிறார் அல்லது மாற்றப்பட்டு வருகிறாரென்பது தெளிவாக உணரப்பட்டதாகவே இருக்கிறது.

## சந்திரிகா அரசுக்கு...

விமர்சகர்கள் கருதுகின்றனர். இதற்குச் சீனா, இந்தியா ஆகிய பெரிய நாடுகள் குறித்து அமெரிக்காவின் எதிர்கால அச்சம் காரணமாக இருக்கலாம்.

இதற்கு ஆதாரமாகத் தென்னாசியாவிற் கெடுபிடிப் போர்க்கால நண்பனான பாகிஸ்தானைப் பேணுவதிற் தற்பொழுதும் அமெரிக்கா ஆர்வமாகச் செயற்படுவது சுட்டிக்காட்டப்படுகின்றது. இதற்குக் கிளிங்டன் நிர்வாகம் இந்தியதவின் வலுவான ஆட்சேபத்தையும் மீறிப் பாகிஸ்தானுக்கு 37 கோடி டொலர் இராணுவ உதவி வழங்க முன்வந்ததைக் கூறலாம்.

இந்த நிலையில் இலங்கை இனப்பிரச்சினை விவகாரமும் அமெரிக்கத் தரப்பிற் தென்னாசிய பிராந்தியத்தின் கொள்கை வகுப்பிற்கு உட்பட்டதாகவே இருக்கமுடியும். ஆனால் இதற்கு எந்தளவு தூரம் அமெரிக்காவினால் முதன்மை அளிக்கப்பட்டுள்ளது என்பது தற்பொழுது தெரியவராத தொன்றாகவே உள்ளது.

ஆனால் அமெரிக்கா இனப்பிரச்சினையிற் சிறீலங்கா அரசு எதிர்பார்த்ததிற்கு மாறானதொரு நிலைப்பாட்டைப் பின்னர் எடுத்தமைக்குத் தனியாகத் தென்னாசியாவின் பூகோள அரசியல் மட்டுமல்ல வேறு பல காரணங்களும் உண்டு. இதிற் குறிப்பாக இனப்பிரச்சினைக்குச் சிறீலங்கா அரசால் இராணுவத்தீர்வை எட்டிவிட முடியாது என்பதை அமெரிக்கா உணர்ந்து கொண்டுள்ளமை முக்கியமானதாகும். இதனைச் சிறீலங்கா இராணுவம் தொடர்ச்சியாகச் சந்தித்துவரும் இழப்புக்களும் விடுதலைப் புலிகள் கைக்கொள்ளும் போர்முறை வடிவங்களும் அமெரிக்காவை உணர வைத்திருக்கலாம்.

அடுத்ததாக, விடுதலைப் புலிகளை அமெரிக்க அரச 'பயங்கரவாத' அமைப்புக்களின் பட்டியலில் இட்டுக் கொண்டாலும், தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகவே விடுதலைப் புலிகள் உள்ளனர் என்பதை அமெரிக்கா அண்மையில் உணர்ந்திருக்கக்கூடும். இதனை அண்மைக்காலத்தில் மேற்குலக நாடுகளின் தலைநகரங்களிற் தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும், அதன் தலைமைக்கும் ஆதரவாக நடாத்தப்பட்ட பேரணிகளில் இருந்து புரிந்து கொண்டிருக்க வேண்டும். அத்தோடு, அண்மையில் வடபகுதிக்குச் சென்று திரும்பிய சில சர்வதேச அமைப்புக்களைச் சேர்ந்த மேற்குலகத்தவரும் தமிழ் மக்களின் நிலைப்பாட்டையும், விடுதலைப் புலிகளுக்கு அவர்கள் வழங்கியுள்ள ஆதரவையும், மேற்குலகிற்கு வெளிப்படுத்தியிருக்கக்கூடும்.

இதற்கும் மேலாக சந்திரிகா அரசின் நிலைப்பாடு குழப்பமானதாகவும், தெளிந்த பார்வை அற்றதாகவும் இருப்பதோடு அவற்றின் செயற்பாடுகளும் அவர்களுக்குத் திருப்தி அளிக்க முடியாமற் போயிருக்கலாம். குறிப்பாக இராணுவ நடவடிக்கைகளின் போது பெரும் இன அழிப்பு நடவடிக்கையில் அரச இறங்கியமையும், உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் அனுப்பும் விடயத்திற் போடும் முட்டுக்கட்டைகளும் அரசின் மீதான அவர்களின் நம்பிக்கையைச் சிதைத்து விட்டிருக்கலாம்.

ஏனெனில் இவை அமெரிக்காவும், மேற்குலகமும் வற்புறுத்தும் மனித உரிமைகள் தொடர்பான அம்சங்களுக்கு மாறானவையாகும். அத்தோடு அண்மைக் காலத்தில் உலக மனித உரிமை ஸ்தாபனங்களின் கண்டனங்களுக்கும் சந்திரிகா அரசு உள்ளாகி வருகின்றது. இவை சிறீலங்காவின் போக்கை ஆதரிப்பதற்கு முட்டுக்கட்டைகளான அம்சங்களாக இருந்தன.

அத்தோடு, அரசு முன்வைத்த தீர்வுத் திட்ட யோசனைகள் பலவீனமானவை என்பதோடு அவை அடிக்கடி மாற்றத்திற்கும் உள்ளாகிக் கொண்டிருந்ததாலும், அரசின் இத்தீர்வுத் திட்ட யோசனைகளில் மேற்குலகிற்கு நம்பிக்கை ஏற்படுத்தத் தவறிவிட்டதெனலாம்.

இந் நிலையிற்தான், இனப்பிரச்சினைக்கு மூன்றாம் கட்ட ஈழப்போர் தொடங்கியபோது தனது நிலைப்பாட்டை ஓரளவு மாற்றிக் கொண்டுள்ளது என உணர முடிகின்றது. இம் மாற்றமானது, எந்தளவிற்குச் சிறீலங்காவின் இராணுவ நடவடிக்கைக்குப் பாதகமானவை என்பதைத் தற்பொழுது அறுதியிட்டுக் கூறமுடியாது. இது எதிர்காலத்தில் மேற்குலகம் சிறீலங்காவிற்கு வழங்கும் நிதி உதவிகளும், ஆயுத தளபாட விற்பனையுமே தீர்மானிக்கக் கூடியவை ஆகும். இருப்பினும் வெளிப்படையாக இராணுவத் தீர்விற்கு மேற்குலகில் இருந்து ஆதரவு கிட்டாமை சந்தரிகா அரசிற்கு ஏமாற்றத்தை அளிப்பதாகவே இருக்கும். இது "உலகம் எம் பின்னால்" என்ற சந்திரிகா அரசின் பிரசாரத்தை நிச்சயம் முடக்கிவிடும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சிறுவனும் கடிதமும்

சிறுகதை

— வர்ணன்

எனக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. மனம் பெரிதும் சங்கடப்பட்டுக் கொண்டிருந்தது. இப்படி நிகழுமென நான் எதிர்பார்க்கவில்லை. மூன்றுமுறை ஊரைச்சுற்றிச் சைக்கிள் ஓடியதில் கால்கள் வலித்தன. இருபது ஆண்டு தபால் 'பியோன்' சேவையில் இதுவரை இப்படி நிகழவில்லை. இனியும் நிகழுமென எதிர்பார்க்கவில்லை. மேரி என்பவள் யார்! இந்த ஊரிலேயே பிறந்து வளர்ந்த எனக்குத் தெரியாதவர்கள் எவருமில்லை. எனக்குத் தெரியாமல் மேரி இங்கே இருக்கிறாளா! என்னால் அவளைக் கண்டுபிடிக்க முடியவில்லையே. என்னால் சீரணிக்க முடியவில்லை. மீண்டுமொரு முறை கடிதத்தின் விலாசத்தைப் பார்த்தேன். மேரியம்மா, சென். பீற்றர்ஸ் தேவாலயம் நவாலி என்றிருந்தது.





மூன்றுமுறை ஊரை வலம்வந்து விசாரித்தும் மேரியைக் காண முடியவில்லை. இயலாமையில் "விலாசம் மாறிவிட்டார்களோ" என நினைத்தேன். அதற்கு மனம் உடன்படவில்லை. "ஏதாவது அவசர கடிதமோ" என நினைத்த போது எழுதியவர் மீது பரிதாபமேற்பட்டது. கடிதத்தை எழுதியவருக்குத் திருப்பி அனுப்ப அவருடைய விலாசமும் இருக்கவில்லை.

"கடிதத்தைப் பிரித்துப் பார்த்தாலென்ன" என எண்ணினேண்.



இதுவரை இன்னொருவருக்கு வந்த கடிதத்தைப் பிரித்துப் பார்த்ததில்லை. பிரித்துப் பார்க்க மனம் கூசியது. "குப்பையில் போடப்போகும் கடிதத்தைப் பிரித்துப் பார்த்தாலென்ன" மனம் மறுதலித்தது. மறுதலித்த மனதைத் திடப்படுத்திக் கொண்டு கடிதத்தைப் பிரித்தேன்.

உள்ளுக்குள் ஒரு கொப்பிக் கடதாசி இருந்தது. அதிலுள்ள எழுத்துக்கள் சற்றுப் பெரிதாகவும் சொத்தியாகவும் இருந்தன. இதனை யாரோ முதியவர் அல்லது சிறுவன் எழுதியிருக்க வேண்டுமென நினைத்தேன். கடிதத்தின் முடிவைப் பார்த்தேன். இப்படிக்கு வெற்றுடல் மகன் அன்ரன் என்றிருந்தது. முடிவைப் பார்த்த எனக்கு முழுவதையும் படிக்க வேண்டும் போலிருந்தது-அந்தப் பெரிய சொத்தியான எழுத்துக்களைச் சிரமப்பட்டுப் படிக்கத் தொடங்கினேன்.

அன்பின் மேரியம்மா அறிவது - நான் நலமில்லை-எங்களின் குடும்பத்தில் நான் தான் மிச்சம்- என் அம்மா, அப்பா, தம்பி, தங்கை இல்லை- நண்பனில்லை-ஊரிற் பலரில்லை. எல்லோரும் தேவாலயம் மீதான குண்டுவீச்சிலே பலியாகிவிட்டார்கள். அப்பாவை, அம்மாவை, உடன்பிறப்பைப் பார்க்க மருத்துவமனைக்குப் போனேன்-அவர்களின் முகத்தை என்னாற் பார்க்கமுடியவில்லை-எனக்குப் பயம் என்று நினைக்கிறீர்களா! அவர்களிற்கு முகம் இருந்தாற் தானே! பார்ப்பதற்கு என்னைப் போன்ற சிறுவர்களும் அங்கு நின்றார்கள்-அவர்களும் என்னைப்போல தங்களின் அம்மா, அப்பாவை, உடன்பிறப்பைத் தேடிக் கொண்டிருந்தார்கள்.

தினை விதைத்தவன் தினை அறுப்பான். வினை விதைத்தவன் வினை அறுப்பான் என்பார்களே-ஆனா இஞ்ச நடப்பதென்னம்மா-எனக்கிப்ப யாருமில்லை-நீதானம்மா எல்லாமெனக்கு-உன்னட்டை மீண்டும் வர ஆசை-ஆனா வரமுடியவில்லை. நாங்கள் வாறதாலை தானே உனக்கு மேலே குண்டு போடுகினம்-உன்னட்டை ஒண்டுகேக்கோணும் அதை நேரிலைதான் கேக்க ஆசை நாளைக்கு வாறன்.

கடிதத்தைப் படித்ததும் எனது உணர்வுகள் உறைந்து போயின. கடிதம் கையிலிருந்து நழுவியது கூட எனக்குத் தெரியவில்லை. இந்தக் கடிதத்தை எழுதிய சிறுவன் எப்படியிருப்பான். அவனைச் சந்திக்க வேண்டுமென நான் ஆவல் கொண்டேன். நாளை தேவாலயம் போவதென முடிவு செய்தேன்.

அதிகாலையிலேயே கோயிலை அடைந்தேன். கோயிற் சூழல் அமைதியாக இருந்தது. சன நடமாட்டம் இல்லை. எனது கண்கள் கோயிலைச் சுற்றி நோட்டமிட்டன. ஒருவரும் தென்படவில்லை. மேரிமாதாவை நோக்கிய நான் அவனையும் கண்டு கொண்டேன். அந்தச் சிறுவன் மேரி மாதாவிற்கு எதிரில் அமர்ந்திருந்தான். மேரி மாதாவைப் பார்ப்பதும் வானத்தைப் பார்ப்பதுமாக இருந்தான்.

நான் அவனை நோக்கி நடந்தேன். அவனுக்குப் பக்கவாட்டில் நின்றேன். அவன் என்னைக் கவனித்ததாகத் தெரியவில்லை. மாதாவையும் வானத்தையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தான்.

அவனது தோற்றம் என்மனதைப் பெரிதும் வாட்டியது-வயது எட்டிருக்கும். அவனுடைய நீலக்காற்சட்டையும் சேட்டும் தூசி படிந்து கபில நிறமாக இருந்தன. சுருளான தலைமயிர் கலைந்து போயிருந்தது. கண்கள் நீர்வற்றிய குட்டையாயிருந்தன. கால்களிலும் கைகளிலும் கீறற் காயங்களிருந்தன. அவை கருமை தட்டியிருந்தன.

அவன் தன்னுடைய செயற்பாட்டிலிருந்து மாறுவதாகத் தெரியவில்லை. தொண்டையைச் செருமி அவன் பார்வையைத் திசைதிருப்ப முயன்றேன். அதில் எனக்குத் தோல்விதான் கிடைத்தது. "தம்பி" எனக் குரல் கொடுத்தேன். அதற்கும் அவன் அசையவில்லை. அவனுடைய தலையைத் தடவினேன்.

இப்போது அவன் என்னைத் திரும்பிப் பார்த்தான். இந்த நிலையைத் தவறவிட்டால் அவனுடன், கதைப்பது சாத்தியமில்லை என நினைத்துக் கதைக்கையத் துவக்கினேன்.

"தம்பிக்கென்ன பேர்?"

"அன்ரன்"

இப்பொழுது கடிதம் எழுதியது இவன்தானெனப் பூரணமாக எண்ணிக்கொண்டு தொடர்ந்தேன்.

"தம்பி பள்ளிக்கூடம் போகேல்லையே?"

"இல்லை"

"ஏன்?"

'நான் தனியாய் போக விரும்பவில்லை'.

இவனது மறுமொழி எனக்குப் புரியவில்லை.

எனினும் தொடர்ந்து கதைத்தேன்.

"ஏன் தம்பி கூடப் படிக்கிறவையள் வரேல்லையே?"

"வரமாட்டினம்"

"எங்கை போட்டினம்"

"மேரி மாதாட்டை"

"ஆரோடை போனவை"

"என்ரை அப்பா, அம்மாக்களோடை"

இப்போது எனக்குப் புரிந்துவிட்டது. எனினும் இன்னும் அவனுடன் கதைக்க வேணும் போலிருந்தது.

"அப்ப டீச்சர்?"

'அவ ஆஸ்பத்திரியிலை"

"என்ன சுகமில்லை"

"புக்காரா அடியிலை காயம்"

"காயம் மாற வருவாதானே"

"என்னத்திலை வருவா"

"இப்ப எல்லாரும் சைக்கிளிலைதானே வாறவை. இல்லாட்டா நடந்து வருவா"

"அவவுக்கு ரெண்டு காலுமில்லை"

என்னுடைய மனதில் யாரோ சம்மட்டியால் அடிப்பது போலிருந்தது. இனியும் இதைப் பற்றிக் கேட்கக்கூடாது என நினைச்சுக் கதையைத் திசை திருப்பினேன்.

"தம்பி மேரி மாதாட்டை என்ன கேட்டனியள்".

அவன் என்னை உற்று நோக்கினான். பின்னர் மேரி மாதாவைப் பார்த்தான். வானத்தைப் பார்த்தான். அமைதியாக இருந்தான். நான் மீண்டும் தொடர்ந்தேன்.

"சாப்பாடும் உடுப்பும் கேட்டனியளே?"

அவன் இப்போது என்னைக் கோபத்தோடு பார்த்தான். தலையை வலு வேகமாக ஆட்டி "இல்லை" என்றான்.

"அப்ப என்ன கேட்டனியள்"

"புலிமாமாக்கள் பொம்பரை, அவ்ரோவை சுட்டு விழுத்தினமாதிரி இந்த புக்காராவையும், சுப்பசொனிக்கையும் சுட்டு விழுத்தோணும்"

சொல்லிவிட்டு அவன் மீண்டும் மேரிமாதாவைப் பார்த்தான். நான் அவனின் தலையில் தடவியபடி, "தம்பி என்னோட வாறியே" எனக் கேட்டேன். அவன் மறுத்துவிட்டான். மீண்டும் அவன் மேரிமாதாவை உன்னிப்பாகப் பார்த்துக் கொண்டிருந்தான்.

நான் வீட்டை நோக்கி நடந்தேன். கடலோரமாக வந்த இரு சுப்பசொனிக் விமானங்களும் ஒரு புக்காரா விமானமும் அயல் கிராமத்தில் குண்டுகளைப் போட்டுவிட்டு மறைந்தன.

வீட்டின் முன் விறாந்தையில் அமர்ந்தேன். சாப்பிட மனம் வரவில்லை. வீதியால் போன இருவர் பேசிக்கொண்டு போவது தெளிவாகக் கேட்டது.

குண்டு சிவன் கோயிலிலை விழுந்து சிவன் கோயில் ஐயரும் மகனும் செத்துப் போச்சினம்.

காலையில் நான் வீதியில் உலாவுவது வழக்கம். வீதிக்கு வந்தபோது வானத்தில் இரையும் சத்தம் கேட்டது. வானத்தைப் பார்த்தேன். புக்காரா விமானமொன்று தாழ்ந்து குண்டுபோட முயற்சித்தது. அதன் செட்டைகள் புகைத்தன. அது தரையை நோக்கிச் சென்று கொண்டிருந்தது. எனக்கு உண்மை நிலை புரிந்துவிட்டது. உள்ளூர மகிழ்ச்சியுடன் நடந்தேன். ஒரு சிறுவன் எதிரில் ஓடிவந்தான். அவனது முகத்தில் மகிழ்ச்சி கொப்பளித்தது. அவனை எங்கோ கண்ட ஞாபகம் வந்தது. அவன் கத்திக்கொண்டே வந்தான்.

"என்ரை அம்மாவை, அப்பாவை, தம்பியை, தங்கச்சியை அழிச்ச புக்காராவை புலிமாமாக்கள் சுட்டுப் போட்டினம்."

கடிதம் எழுதிய அந்தச் சிறுவன் ஊரைச் சுற்றி கத்திக்கொண்டே ஓடினான்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# முகங்களும் மனங்களும்

## தமிழீழத்தில் வெளியான 'முகங்கள்' திரைப்படம் பற்றிய ஒரு விமர்சனம்

'முகங்கள்' திரைப்படம் பார்த்திருப்பீர்கள். பார்க்காதவர்கள் இனிவரும் சந்தர்ப்பத்தைத் தவறவிடாதீர்கள். தமிழீழத் திரைப்பட இயக்குனர் ஞானரதன் அவர்களால் இயக்கி வெளியான இப்படம் தமிழீழத்திலும், வெளிநாடுகளிலும் காண்பிக்கப்பட்டது.

அந்தப்படத்தின் முடிவு-இடம்பெயர்ந்து துன்பமுற்ற நாயகனும் நாயகியும் யாழ்ப்பாணத்தை விட்டு வன்னிக்குச் செல்வதாக அமைக்கப்பட்டுள்ளது.

வளம் நிறைந்த வன்னிமண், இடம்பெயர்ந்தோரின் வாழ்விற்குக் கைகொடுக்கும் என்கிற செய்தி படத்தில் சற்று அழுத்தமாகச் சொல்லப்பட்டிருந்தது.

இப்படத்தைப் பார்த்து விட்டு வந்த நண்பர் ஒருவர் என்னிடம் சொன்னார் இப்படி-

'அதெப்படி எங்கட மண்ணை விட்டிட்டு வன்னிக்குப் போங்கோ எண்டு சொல்றது! இந்தக் கட்டம் எனக்குப் பிடிக்கேல்லை"

-அவர் "எங்கட மண்" என்று குறிப்பிட்டது, யாழ்ப்பாணத்திலுள்ள ஒவ்வொருவரினதும் சொந்த ஊரையே.

அப்படியென்றால், வன்னி எங்களது மண்ணில்லையா!

மட்டக்களப்பில் பிறந்த ஒரு போராளி யாழ்ப்பாணத்தில் இராணுவத்தோடு போரிட்டுச் சாகின்றான். யாழ்ப்பாணத்தில் பிறந்த போராளி திருகோணமலையை மீட்கப் போராடிச் சாகின்றான். வன்னியில் பிறந்தவன் வடமராட்சியில் மடிகின்றான். அந்த நண்பர் கூறிய கருத்தின்படி பார்த்தால், அவர்கள் எல்லோரும் அவரவர் ஊர்களில் அல்லவா போராடியிருக்க வேண்டும்!

எனக்குப் பல கேள்விகள் மனதில் வந்து உறுத்தின.

போர்க்காலக் கருத்தரங்கொன்றில் பெண் போராளியொருவர் உரையாற்றுகையில் சொன்ன விடயமொன்றும் சட்டென்று நினைவிற்கு வந்தது.

'இன்றைக்கு யாழ்ப்பாணத்தை ஆக்கிரமிக்க வரும் சிங்களப் படையைத் தடுத்து நிறுத்தவே, யாழ்ப்பாண இளைஞர்கள் போதாது, பெரிய ஒரு போர் நடக்கும்போது எல்லோரும் தங்கள் தங்கள் பிரதேசங்களைக் காப்பாற்றச் செல்லுமாறு போராளிகளுக்கு இயக்கம் பணிக்குமானால், யாழ்ப்பாணத்தை யார் காப்பாற்றுவது! இப்படி நடக்காது, எனினும் ஒரு கதைக்குச் சொல்கின்றேன்'

> தமிழீழத்தில் இதுவரை வெளியான சமூகத் திரைப்படத்தில் இப்படம் ஒரு முத்திரை பதித்து நிற்கிறது. அவ்வக்கால வாழ்க்கையினை கலாபூர்வமாக பதிவு செய்து நிற்கிறது. இன்று தமிழீழத்தில் மட்டுமல்லாது தமிழீழ மக்களின் புலம்பெயர்ந்த நாடுகளிலும் ஏகோபித்த பாராட்டுக்களைப் பெற்று வருகின்றது.

-இப்போராளியின் இக்கேள்வி சிந்திக்க வைக்கின்றது.

ஒவ்வொரு மனிதனுக்கும் தான் பிறந்த ஊர், கிராமம், வீடு, அந்த வீதிகள் எல்லாம் அற்புதமானவையாகவே தோன்றலாம். இதில் தவறு இல்லை. ஆனாலும், அப்பற்று இன்றைய காலகட்டத்தில் பரந்து விரிந்த தன்மை கொண்டதாக இருத்தல் அவசியமானது.

அடுத்த வீட்டுக்காரன் ஒரு 'பூவரசம் கதியாலை', ஓர் அங்குலம் நகர்த்தி நட்டுவிட்டாலே சண்டைக்கு நிற்கும் நாம், ஊரே பறிபோகிறபோது, உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு ஓடிவிடுகின்றோம். அந்தக் கட்டத்தில் ஒன்றும் செய்ய முடியாவிட்டாலும், அடுத்த கட்டத்தைப் பற்றிக் கூட நாம் சிந்திப்பதில்லை. 'பூவரசம் கதியா'லுக்காகப் போர்க்குணம் கொள்ளும் நாம் வீடே உடைந்து போன பின்-ஊரே அழிந்துபோன பின்-போர்க்குணம் கொள்ள வேண்டாமா!

அது ஒருபுறமிருக்க - ஆயிரம் மைல்களுக்கப்பால் இருக்கும் அந்நிய மண்ணில் பொருண்மியத் தேவைக்காக எந்தவொரு தொழிலைக் கூட மேற்கொள்ளும் நாம்-இடம்பெயர்ந்து அகதி முகாம்களில் வாழப்பழகிக் கொண்ட நாம்-எமது சொந்த மண்ணிலேயே இடம்பெயர்ந்து தொழில் செய்து வாழ்வதைக் குறைவாகக் கருதக் கூடாது.

**விவேக்**

முன்பெல்லாம் அரச-வங்கி உத்தியோகத்தர்கள் கூட, வன்னிப் பிரதேசங்களுக்கு மாற்றம் பெற விரும்புவர். அங்கே விவசாயம் செய்து மேலதிக வருமானம் பெறலாம் என்பதால் அப்பிரதேசங்களை அவர்கள் விரும்பினர்.

வன்னிமண்ணில் உழைத்த பணமெல்லாம் அந்த மண்ணின் வளர்ச்சிக்குப் பயன்படாமல், தங்களது 'சொந்த ஊர்'களில் கல்வீடாகவும், கட்டடங்களாகவும் தோற்றம் பெற்றமை வேறு கதை!

இன்றைய போர்க்காலச் சூழலில் யாழ் குடாநாட்டில் அகதிகளாக்கப்பட்ட பலர் வன்னி மண்ணிற்கு இடம்பெயர்ந்து, சிறிது சிறிதாக விவசாயம் செய்யத் தொடங்கி, பின் சொந்தமாகக் காணிகளைக்கூட வாங்கிக் குடியேறியுள்ளமை கவனிக்கத்தக்கதோர் மாற்றமாகும்.

தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் கூட, இடம்பெயர்வோருக்கு இதனையே ஆலோசனையாகக் கூறுகின்றது. அதற்கான உதவிகளையும் செய்து கொடுக்கின்றது.

பரந்த பரிமாணம் மிக்க இன்றைய விடுதலைப் போராட்டச் சூழலில், தமிழ் மக்கள் தங்கள் மனங்களிற் படிந்து போயிருக்கும் பழைய தூசுகளைத் தட்டித் துப்பரவாக்க வேண்டும்.

பிரதேசம் - பிரதேசத்திற்குள் ஊர் - ஊருக்குள் கிழக்கு மேற்கு - அதற்குள் பகுதிகள் - எனக் கூறுபோட்டு பிரிந்து நிற்கும் மனோபாவம் முற்றாக உடைபடல் வேண்டும்.

நன்றி: சாளரம்

# ஐ.நா முதல் ஐரோ....

மெல்பேர்ண் நகரிலும் தமிழீழ மக்களுக்கெதிரான சிறீலங்கா அரசின் இனப்படுக்கொலையைக் கடுமையாகக் கண்டிக்கும் ஒன்றுகூடல் ஒன்றும் இடம்பெற்றது.

## தென் ஆபிரிக்காவில்

தென்ஆபிரிக்காவில் ஐக்கிய நாடுகள் சபை அலுவலகத்துக்கு முன்பாக நடைபெற்ற பிரமாண்டமான ஆர்ப்பாட்டத்தில், தமிழ் மக்களைச் சிறீலங்கா இராணுவம் கொன்று குவிப்பதைக் கண்டித்தும் தலைவர் பிரபாகரன் தலைமையில் நடைபெறும் தமிழர்களின் சட்டபூர்வமான விடுதலைப் போராட்டத்தை அங்கீகரிக்கக் கோரியும் கோரிக்கைகள் எழுப்பப்பட்டன. நூற்றுக்கணக்கான பெண்களும் குழந்தைகளும் இவ் ஆர்ப்பாட்டத்திற் கலந்து கொண்டனர்.

## ஐக்கிய இராச்சியத்தில்

ஐக்கிய இராச்சியத்தில், (இலண்டனில்) பிரதமர் ஜோன் மேயரின் வாசற்தலமான இலக்கம் பத்து, 'டவுனிங்' வீதி முன்பாக நடத்தப்பட்ட மறியற் போராட்டத்தில் கறுப்புப்பட்டி அணிந்து நூற்றுக்கணக்கான தமிழ்மக்கள் குறிப்பாக பல்கலைக்கழக மற்றும் கல்லூரி மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர். நாகர்கோவில் மகா வித்தியாலயத்தில், சிறீலங்காவால் இனப்படுகொலை செய்யப்பட்ட நாற்பத்திரெண்டு பள்ளிச் சிறுவர்களின் பெயர்களுடன் கூடிய பதாகைகளைத் தாங்கியிருந்தனர். இவர்களைத் தாண்டிச் சென்று கொண்டிருந்த பல்லாயிரக்கணக்கான வெளிநாட்டவர்கள் அவற்றை அக்கறையுடன் பார்வையிட்டனர். பள்ளிச்சிறார்கள் ஆயிரக்கணக்கில் கையொப்பமிட்ட மகஜர் ஒன்றும் பிரித்தானியப் பிரதமரின் அலுவலகத்திற் கையளிக்கப்பட்டது.

## தமிழகத்தில்

25.10.95 புதன்கிழமை தமிழகத்தில், 30க்கும் அதிகமான தமிழ் அமைப்புக்கள் ஒன்று திரண்டு, சிறீலங்கா அரசின் இனப்படுகொலையைக் கண்டித்துப் பெருங்கூட்டம் ஒன்றை நடாத்தியதோடு, அடையாள உண்ணாவிரதமும் இருந்ததாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# கொழும்பில்....

குறித்து சிறீலங்காவின் பாதுகாப்பு வட்டாரங்கள் பெரும் அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளன.முதலில் பெரியதொரு குண்டுவெடிப்புச் சம்பவம் கேட்டதாகவும் அதனைத் தொடர்ந்து 8 வெடிச்சத்தங்கள் கேட்டதாகவும் கொழும்பு வாசிகள் தெரிவித்துள்ளனர். இவ்வேளையில் அங்கு மேலதிகமாக வந்த ஆயுதப் படையினருக்கும் குண்டு வைத்துத் தாக்கியோருக்கும் இடையில் நீண்ட நேரம் சண்டை நடந்ததாகவும் அதன்போது 8 இராணுவத்தினர், 10 விமானப்படையினர், சில அதிரடிப்படையினர் என்றரீதியில் 25 க்கும் மேற்பட்ட சிறீலங்காப் படையினர் கொல்லப்பட்டதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இத்தாக்குதலினால் 96 இலட்சம் அமெரிக்க டொலர் பெறுமதியான குதங்களும், 192 இலட்சம் டொலர் பெறுமதியான எண்ணெய்ப் பொருட்களும் அழிக்கப்பட்டுள்ளதாகச் சிறீலங்காவின் பெற்றோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் தெரிவித்துள்ளார்.

விமான எரிபொருளும் அழிந்துபோன காரணத்தினால் வெளிநாட்டு விமானங்களுக்கான எரிபொருள் விநியோகம் பாதிக்கப்பட்டிருந்தது. உறுகொடவத்தையில் இருந்த அனைத்து எண்ணெய்க் குதங்களும் தீப்பற்றி எரிந்துவிட்டதாகவும், கொலன்னாவையில் சில எண்ணெய்க் குதங்கள் தப்பியதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. தீயினால் எழுந்த புகை கொழும்பு நகரைச் சூழ்ந்து கவிந்து வருவதாற் காற்று பெரும் மாசடைந்து வருகிறது. 50,000 க்கும் மேற்பட்ட சிங்கள் மக்கள் அகதிகளாகி, உறவினர் வீடுகள் பொதுஇடங்களில் தங்கியுள்ளதாகத் தெரியவருகின்றது.

சிறீலங்காவில் எண்ணைக்குதங்கள் எரிந்த காரணத்தினால் பொருண்மியத்தில் பெரும் வீழ்ச்சியும், மந்த நிலையும் ஏற்பட்டுள்ளதாகப் பொருண்மிய நிபுஞர்கள் தெரிவித்துள்ளார்கள். இத்தாக்குதலின் விளைவுகள், நவம்பர் மாத வரவு செலவுத்திட்டத்திலேயே பிரதி-பலிக்கும் என்று செய்தித்துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்துள்ளார். சிறீலங்கா அரசின் பாதுகாப்பு உத்தரவாதம் குறித்து வெளிநாட்டு முதலீட்டாளர்கள் நம்பிக்கை இழந்துவிட்டதாகவும் வெளிநாட்டு உல்லாசப் பயணிகள், முதலீட்டாளர்களின் வருகையை இது பாதித்துள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இத் தாக்குதலின் விளைவாக எற்பட்ட பொருட்சேதம் எண்ணெய்க்குதங்களைப் பொறுத்தவரை 50 கோடி ரூபாய் என்றும், எண்ணெய்ப் பொருட்களைப் பொறுத்தவரை 100 கோடி ரூபாய் என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. மொத்தத்தில் சிறீலங்கா அரசால் தனது தலைநகரையே காப்பாற்ற முடியாத கையாலாகத்தனத்தையே இத் தாக்குதல் எடுத்துக்காட்டுகிறது.

## இத்தாலியில்

இத்தாலியில் 25க்கும் மேலான வெளிநாட்டு அமைப்புக்களின் ஆதரவுடன், தமிழர் விடுதலைப் போராட்டத்திற்கு ஆதரவு வேண்டி, நான்கு நாட்களாகச் சர்வதேசக் கலாச்சார விழாவொன்று நடாத்தப்பட்டது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை நசுக்கி, தமிழ் மக்களை அடிமைப்படுத்த சிங்கள அரசு முயற்சி செய்கிறது. தமிழ் மக்களைப் பொறுத்தவரையில், வாழ்வா, சாவா என்ற நிலையில் இனச் சிக்கல் உள்ளது. நிதிப்பங்களிப்பு மூலமும் போராட அனைவரும் இணைவதன் மூலமும் விடுதலைப் புலிகளின் கரங்கள் பலப்படுத்தப்பட்டால் தமிழ் மண்ணும், மக்களும் பாதுகாக்கப்படுவதோடு, விடுதலையையும் அடைந்து விடலாம் என்று விடுதலைப் புலிகளின் அரசியற் பிரிவு விடுத்த அறிக்கை ஒன்று தெரிவிக்கின்றது. வெளிநாடுகளில் நடைபெற்ற ஆர்ப்பாட்டப் பேரணிகள் குறித்து அரசியற் பிரிவு, தனது வாழ்த்துக்களையும், பாராட்டுதலையும் தெரிவித்துள்ளது.

# மாலதி நினைவு....

போராளிகளின் நினைவுகளையும், வீரத்தையும், தமிழீழ எழுச்சியையும் சுமந்து வந்த இந்த நிகழ்வில் 'செலவேற்பு' என்ற புதிய நிகழ்ச்சியும் அறிமுகப்படுத்தப்பட்டது.

நிகழ்ச்சிக்கு வருகை தந்திருந்த மக்கள் தம்மால் இயன்ற நிதியை வழங்கி, விழாவின் செலவை ஏற்றுக் கொண்டனர். இது, நிகழ்ச்சிகளில் மக்கள் உணர்வு பூர்வமாகக் கலந்து கொண்டமையை எடுத்துக் காட்டியது.

மாவீரரான போராளி லெப்ரினன்ட் மரியங்கா அவர்களின் சகோதரி திருமதி. நந்தா செல்வச்சந்திரன் குத்துவிளக்கேற்றி நிகழ்ச்சிகளை ஆரம்பித்து வைத்தார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# "மக்கள் தமது கனவை நனவாக்குவர் என்ற நம்பிக்கையுடனேயே சென்றனர்"

## ■ மாவீரர் இறுதிவணக்க நிகழ்வில் இளம்பரிதி

"இந்த மாவீரர்கள், எதிரியை வீழ்த்துவோம்- விரட்டுவோம் என்ற உறுதியுடன்தான் சென்றார்கள். தாம் அழிய நேரிட்டாலும் மக்கள், சக போராளிகள் தமது கனவை நிறைவேற்றுவார்கள் என்ற நம்பிக்கையுடன் புறப்பட்டார்கள். நிச்சயம் இவர்களின் இலட்சியம் நிறைவேறும்"

இவ்வாறு யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி தெரிவித்தார்.

இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்ற வித்துடல்களுக்கு வீர வணக்கம் செலுத்தும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து பேசும்போது-

"ஒவ்வொரு சாவும்-எமது விடுதலைப் போராட்டத்திற்கு உறுதியையும், வளர்ச்சியையும், உத்வேகத்தையும்தான் தருகின்றது. இன்று குடாநாடு சிறீலங்கா இராணுவத்தின் முற்றுகைக்கு உட்பட்டுள்ளது. இந்தவேளையில் - போராட்டம் வாழ்க்கையாகவும், வாழ்க்கை போராட்டமாகவும் மக்களுக்குத் தோன்றியுள்ளது.

புதிய போர்க் கருவிகளுடன், புதிய போர் யுக்தியுடன் மக்கள் மீதான போரை எதிரி தொடுத்திருக்கின்றான். மக்கள் சொத்துக்களை அழிப்பதன்மூலம், அழுத்தம் கொடுக்கலாம் என திட்டமிடுகிறான். இந்த நோக்கத்தை நாம் முறியடிக்க வேண்டும்" என்றார்.

விடுதலைப் புலிகள் உறுப்பினர் திரு. பாலகுமாரன் கலந்துகொண்டு பேசும்போது,

"நாம் நடந்துபோகும் பயணத்தில் இலக்குத்தான் முக்கியம். வெற்றி-தோல்வி இதற்கு இல்லை. இலட்சியத்திற்காகப் போராடுபவர்களுக்கு வெற்றி-தோல்வி ஏற்படுவதில்லை.

சோகங்கள் ஒரு பின்னடைவாகப் போவதில்லை" என்றார்.

நீதி நிர்வாகப் பொறுப்பாளர் திரு. பரா உரையாற்றும்போது,

"நாம் எமது பலத்தைப் பெருக்குவதன் மூலம் எதிரியின் ஆக்கிரமிப்பை முறியடிக்க முடியும். இந்த மண்ணை மீட்க வேண்டும் என்ற எழுச்சியையும், உற்சாகத்தையும் கொடுக்கும்" என்றார்.

மகளிர் அமைப்பைச் சேர்ந்த செல்வி. மயூரி பேசும்போது-

"மக்களின் ஒத்துழைப்பால் இப்போராட்டம் நிமிர்ந்திருக்கின்றது. இந்த நிலையில் எமது இனத்தை அழிப்பதென எதிரி கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கின்றான். அதை எதிர்கொள்ள நாம் அனைவரும் தயாராகவேண்டும்" என்றார்.


தமிழீழத்தில்
தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின்
பத்தாவது ஆண்டு
நிறைவை முன்னிட்டு

1985 - 1995

இலண்டனில்
கலை விழா

1985 - 1995

❋ சிறுவர் கருத்தரங்கம்
முற்றிலும் சிறுவர்கள் பங்குபற்றும் நிகழ்ச்சி
❋ சச்சரவு
இதுவரை இடம் பெறாத முற்றிலும் புதுமையான இயல் நிகழ்ச்சி
❋ நாடகம்
ஓரங்க நாடகம்
❋ மேலும் கலை நிகழ்ச்சிகள்

காலம்: 11 - 11 - 1995 சனிக்கிழமை, மாலை 6.30 மணி
இடம்: LLOYDS PARK THEATRE
LLOYDS PARK
WINNS TERRACE
WALTHAMSTOW, LONDON E17

TRO, 79, Hoe Street, Walthamstow, London E17.
☎ 0181 - 520 5876 Registered Charity No. 1010029


## பனாட்டு உற்பத்தியை அதிகரிக்க பிரசாரம்

சிங்கள அரசின் பாரிய உணவு நெருக்கடியை ஏற்படுத்தும் திட்டத்தை முறியடிக்கும் செயற்பாட்டின் ஓர் அங்கமாக, தற்கால சூழ்நிலையில் கிடைக்கும் ஒவ்வொரு பனம்பழத்தையும் பயன்படுத்தி பனாட்டு உற்பத்தியை அதிகரிக்குமாறு தமிழீழப் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் கிராமங்கள் தோறும் பிரசாரம் செய்து வருகின்றனர்.

இந்த வகையில் அண்மையில் உடுவில் வட்டத்தில் நடாத்தப்பட்ட பிரசாரத்தையடுத்து, அப்பகுதி மக்கள் இதற்கான முன்னோடி நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

எதிரியின் திட்டமிட்ட பொருண்மிய அழுத்தத்தை முறியடித்து, எமது தேசிய விடுதலைப் போருக்கு வீறுசேர்க்க ஒவ்வொருவரும் எம்நாட்டின் அனைத்து வளங்களையும் உச்சப் பயன்பாட்டுக்குக் கொண்டுவருதல் அவசியமாகிறது.


நோர்வேயில்
மாவீரர் வெற்றிக்கிண்ண
சுற்றுப்போட்டிகள்
1995

◉ கரபந்தாட்டம் ◉ வலைப்பந்தாட்டம்

காலம்: 18 - 11 - 1995, 19.11.95
இடம்: Norges Idretts hogskole
Sogns Vei - 220
Krinsja



விண்ணப்ப முடிவு திகதி : 01 . 11 . 95

மாவீரர்கள்



இவர்கள் காலத்தால் சாகாதவர்கள்
ஆழவேரோடிய ஆலமரங்கள்
எமது வாழ்விற்காய்,இருப்பிற்காய்
தம்மை எரித்துக்கொண்ட தியாகதீபங்கள்
மரணத்தை வென்ற மாவீரர்கள்
இவர்களின் நினைவுகள் அழிவதில்லை
இந்த அழியாத சுவடுகளை எம்மனங்களில்
ஆழப்பதித்துக் கொள்வோம்.

மாவீரர்களின் குடும்பத்தினர், உறவினர்கள், நண்பர்கள் இந்த மாவீரர்களின் நினைவுகளை நெஞ்சிலே சுமக்கும் நினைவுடன் இந்த சுற்றுப்போட்டியை நடாத்துவதில் அல்லது வெற்றிக்கிண்ணங்களை வழங்குவதில் பங்களிப்பு செய்வதாயின் எம்முடன் தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

மேலதிக விபரங்களுக்கு : ☎ 22 19 12 60

ஒழுங்குகள் : தமிழர் ஒருங்கிணைப்புக்குழு



விளம்பரம்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம்

மீன்வளர்ப்பு - தொழில்நுட்பவியல்

தமிழீழத்தின் நன்னீர், உவர்நிலைகளைப் பயன்படுத்தி மீன்வளர்ப்புத் தொழில்துறையை விருத்திசெய்து, அதனூடாக தமிழீழ மக்களின் போசாக்கிற்கும், பொருளாதார மேம்பாட்டிற்கும் வழிகோலும் நடைமுறைத் திட்டங்களை, தமிழீழப்பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் உருவாக்கிச் செயற்படுத்தி வருகின்றது. எனவே இத்துறை சார் அனுபவசாலிகள், தொழில்நுட்பவியலாளர்கள், கல்விமான்கள் ஆகியோரின் உதவி உடனடியாகத் தேவைப்படுகின்றது.

TEEDOR
P.O.BOX 6795
LONDON E6 1SB
U.K.

☎ 0956 314 370 / 0181 - 503 4294
Fax: 0181 - 470 8593.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நெடும் போர்



கொட்டு செங்குருதிக் களத்தினி லங்கே
  கொதித்தெழும் மறவர் தம்மிடையே
கட்டுடல் வீரன் ஒரு தமிழ் நெஞ்சன்
  கடலென அதிர்ந்தொலி செய்வான்!

தமிழர் பொன்னாடைத் தாயக மண்ணைத்
  தரமறுக் கின்றவ னெவனோ...?
இமை நொடிப் போதி லெழுந்திரு தமிழா!
  இன்னுயிர் நமக்கொரு பொருளா?

ஓடுக தானை! ஓடுக பகைவர்
  உலவிடும் திசை வழியெல்லாம்!
தேடுக தமிழர் தேசத்தின் மானம்...
  தெய்வத்தில் ஆணையிட் டெழடா!

பைந்தமிழ் மொழியை எவன் பழித்தாலும்
  பழித்தவன் தலை கொண்டுவாடா!
ஐந்து துண்டாக்கி அடுப்பினில் வைப்போம்!
  அது நமக் குணவாகும் போடா!

கருவினில் அன்னை வளர்த்ததும் இந்தக்
  கைகளைத் தந்ததும் எல்லாம்
செருவினில் வெற்றிக் கொடியுடன் நின்று
  சிரிப்பதற் கன்றோடா தமிழா!

ஆழிபோல் ஆழி அலைபோல் முழங்கி
  ஆடடா... போர்க்களமாடு!
நாழிகை யொன்றில் நாடாள வேண்டும்
  நாமென்று சிங்கம் போலார்த்தான்!

சங்கொன்று களத்தில் முழங்கிற்று வீரர்
  தானையும் முழங்கிற்று கண்டீர்!
பொங்குபோர்க் களத்தில் மாற்றாரும் போந்தார்!
  போரென்று கொட்டிற்று முரசம்!

அதிர்ந்தன திசைகள்! அசைந்தன மலைகள்
  அழிந்தன காடுக ளெல்லாம்!
உதிர்ந்தன கரங்கள்! உடைந்தன தலைகள்!
  உயர்ந்தன பிணமலைக் குவியல்!



உணர்ச்சிக் கவிஞர்:
கா. சி. ஆனந்தன்


T.C.C Via Mariano Stabile - 49, 90139 Palermo, Italy T/F: 091-611 3179
W.T.C.C Lang STR - 206, 8005 Zurich, Swiss. T/F: 01/273-29-38
T.C.G Post Fach - 340251, 51624 Gummersbach - 34, Germany
U.T.O., 211 Katherine Rd, London E6 1BU, UK. Tel: 0181 - 503 4294, Fax: 0181 - 470 8593
T.C.C P.O.Box 1699 Vika, 0110 Oslo -1, Norway T: 022-191260 F: 190114
W.T.C.C. 170-10 Cedarcroft Road, Suite 1-L, Jamaica, New York 11432, U.S.A. T/F: 718-657-9463
L.T.T.E P.O.Box 47, 7400 HERNING DENMARK. Tel/Fax: 97-155299
T.C.C Groot Hertoginnelaan, 2517 BL Den Haag, Nederland Tel: 070-346 1963, F: 384 0683
T.C.C 341 Rue des Pyrenees, 75020 Paris, France Tel: 435 81142, F 435 81191
T.C.C Vissingebacken 11 1TR, 16364 Spanga, Sweden
T.C.C P.O.Box 375, Preston, Victoria 3072, Australia T: 03-470 8441 F: 560 8224


Printed by Observer Group Newspapers

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்